-உமா பாலகுமார்



இரவு நேர வானத்தில் வைரங்களாய் விண்மீன்கள் ஒளிவீச, தார்ச்சாலையின் ஓரத்தில் விளக்குகளாய் மின்மினிகள் ஒளிர்ந்தன.

வானில் நிலவுப்பெண் சிறு பிறையாகத் தனித்திருந்த போது, மேகக் கூட்டம் ஒன்று நிலவை உரச ஆசைப்பட்டு தன் மென் பஞ்சு விரல்களால் மெதுவாகத் தீண்டியது.

சிக்னலுக்காக சாலையில் காத்து நின்ற காரில் அமர்ந்திருந்த யாழினியின் முகத்தில் கவலையின் ரேகைகள்.

யாரோ துரத்துவது போல், வேகமாகக் குறுக்கே ஓடிக் கொண்டிருந்த வாகனங்களின் மேல் பார்வையைப் பதித்திருந்தாலும் எண்ண

அலைகள் கரை உடைத்
விடம் சென்றன.

குளிர்ந்த காற்று சே
இப்போது மருத்துவமன
இருக்கிறாரோ என்ற பத

பக்கத்து வீட்டு
வைத்து விட்டு செலவுச்
ளும் எடுத்து வருவதற்கா
சென்று விட்டுத் திரும்பி

கயல்விழி, இன்பெ
இருப்பதால் அங்கு யாவை
பதில்லை.

யாழினியின் ம

# உன் பார்வை ஒரு வரம்



அலைகள் கரை உடைத்து, தன் தாய் கயல்விழி யிடம் சென்றன.

குளிர்ந்த காற்று சோகமாய் வருடிச் செல்ல இப்போது மருத்துவமனையில் அம்மா எப்படி இருக்கிறாரோ என்ற பதட்டம் மனதில் எழுந்தது.

பக்கத்து வீட்டு மாமியைத் துணைக்கு வைத்து விட்டு செலவுக்குப் பணமும், துணிகளும் எடுத்து வருவதற்காகவே அவள் வீட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறாள்.

கயல்விழி, இன்டென்சிவ் கேர் யூனிட்டில் இருப்பதால் அங்கு யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை.

யாழினியின் மனம் தாயை நினைத்து பெரும் வேதனையைச் சுமந்தது-

அப்பா சிவராமன் இறந்தபிறகு, அவளுக்குப் பெரும் துணையாய் உற்ற தோழியாய் தைரியமளித்த அம்மாவும் படுக்கையில் விழுந்தது, அவளுக்குள் பெரும் பாதிப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தின.

விபத்து எனும் காலன் உயிர் பறித்ததால் போன வருடம் தான் அவள் தந்தை சிவராமன் இறந்திருந்தார்.

அவர் இறந்ததிலிருந்தே கயல்விழியின் உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் போக ஆரம்பிக்க, நேற்று நெஞ்சுவலி அதிகமாகி மருத்துவமனையில் படுத்திருக்கிறார், எந்த நினைவும் இன்றி.

யாழினியின் நினைவுகள் நிகழ்காலத்துக்கு வரவும், கார் மருத்துவமனைக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

மனதில் ஏதோ பாரமாகி இரும்புக் குண்டாய் அழுத்த உள்ளே சென்று பார்த்தபோது, கயல்விழி எந்த மாற்றமுமின்றி மருத்துவக் கருவிகள் புடைசூழ கண்மூடிப் படுத்திருந்தார்.

தங்கள் காரிலேயே பக்கத்து வீட்டு மாமியை வீட்டுக்கு அனுப்பியவள், டிரைவரைக் காலையில் வரும்படி கூறிவிட்டு, தங்களுக்கெனக் கொடுக்கப்பட்டிருந்த அறையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

விதி எனும் சிலம்பை உடைக்க முயலும் கண்ணகியாய் மனம் பெரும் சோகத்தில் தத்தளிக்க, உள்ளே உடைந்த பரல்களின் நீர்த் தெளிப்பாய் கன்ன வாசலில் கண்ணீர்த் துளிகள்.

அந்த நிமிடம் பக்கத்து மரத்திலிருந்து வந்த ஒற்றை ஆந்தையின் அலறல், ஏனோ மனதை மிகவும் பலவீனப்படுத்தியது. யாருமில்லாத் தனிமையைப் பெரிதாய் உணர்த்தியது.

அம்மாவுக்கு ஊரில் எவ்வளவோ சொந்தங்கள் இருந்தும், யாருமில்லாத அனாதை போல் அவர் படுத்திருப்பது மனதில் வலியைத் தந்தது.

அம்மாவின் குடும்பத்தினர் போடிநாயக்கனூருக்கு அருகே ஒரு கிராமத்தில் இருப்பதாக அவர் கூறியிருந்தது நினைவில் கிளர்ந்தது. கயல்விழியின் காதல் திருமணம், அவரைத் தன் குடும்பத்திலிருந்து பிரித்து தனித் தீவாக்கி இருந்தது.

யாழினியின் தந்தை சிவராமன் இறந்தபோது கூட கயல்விழி அவளை விட்டுத்தான் தந்தி கொடுக்கச் சொன்னார். அவள் தன் அம்மாவின் பெயரில் தந்தி அனுப்பி இருந்தாலும் அவர்கள் யாருமே வரவே இல்லை.

யாழினியின் நினைவுகள் நிகழ்காலத்தைத் தொட்டன. இன்று தன் அம்மாவே படுத்த படுக்கையாய், கண்மூடி உணர்வின்றி இருக்கும்போதுதான் ஏன் அவர்களுடைய குடும்பத்துக்கு இந்த விஷயத்தைத் தெரிவிக்கக் கூடாதென்று யாழினிக்குத் தோன்றியது.

அவர்களுடைய முகவரி வீட்டிலிருப்பதால், காலையில் ஒரு தந்தி கொடுத்து விடலாமென்று நினைத்தபடி அப்படியே சாய்ந்து கண்மூடினாள் அவள்.

ஆழ் உறக்க நிலையில் கனவுகளின் ஊர்வலம். அவளும், அப்பாவும் செஸ் விளையாடியது. காலையில் சேர்ந்து வாக்கிங் சென்றது. ப்ளஸ் டூவில் பள்ளியில் முதல் மாணவியாக வந்ததும் இருவருமாக பரிசளித்த ஸ்கூட்டி என்று அவளுக்குள் வரிசையாய் இறந்த கால நிகழ்வுகளின் தொகுப்புகள்.

திடீரென்று யாரோ தன்னை உசுப்பி எழுப்புவது புரிந்தாலும் மனம் விழிக்க மறுத்தது.

அற்புதமான கனவுப் பதிவுகளைக் கலைக்க மனம் ஒப்புக் கொள்ளாததால் சோர்வுடன் விழித்தாள், எதிரே இரவுப் பணியிலிருக்கும் நர்ஸ் பதட்டத்துடன் நின்றிருந்தாள்.

திரும்பிப் பார்த்த போது ஜன்னலில் விடியலின் அறிகுறி தெரிய ஆரம்பித்தது. நிஜத்தின் நிதர்சனம் புரிந்து பதறி எழுந்த யாழினியிடம், ''டாக்டர் உங்களை உடனே பாக்கணும்னு சொன்னார். வாங்கம்மா!'' என்று கூறி அவளை அவசரமாக அழைத்துச் சென்றாள்.

நர்ஸ் ஐ.சி.யூ.விற்குள் அழைத்து சென்றபோது கயல்விழிக்கு இறுதி மூச்சு வந்து கொண்டிருந்தது. சுற்றிலும் நின்றிருந்த டாக்டர்கள் அந்த உடல் கூட்டிலிருந்து உயிர் விடுதலையாவதைத் தடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

யாழினியின் மனதுக்குள் ஏதோ ஒன்று உடைந்து, இது தன் தாயின் இறுதித் துடிப்பென்று புரிந்தது.

துயரம் நிறைந்த அந்த இறுதி நிமிடத்தில் தாயின் அருகில் சென்று ''அம்மா'' என்ற போது, சட்டென்று விழித்தவரின் கண்கள் ஒரு அலைபாய்தலுடன் சுற்றி வந்து அவள் முகத்தில் நின்று அசைவற்றுப் போயின.

விதி செலுத்தும் வினோதப் பயணம், மரணமெனும் மாயப் பிம்பமாகி முடிந்துவிட ஆற்றுவாரின்றி அழ ஆரம்பித்தாள் யாழினி.

தலைமை டாக்டர் அவளிடம் வந்து, ''சாரிம்மா... எங்களால ஆன முயற்சிகளை செஞ்சு பாத்தோம்! உங்க ரிலேடிவ்சுக்கெல்லாம் சொல்லிடுங்க'' என்று ஆறுதலுடன் கூறிவிட்டு கைகளைப் பிடித்து அழுத்தி சமாதானப் படுத்தினார்.

இதயத்தின் சோகம் கண்ணீராய் வழிய தனக்கென்று இனி யாருமே இல்லாத சோகம் அவளை நிலைகுலையச் செய்தது.

பிறகு நடந்த எதுவுமே அவளுடைய நினைவுகளில் ஆழமாகப் பதிய மறுத்தன. டிரைவரை விட்டு இருபக்க உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தந்தி கொடுக்கச் செய்தபோது, மருத்துவமனைக்கு வந்த குடும்ப நண்பர் வேணுகோபாலும், அவர் மகன் பிரகாஷும் மற்ற பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.

பிறகு அவளுடைய நண்பர்களும், அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும், சிவராமனின் நண்பர்களான டாக்டர்களின் வரவும் சேர்ந்து அவளுடைய வீடே நிறைந்திருந்தது.

ஆனால் கயல்விழிக்கு மட்டும் ஒரு வருடத்திற்குப் பிறகு இன்று பூச்சூடும் நித்திரை! மலர் மாலைகள் ஒரு பக்கம் குவிக்கப்பட்டு மரணத்தின் கைப்பிடியில் நிச்சலனமாய் சிரித்துக் கொண்டு கம்பீரமாய் சயனத்திருந்தார் அவர்.

யாழினிக்கு அவரைப் பார்க்க பார்க்கத் தாங்கவில்லை. உயிர்ப்பைத் தொலைத்த உடலும், மீளாத் துயிலிலும் அமைதியைத் தத்தெடுத்த முகமும், இன்னும் சிறிது நேரத்தில் தொலைந்து போகப் போகும் நிஜம் புரிந்தது.

மனதிலிருந்த தைரியமெல்லாம் மாயமாகி விட, உடைந்து அழுது கொண்டிருந்தவளை யாராலும் சமாதானப்படுத்த முடியவில்லை.

இனி தனக்கென்று யாருமில்லாத ஒரு நிலையும், தன் ஒரே துணையானதாய் பறிபோன துக்கமும் சேர்ந்து உருக்குலைந்து போயிருந்தாள் யாழினி.

**2**

**க**யல்விழி இறந்த செய்தியைத் தாங்கி வந்திருந்த தந்தி, அவள் தந்தை ரத்தினவேலுவின் மனதில் பெரும் புயலை உருவாக்கி இருந்தது.

அவருடைய கோபமும், பிடிவாதமும், வீம்பும், அந்த ஒரு தந்தியில் உருத்தெரியாமல் போயிருந்தது. கண்கள் சிவந்து விட மனம் உடைந்து போனவர், தன் குடும்பத்தினருடன் உடனே சென்னைக்குக் கிளம்பினார்.

வேனில் வரும்போதே விழியோரங்கள் கசிந்து விட, கடந்த கால நினைவுகளில் ஆழ்ந்து போன ரத்தினவேலுவின் மனதில், பழைய ஞாபகங்கள் சரம் கோர்க்க, வெளியே மழை பூமியை முத்தமிட ஆரம்பித்தது.

அப்போது பள்ளிப் படிப்பை முடித்து வீட்டிலிருந்த கயல்விழி, கோவிலுக்குச் செல்லும் போது, அந்த கிராமத்திற்கு கண் சிகிச்சை முகாமுக்கு வந்திருந்த டாக்டர் சிவராமனைப் பார்த்து, காதல் கொண்டாள்.

அந்த ஊரிலேயே பெரிய பண்ணையாராக இருந்த ரத்தினவேலுவுக்கு, மகள் வேறு ஜாதிப் பையனை விரும்பியது, தன்னுடைய கௌரவத்திற்கு விழுந்த அடியாகவேப் பட்டது.

உடனே தன்னுடைய பெரிய மகன் முத்துவேலின் மைத்துனனை, மாப்பிள்ளையாக முடிவு செய்து, சம்பந்தியிடம் பேசி நிச்சயத்தையும் நடத்தி விட்டார்.

கயல்விழியின் அண்ணன்கள் முத்துவேலும், மாணிக்கவேலும் கூட, அவளுடைய காதலுக்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அது அவர்களுக்கு ஒரு கவுரவப் பிரச்சினையாகவே ஆகிவிட்டது.

அந்த வாரமே தன் குடும்பத்தை எதிர்த்துக் கொண்டு தைரியமாக அம்மன் கோவிலில் சிவராமனை ரகசியத் திருமணம் செய்து கொண்டாள் கயல்விழி.

கழுத்தில் மாலையுடன் இருவரும் கயலின் வீட்டிற்குச் சென்றபோது, அங்கு யாருமே அவர்களை அந்த வீட்டினுள் அனுமதிக்கவில்லை.

தந்தையும் சகோதரர்களும், அவளைத் தங்கள் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று கூறி, வெளியே போகச் சொல்லியபோது, பதறியபடி வந்த அவளுடைய அம்மா மங்கையற்கரசியையும், தான் செல்லமாய் வளர்த்த அண்ணனின் மகன் இளமாறனையுமே, கடைசியாக அவள் சந்தித்தாள்.

ஆனால், இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல், அன்றிரவே மங்கையற்கரசி நெஞ்சுவலி வந்து, இறந்து போனார்.

அன்று அவர் முகத்தைப் பார்க்கக்கூட கயல்விழியை, அவர்கள் வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. அழுதுகொண்டே புதிதாய் மணந்து கொண்ட தன் கணவர் சிவராமனுடன் சென்னைக்கு வந்தவள், பிறகு இன்று வரை தங்கள் கிராமத்திற்கு வந்ததில்லை என்ற நினைவில், ரத்தினவேலுவின் இதயம் மவுனமாய் கண்ணீர் வடித்தது.

இன்று திரும்பிவர முடியாத இடத்துக்கு அவள் சென்று விட்டதறிந்து மனம் விம்மியது. நினைவுகள் நிகழ்காலத்தைத் தொட, ஏதோ ஒரு ஹோட்டலில் சாப்பிடுவதற்காக வேனை நிறுத்தி இருப்பது தெரிந்தது.

அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த மாறன், ''தாத்தா... வாங்க! காலையில் இருந்து நீங்க ஒண்ணுமே சாப்பிடலை. கொஞ்சமா ஏதாவது சாப்பிடுங்க'' என்றான்.

''வேணாம்ப்பா! என் மகளை முழுசா முழுங்கி ஏப்பம் விட்டுட்டுக் கல்லு மாதிரி செரிக்காம உட்கார்ந்திருக்கேன். நீங்கள்லாம் போய் சாப்பிடுங்க'' என்று கூறி அழ ஆரம்பித்தார் அவர்.

அவரைச் சமாதானப்படுத்திவிட்டு எல்லோரும் சென்றாலும், மாறன் தனக்கும் தாத்தாவுக்கும் ஏதாவது பார்சல் வாங்கி வரச் சொல்லி விட்டான்.

அவர் மனதிலும் பழைய நினைவுகளின் ஆட்சி தன்னை சிறு வயதில் அன்பாய் வளர்த்த அத்தையின் நினைவுகள், கலக்கமாய் இதயம்

தீண்டின.

ஆனால், உடனே பாட்டியின் இழப்பும், தனக்குப் பிடித்த இருவரையுமே ஒரே நேரத்தில் இழந்து, புரியாமல் அழுது நின்ற தன் தவிப்பும், இன்று நடந்ததுபோல் சோக மேகமாய் மனதில் சூழ்ந்து கொண்டன.

அவர்கள் கயல்விழியின் வீட்டைச் சென்றடையும்போது, மாலையாகி இருந்தது. தன் மகளின் வீட்டில், அழுகை மட்டுமே துணையாக அமர்ந்திருந்த பேத்தி யாழினியைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார் ரத்தினவேலு.

அவளுடைய மாமாக்கள் இவரும், மாமிகளும் அவளுக்கு ஆறுதல் கூறினர். கிராமத்திலிருந்து மற்ற உறவினர்களும் வந்து சேர்ந்த பிறகு, சிவராமனின் நண்பர்களும், உறவும் சேர்ந்து கூட்டம் கட்டுக்கடங்காமல், கயல்விழியை இறுதியாய் வழியனுப்பி வைத்தனர்.

யாழினிக்குத் தன் தாத்தாவின் குடும்பத்தினரைப் பார்த்தபோது, இவர்கள் அனைவரும் தன் தாய் உயிருடன் இருந்தபோது வந்திருக்கக்கூடாதா என்று பெரும் ஏக்கம் ஏற்பட்டது. அம்மா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார் என்ற எண்ணத்தில் கண்ணீர் உடைப்பெடுத்தது.

அதுவரை அவளுடைய நண்பர்கள் அனைவரும் உடனிருந்து விட்டுப் பிரிந்து செல்ல, மனம் வெறுமையான பாலை நிலமாய் மாறியது.

அன்று முழுவதுமே அவள் சாப்பிடவில்லை. யாழினி தன்னைத் தேற்றிக் கொள்ள வெகு நேரம் ஆனது. சில தோழிகள் குளித்துவிட்டுத் திரும்பி வந்து அவளுக்குத் துணையிருந்தனர்.

மறுநாள் எல்லா காரியமும் முடிந்த பிறகு, வந்த உறவினர்களும் நண்பர்கள் அனைவரும் கிளம்பிவிட, ரத்தினவேலுவின் குடும்பத்தினரும், சிவராமனின் சகோதரியும் மட்டுமே மீதமிருந்தனர்.

ரத்தினவேலு எல்லோரையும் அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பெரிய மாமா முத்துவையும், சின்ன மாமா மாணிக்கத்தையும், பெரிய பேரன் என்று இளமாறனையும், பேத்தியின் மாப்பிள்ளை என்று வளவனையும் முதலில் அறிமுகம் செய்தார்.

பிறகு ''இது தாம்மா உங்க பெரிய மாமி வடிவு... சின்ன மாமி அல்லி! இவங்க ரெண்டு பேரும் உன் சின்ன மாமா பசங்க இளங்குமரனும், மங்கையும்!'' என்றார் அவர்.

அனைவருக்கும் மெலிதான ஒரு புன்னகையை பதிலாகத் தந்த யாழினி, ஏனோ இளமாறன் மீட்டும் தன்னை ஆராயும் விழிகளுடன் கோபமாய் நோக்குவதைக் கண்டாள்.

ஆனால் அதைப் பொருட்படுத்தாது திரும்பி, தன் வயதே இருக்கும் மங்கையிடம் பேச ஆரம்பித்தபோது, தனக்கு இத்தனை உறவினர்களா என்ற பிரமிப்பு வந்தது.

அன்று மாலையே, மற்றவர்கள் அனைவரும் கிளம்பிவிட, தாத்தாவும், வடிவு மாமியும், குமரனும் மட்டுமே தங்கிவிட்டனர்.

இதுவரை கயல்விழிக்கு நடந்த அத்தனை இறுதிச்சடங்குகளையும், ரத்தினமே முன்னின்று தைரியமாகச் செய்தார். ஆனாலும், அவருடைய சோகமும் தளர்ச்சியும் யாழினிக்குப் புரிந்தன.

ஒரு நாள் எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது அவர், ''யாழினிம்மா... கொடுமையில பெருங்கொடுமை எது தெரியுமா? புத்திர சோகம்தான்! அத நான் இருபது வருஷத்துக்கு முன்னாடியே அனுபவிச்சிட்டேன்...

உங்க அம்மா என்னை விட்டுப் பிரிஞ்சி வந்தா பாரு... அன்னிக்கே! உங்க பாட்டியும் என்னை விட்டுட்டுப் போயிட்டா... எனக்கு அப்பா துணையா இருந்தது யார் தெரியுமா? என் பேரன் இளமாறன் தான்! அப்ப அவனுக்கு அஞ்சு வயசிருக்கும்! அத்தை... அத்தைன்னு கயலோடவே சுத்திட்டு இருப்பான்'' என்று கூறி நிறுத்தியவர், பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிட, கண்கள் தூரப் பார்வை பார்த்தன.

## ஜீரண சக்திக்கு அகத்திக்கீரை

**அகத்திக்கீரை விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டதால் இதனை கிருமிநாசினி என்று சொல்வதுண்டு. இந்த கீரை குளிர்ச்சி தருவதுடன் ஜீரணசக்தியை அதிகரிக்கும். பித்தத்தை தணிக்கும். பல், எலும்பை உறுதிப்படுத்தும். வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும்.**

**பீடி, சிகரெட் குடிப்பவர்கள் மற்றும் புகையிலை போடுபவர்கள் இந்த கீரையை அடிக்கடி பயன்படுத்த வேண்**

ஒரு பெருமூச்சுடன் திரும்பி, "பாட்டின்னா, அவனுக்கு உயிர்! அவனுக்கு ரொம்பப் புடிச்ச ரெண்டு பேருமே தன்னை விட்டுட்டுப் போனவுடனே, என்கிட்ட அவன் ரொம்ப ஒட்டிக்கிட்டான்.

உங்கம்மாதான் அவனை வளர்த்ததே! கயல் எனக்கு ஒரே பொண்ணுங்கறதாலே அவளை ஒரு மகாராணி மாதிரி வளர்த்தேன். உன்னைப் பாத்தா, இருபது வருஷத்துக்கு முன்னாடி அவளைப் பாத்த மாதிரியே இருக்கு! ஆனா, நீ உங்க அப்பாவாட்டம் நல்ல உயரம்" என்றபடி அவளுடைய தலையைப் பாசத்துடன் வருடினார்.

"தாத்தா... நீங்க ஏன் அம்மாவைக் கடைசி வரைக்கும் மன்னிக்காமலே இருந்திட்டீங்க? பாவம் அவங்க... என்கிட்டே உங்களைப் பத்தியெல்லாம் கதை கதையாய் சொல்வாங்க" என்றாள் யாழினி குறையாக.

"ஹூம்... நான் நிச்சயம் பண்ணின கல்யாணத்தை மீறி உங்கம்மா நடத்துகிட்டா... அதனாலே நான் ரொம்ப அவமானப்பட்டேன். உங்க பாட்டியும் உடனே செத்துப் போயிட்டாளா... என் வீம்பு இன்னும் அதிகமாயிடுச்சி...

அதெல்லாம் ஒரு பிடிவாதம்தான்! ஆனா, என் பொண்ணு இறந்துட்டான்னு தெரிஞ்சவுடனே எல்லாமே போயிடுச்சி... அவதான் எனக்கு ஒரு குட்டி கயலைப் பரிசாகக் கொடுத்துட்டுப் போயிருக்காளோன்னு இப்ப என் மனசைத் தேத்திக்கிறேன். அவளுக்குச் செய்யாததெல்லாம் என் செல்லப் பேத்திக்குத்தான் செய்யப் போறேன். கயலுக்குன்னு செஞ்சு வச்ச நகை எல்லாம் கூட அப்படியே இருக்குடா!" என்று கூறி, சோர்வாகச் சிரித்தார் ரத்தினம்.

இருவருக்கும் டிபன், காபி கொடுத்து விட்டு, வடிவு தானும் எடுத்து வந்து அவளருகில் அமர்ந்து கொண்டார். ஊரிலிருந்து சமையலுக்கென்று ஒரு பெண் வந்திருந்தாள்.

யாழினியை வேளா வேளைக்குச் சாப்பிட வைக்கும் பொறுப்பை வடிவு ஏற்றுக் கொள்ள, தாத்தாவும் சில சமயங்களில் அவரோடு சேர்ந்து கொண்டார்.

குமரனுக்கு வெளிவேலைகளே சரியாக இருந்தன. பதினாறாம் நாள் காரியத்துக்குப் பத்திரிகை அடிக்க, வீட்டுக்குப் பெயிண்ட் அடிக்க என்று, பல வேலைகளுக்கு அலைந்து கொண்டிருந்தான்.

முதலில் யாழினியிடமிருந்து ஒதுங்கி இருந்தவன், பிறகு பாசத்துடன் நல்ல தோழமையோடு பழக ஆரம்பித்தான்.

இத்தகைய சுற்றம் கிடைப்பதற்கு, அம்மா என்ன தவம் செய்தாரோ என்று தோன்றியவுடனே, அதைப் பிரிவதற்கு காதலெனும் ஆயுதம் பலமாகச் செயல்பட்டிருப்பது புரிந்தது.

ஆனால் சிவராமனும் கயல்விழியும் கடைசி வரை மனமொத்த தம்பதிகளாகவே வாழ்ந்தனர் என்ற பெருமிதம், மனதிற்குள் வந்தது.

அதற்குப்பிறகு, மாப்பிள்ளையையும் பெண்ணையும் பற்றி அடிக்கடி யாழினியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார் ரத்தினவேலு.

யாழினி, தன் அப்பா, அம்மாவைப் பற்றிப் பெருமையாகக் கூறுவதை எல்லாம், கண்களில் கண்ணீருடன் கேட்டுக் கொண்டிருப்பார்.

இவ்வளவு நாட்களைத்தான் இழந்ததும், அதனால் பெற்ற வலிகளும் மனதில் சரம் கோர்த்து அவரை பலவீனப்படுத்தும்.



டும். சாம்பார், குழம்பில் போட்டோ அல்லது பொரியல் செய்தோ சாப்பிடலாம். இதனால் உடலில் உள்ள நச்சுத் தன்மை போகும்.

ஆனால் எல்லாவற்றையும் மறந்து, பேத்தியின் முழுமையான அன்பில், தன் வீம்பையும் பிடிவாதத்தையும் தொலைத்துக் கொண்டிருந்தார் அவர்.

முன்பு, ஒரு மரணம் கூடத் தன்னைப் பாதிக்காத அளவு, தன் மனதுதான் மரத்துப் போயிருந்ததா... இல்லை தன்னுள் மனிதநேயம் இறந்து போயிருந்ததா? என்ற கேள்வி அவர் முன்னால் பூதாகரமாக எழுந்து நின்று, சிவராமனின் இறப்பிற்கு வரவில்லையே என்ற குற்றவுணர்வு அவரை வாட்ட ஆரம்பித்திருந்தது.

3

**யா**ருக்கும் காத்திராமல், எவர் சோகமும் குறையாமல், காலம் தன் போக்கில் செல்ல, கயல்விழியின் பதினாறாம் நாள் காரியமும் வந்தது.

ஊரிலிருந்து எல்லோரும் வந்திருந்தனர். தாத்தாதான் முன்னின்று எல்லா காரியங்களையும் செய்தார். மறுநாள் எல்லோரும் கிளம்பும்போது, ரத்தினம் அவளிடம் தனியாகப் பேசினார்.

''யாழினி! நான் ஒரு யோசனை சொல்றேம்மா... இங்கே முப்பதாம் நாள் பூஜை முடிச்சட்டு, நாம எல்லோரும் நம்ம ஊருக்குப் போயிடலாம். உனக்கும்தான் பட்டப்படிப்பு முடிஞ்சிடுச்சே... இந்த வீட்டை வாடகைக்கு விட்டுட்டு, நம்ம ஊருக்கே போயிடுவோம்!'' என்றார் மெல்லிய குரலில்.

அதைப் பற்றி யாழினியும் யோசிக்க ஆரம்பித்தாள். தனக்கென யாரும் இல்லாது இந்த வீட்டில் தனியாக இருக்கவும் பிடிக்கவில்லை. அப்பாவின் தம்பியும், அக்காவும் அவளைத் தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தாலும், ஏனோ அவர்களிடம் ஒட்டுதல் வர மறுத்தது.

தாத்தாவும் புதியவர்தான் என்றாலும் ஏனோ மனம் அவரிடம் பாசமாக ஒட்டிக் கொண்டது. மெதுவாக, ''யோசிச்சு சொல்றேன் தாத்தா'' என்றாள் யாழினி.

''என் பேத்தி என்னை மாதிரியே புத்திசாலி! நல்ல முடிவுதான் எடுப்பா...'' என்று அவர் கூறியபோது புன்னகைத்தாலும் பிறகு யோசித்ததில் யாழினிக்கும் தாத்தா கூறுவது சரியே என்று தோன்றியது.

பதினைந்து நாட்கள் வேகமாக ஓடிச் சென்றன. இறந்தவருக்கு முப்பது கும்பிட்டுவிட்டு, மறுநாள் அவர்கள் அனைவரும் ஒரு வேனில் கிளம்பினர்.

பெரிய மாமா மட்டும் அவர்களை அழைத்துப் போக வந்திருந்தார்.

யாழினி தன் முடிவைக் கூறியவுடன், மகிழ்ச்சியுடன் கண்கலங்கிய ரத்தினவேலு, ''நான் என் பொண்ணுக்குச் செய்யாததை எல்லாம் உனக்கு ஆசை தீர செஞ்சு பாக்கணும்டா செல்லம்'' என்றார் ஆர்வமாக.

குமரன் மட்டும், வேலை விஷயமாக அங்கேயே தங்கி விட்டான். வீட்டை, அப்பாவின் நண்பர் வேணுகோபாலின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு, எல்லா சாமான்களையும் மாடி ரூமில் போட்டுப் பூட்டினார்கள்.

அம்மாவின் பட்டுப் புடவைகள் தவிர, மற்ற துணிகளை எல்லாம் அனாதை ஆசிரமத்துக்கு எடுத்துச் சென்று, கொடுத்து விட்டு வந்தாள் யாழினி. நண்பர்களிடம் எல்லாம் சென்று சொல்லிக் கொண்டு கிளம்பும்போது, வேணுகோபாலும் அவர் மகன் பிரகாஷும் அவளை வழி அனுப்ப வந்திருந்தனர்.

தன் உடைமைகளை எல்லாம் எடுத்து வைத்தவள், வங்கியிலிருந்து பணத்தையும் மறக்காமல் எடுத்து வந்தாள். பிறகு, வீட்டைப் பிரிந்து செல்லும்போது, கண்களில் கண்ணீர் மல்கியது யாழினிக்கு.

மனம் முழுவதும் பாரமாக இருந்தது. அவளை அப்படியே, தன் தோளில் ஆதரவுடன் சாய்த்துக் கொண்டார் ரத்தினம். அவருக்கு, யாழினியின் மனதும் புரிந்தது.

ஊருக்குச் செல்லும் வழியில், ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, சிறிதுநேரம் ஓய்வு எடுத்த பிறகு கிளம்பினார்கள். அவர்களுடைய சொந்த கிராமத்தை அடையும்போது, மாலையாகி விட்டது.

அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வழியே மிகவும் அழகாக இருந்தது. எங்கும் நிறைந்த பசுமையும், சுத்தமான காற்றும், புதுமையான ஒரு சூழலையும், இது தன்னுடைய தாய்நிலமென்ற பெருமிதத்தையும் அறிமுகப்படுத்தின.

அவர்களின் வீடு, சுற்றிலும் சூழ்ந்த தோப்பு நடுவே, சிறிய அரண்மனை போல் அழகாகக் காட்சியளித்தது. பின்புறம், வயல்வெளி பெரிதாய் விரிந்து பரந்து தெரிய அந்த ஊரிலேயே பெரிய வீடாக, இரண்டு அடுக்கில், மேலே கேரள ஓடுகள் வேய்ந்து, புதிதாக வெள்ளை அடித்த தோற்றத்துடன் கம்பீரமாக அமைந்து இருந்தது.

இது தன் அம்மாவின் வீடு என்ற பெருமை, யாழினியின் மனதில் வந்தது. தோளைப் பிடித்து அணைத்தபடி அவளை வீட்டின் உள்ளே அழைத்துச் சென்ற ரத்தினவேலு,

எதிர்ப்பட்ட காரியக்காரரிடம், "என் பேத்தியப் பாத்தியா? நம்ம வீட்டுக்குப் புதுசா ஒரு ராஜகுமாரி வந்திருக்கா பாரு" என்றார் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன்!

தாத்தாவின் வீட்டில் எல்லோரும் அவளை அன்புடன் வரவேற்றனர். மங்கையும் திருமணமாகி அதே ஊரில் இருப்பதால், அவளும் வந்திருந்தாள். அவள் யாழினியின் கையைப் பிடித்து அவளுக்கென்று கொடுக்கப்பட்ட அறைக்கு வாஞ்சையுடன் அழைத்துச் சென்றாள்.

பழைய காலக் கட்டிலும், மர பீரோவும், ட்ரெஸ்ஸிங் டேபிளும் புதிதாக வர்ணம் பூசப்பட்டுப் பளபளத்தன. அவளுடைய அறை மிகவும் நேர்த்தியான அழகுடன் இருந்தது.

தன் பொருட்கள் எல்லாம் அங்கு கொண்டு வந்து அடுக்கப்பட்டிருப்பதை யாழினி கவனித்தாள். அவளுடைய சென்னை வீட்டில் பாதி அளவு இருந்தது, அந்த வீட்டு வரவேற்பறை மட்டுமே!

மங்கை அவளைப் பார்த்து, "யாழினி! நீ ரொம்ப அழகு! அத்தை இறந்தப்போ வந்ததுனால, சொல்ல என்னவோ போல இருந்தது... அதான் இப்ப சொல்றேன்" என்று கூறியவள், தோள் வரை விரிந்து படர்ந்த அவள் முடியைப் பார்த்து ரசித்தாள்.

"எனக்குக் கூட, தலை முடியை இப்படி வெட்டிக்கணும்னு ஆசைதான். ஆனா அவர் திட்டுவாரு. உன்னை மாதிரி சுரிதார் போடவும் ஆசைதான்... என் மாமியாருக்குப் புடிக்காது... கல்யாணம் ஆனாலே, சுதந்திரமெல்லாம் போயிடும் யாழினி" என்றாள் சோகமாக.

உடனே யாழினி "எனக்கும் நீளமான முடி பிடிக்கும். விட்டா வளர்ந்துடும்... ஆனா காலேஜ் போறப்போ, இதுதான் வசதி! அதனால்தான் வெட்டி விட்டுடுவேன்.... ஆமா, இங்க யாருக்கும் சுரிதார் போட்டா பிடிக்காதா? தாத்தா என்னை ஒண்ணுமே சொல்லலையே?" என்றாள் கேள்வியாக.

"தாத்தாவுக்கு நீ செல்லப் பேத்தி. உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டார். என்னை, முன்னாடி எல்லாம் சுரிதார் போடக்கூடாதுன்னு ரொம்பத் திட்டுவாரு. தாவணிதான் போடணும்னு சொல்லுவாரு."

"நீ ரொம்பக் கொடுத்து வைச்சவ மங்கை! உரிமை இருக்கிற இடத்துலதான் கோபமும் வரும். உன் மேல உரிமையும் பாசமும் தாத்தாவுக்கு அதிகமா இருந்ததாலதான், உன்னை அப்படிச் சொல்லியிருக்கார். இதே பார்! என்னை ஒண்ணுமே சொல்லலை."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை... தாத்தாவுக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும். நீ பட்டணத்துல வளர்ந்தவ...! அதான் ஒண்ணுமே சொல்லலை! யாழினி நீ இதையே போட்டுக்கோ. உனக்கு ரொம்ப அழகா இருக்கு" அவள் வெகுளியாகக் கூறிய போது அறைக்குள் வந்த தாத்தா, தன் பின்னால் வந்த இளமாறனை, அழைத்து வந்து அவளிடம் அறிமுகம் செய்தார்.

"யாழினி! இவன்தாம்மா என் செல்லப்பேரன் மாறன்! ஊரிலே பாத்திருப்பே... ஆனா ஞாபகம் இருந்திருக்காது" என்றார் தாத்தா.

மெதுவாக எழுந்து நின்றவளுக்கு, அவனுடைய தோற்றமும் பார்வையும் தர்மசங்கடமாய்... மனதிற்குள் திடீரென்று, புதிதாய் ஒரு பயச்சிறகு முளைத்துத் தடதடத்தது.

வாழ்க்கை என்பதில், இனிமை மட்டுமில்லை... சோகங்களும் இணைந்திருக்கும் என்பது புரிந்தது.

அவன் பார்வையே, தன்னை அவனுக்கு ஏனோ பிடிக்கவில்லை என்ற உணர்வை, அவளுக்குள் வரவழைத்தன.

தன்னையே சுற்றி, பாவாடைக்குள் காற்றைப் பிடித்து அமர்ந்தபிறகு, அது அமிழ்ந்ததும் மனதில் வருகின்ற சிறு சோக ஊற்று மனதிற்குள் மெல்லப் பீறிட்டது.

## 4

மாறன் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அவன் பார்வையிலேயே ஒரு வித அலட்சியம் தெரிந்தது. நல்ல உயரத்தில், ஊடுருவும் விழிகளுடன் மாநிறமாக முகம் தீர்க்கத்துடனிருக்க கம்பீரமாக இருந்தான்.

மாறன் என்ற பெயர் மிகவும் பொருத்தமாக இருந்தது அவனுக்கு.

யாழினியும் அவனை அளவெடுத்தாற் போல் நோக்கிவிட்டு "வணக்கம்!" என்றாள் மெதுவாக.

பதிலுக்கு, மெதுவாக தலையசைத்து விட்டு, "இங்கு உனக்கு எல்லாம் வசதியா இருக்கா? ஏதாவது வேணும்னா சொல்லு... தாத்தா உடனே செஞ்சிடுவாரு" என்று கூறியவன், "ஏன்மா, வந்த அன்னிக்கே உன்னை இந்த வீட்டு ராஜகுமாரி ஆக்கிட்டாரே" என்றான் குத்தலாக.

"பேராண்டி! பாத்தியா? உன் கிண்டலை ஆரம்பிச்சிட்டியா? என் பேத்தியப் பத்திரமா பார்த்துக்கற பொறுப்பை, உன்கிட்டதான் ஒப்ப

டைக்கலாம்னு பார்த்தா, என்னையே வம்பிழுக்கிறியா?'' என்றார் தாத்தா சிரித்துக் கொண்டே.

அவருக்கு பதிலாக ஒன்றும் கூறாமல், வெளியே சென்ற மாறனையே பார்த்துக் கொண்டு இருந்த யாழினி, மங்கையிடம் திரும்பி, ''உங்க பெரியண்ணன் ஏன் எப்பவுமே கோபமாவே இருக்காரு. வீட்டுக்கு வர்றவங்க கிட்ட கூட அப்படித்தான் இருப்பாரா?'' என்றாள்.

உடனே மங்கை, ''மாறன் அண்ணா ரொம்ப நல்லவரு யாழினி... ஆனா பிடிவாதக்காரரு... கோபம் ரொம்ப வரும்! சமாளிக்கவே முடியாது.... தாத்தாவுக்கு அப்புறம், வீட்டில நாங்க எல்லோருமே பயப்படுறது பெரிய அண்ணனுக்குத்தான்! அப்பா, பெரியப்பா எல்லாருமே அண்ணன்கிட்ட கேக்காம எதுவுமே செய்ய மாட்டாங்க. அம்மாவுக்கும், பெரியம்மாவுக்கும் அண்ணன்தான் இந்த வீட்டுக்கு ராஜா மாதிரி!'' என்றாள்.

''பாவம் ராணி இல்லாத தனிக் காட்டு ராஜா போல இருக்கு. அதான் ரொம்பத் துள்றாரோ...?'' யாழினி குறும்புடன் கேட்டாள்.

அவளுடைய கேள்வியை கேட்டுச் சிரித்த மங்கை, ''நீ இங்கேதானே இருக்கப்போறே! அண்ணனை நீயே புரிஞ்சிப்பே! அப்புறம், எங்க வீட்டுக்கு நீ அடிக்கடி வாயேன் யாழினி. என்னால இங்கு தினமும் வரமுடியாது. அப்படியே சும்மா நடந்து வர மாதிரி நீ அங்க வந்தா, எனக்கும் பொழுது போகும் ப்ளீஸ்!'' என்றாள் ஆவலுடன்.

''உங்க வீடு எங்கேன்னு ஒரு நாள் பாத்துட்டேன்னா, அப்புறம் தினமும் நானே வந்துடுவேன் மங்கை. சாயந்திரம் எனக்கும் பொழுது போன மாதிரி இருக்கும்... அப்பாடா! இந்த கிராமத்துல, எப்படி இருக்கப் போறோமோன்னு நினைச்சேன். நீ என்னோட ஏஜ் குரூப்பாகவே இருக்கிறதால, இப்பப் பிரச்சினை இல்லை.''

''மங்கை! ஏன் நீ டிகிரி படிக்கறதுக்கு முன்னாடியே உனக்கு கல்யாணம் பண்ணிட்டாங்க?'' யாழினியின் குரலில் ஆர்வமிருந்தது.

''கயல்விழி அத்தை காதலிச்சி வீட்டை விட்டுப் போனதுனால, எனக்குப் பதினேழு வயசிலேயே கல்யாணம் பண்ணிட்டாங்க. இப்ப ரெண்டு வருஷம் ஆகுது'' என்ற மங்கையின் முகத்தில் சிறு சோகம் தெரிந்தது.

பிறகு ஒரு பெருமூச்சுடன் ''யாழினி, எனக்கு குழந்தை இல்லியான்னு நீயும் கேட்டுடாதே... ஊரே கேட்டுவிட்டது'' என்று கூறிவிட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

யாழினி பரிவுடன் அவளுடைய முகத்தை நிமிர்த்திய போது, அவளுடைய கண்கள் கலங்கி, இரு சோக அரும்புகள் மொட்டு விட்டிருந்தன.

''நீ ஏன் கவலைப்படுறே மங்கை? அழக்கூடாது! நிச்சயமா உனக்கு குழந்தை பிறக்கும்... ஊரிலே இருக்கறவங்க ஆயிரம் சொல்வாங்க... அதெல்லாம் ஒரு பெரிய விஷயமா நினைக்காதே!

நீயும் அண்ணனும் சந்தோஷமா கொஞ்ச நாள் ஜாலியா இருங்க... கல்யாணமாகி ரெண்டு வருஷம் தானே ஆகுது! நீ என்ன கிழவியா ஆயிட்டியா? இல்லை வளவன் அண்ணாதான் தாத்தாவாயிட்டாரா?'' என்றாள் யாழினி சூழ்நிலையை இதமாக்கும் குரலில்.

ஆனால் அவள் ''கடவுள்கிட்ட தினமும் கேட்கிறேன் யாழினி... என்னைப் போல நீயும் ஒரு பொண்ணா பிறந்து மழலைக்கு ஏங்கி மன

பொன்னாங்காணி எனப்படும் பொன்னாங்கண்ணி உடலை பொன்னாக்கும் என்று சித்தர்கள் குறிப்பிட்டு உள்ளனர். அந்த அளவுக்கு இதில் சத்து நிறைந்து உள்ளது. பொன்னாங்கண்ணி கீரையை துவரம்பருப்பு மற்றும் சிறிது நெய் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தால் போதும்

## மேனி அழகுக்கு பொன்னாங்கண்ணி!



மெலிந்த உடல் குண்டாகி பளபளப்புடன் காணப்படும். இதேபோல் பொன்னாங்கண்ணி கீரையுடன் துவரம்பருப்பு, மிளகு சேர்த்து சமைத்து சாப்பிட்டால் படிப்படியாக உடல் எடை அதிகரிக்கும்.

மூலநோய், கண் சம்பந்தமான நோய்களுக்கும் பொன்னாங்கண்ணி சிறந்த மருந்து ஆகும். உடலுக்கு குளிர்ச்சி தருவதுடன் கை, கால் எரிச்சல், வலியை குணப்படுத்தும் ஆற்றலும் கொண்டது.

சாவ ஊனமானா, அப்பத் தெரியும் என்னோட மன நெகிழ்ச்சியைன்னு... ஆனா அவர் காதுல வாங்கிக்கறதே இல்லை! எல்லாரையும் பொருத்தவரைக்கும், கடவுள் பேசினதில்லை. ஆனா என்னைப் பொருத்தவரைக்கும் அவர் கேட்கிறதே இல்லை!'' என்று சோகமாகக் கூறியபோது மனம் வலித்தது யாழினிக்கு.

ஏனோ அவள் சோகத்தை உடனே துடைக்க வேண்டும் போல் ஒரு தவிப்பு வந்தது. அவள் தோளைப் பிடித்து அழுத்தி, மென்மையாக அவளைச் சமாதானம் செய்தாள் யாழினி.

உடனே இறைவனிடம் மனதிற்குள் வேண்டிக் கொண்டாள். 'ஒரு வாசல் மூடி மறுவாசல் திறந்து வைப்பேன் என்பாயே! மங்கைக்கு மூச்சு முட்டுகிறது காற்றுக் குழந்தையைத் தேடி...! என்று திறக்கப் போகிறாய் மறுவாசலை?' என்று.

ஜன்னல் வழியே பார்த்தபோது எதிரே பரந்து விரிந்த குல்மொஹர் மரம் தெரிந்தது.

'அழகிய மரம்... நிழல் மட்டும் தரும்... உண்ணக் காய் தராது, கனியாது... மங்கையின் வாழ்க்கை மாதிரி! மலர்கள் மட்டுமே சிறகு விரித்தாடும்... அவளுடைய மனம் மாதிரி!' என்று தோன்றவும் நிமிர்ந்தவளின் கண்களில் வியப்பின் சாயல்!

மங்கை லேசாகப் புன்னகைத்தாள். யாழினியின் ஆறுதலால் அவள் நெஞ்சம் சோகத்தைத் தற்காலிகமாக தள்ளுபடி செய்தது.

அந்த நேரத்தில், அவளுடைய சோகச் சுமைகளை இறக்கி வைக்கும் சரணாலயமாக மாறினாள் யாழினி!

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து மங்கையிடம் திரும்பியவள், ''நீங்க ரெண்டு பேரும் டாக்டரைப் போய் பார்த்தீங்களா?'' என்று யாழினி கேட்டாள்.

''நான் எல்லா செக்கப்பும் பண்ணிக்கிட்டேன். கர்ப்பப்பை பலவீனமா இருக்காம். மருந்து கொடுத்திருக்காங்க... ஆனா, அவர் ஏன் போகணும்?'' என்றாள் மங்கை.

''அவரும் போனாத்தானே என்ன பிரச்சினைன்னு தெரியும். வளவன் அண்ணாவையும் போகச் சொல்லு...''

''அத்தை திட்டுவாங்க யாழினி! அவங்களுக்கு அதெல்லாம் பிடிக்காது. சொன்னாக் கோபம் வரும்! நான் சொல்ல மாட்டேன்ப்பா'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றவளைப் பார்க்கும்போது, பாவமாக இருந்தது.

குழந்தை என்பது, மங்கையால் மட்டுமே கேட்க முடியாத மவுன மொழியாகவும், அவளுக்கு மட்டுமே மறுக்கப்பட்ட ஒரு வரமாகவும் தோன்றியது.

கட்டாயம் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் யாழினி.

அவளுக்கு டிபன், காபி இரண்டையுமே, அறைக்கு மங்கையே எடுத்து வந்தாள். இருவரும் அந்த ஊரைப் பற்றி பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

இரவு சாப்பாட்டின்போது அவர்கள் எல்லோரும் சாப்பிட, மாமிகள் இருவரும் பரிமாறினார்கள். தாத்தாவின் பக்கத்தில் அமர்ந்து சாப்பிட்டாள் யாழினி.

எல்லோரும் கலகலவென்று பேசிச் சிரிக்கும்போது, மாறன் மட்டும் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். அவள் பார்வை உயர்ந்து, ஏனோ மாறனையே யோசனையாக நோக்கியது.

இந்தக் குடும்பத்தில், இவன் மட்டும் ஏன் இப்படி ஒதுங்கியவனாக இருக்கிறான் என்று தோன்றியது. அவனுடைய பாராமுகம், அவளை ஏதோ செய்தது.

அந்தச் செறிவு மிகுந்த அவனின் பார்வையும், சொற்களின் கலப்பிசைவும் இல்லாத அவனுடைய மவுனமும், அங்கு பலமாய் அரசாட்சி செய்வதாய் இருந்தது.

அன்றிரவு வெகு நேரம் அவளுக்கு உறக்கம் வரவில்லை. அம்மாவும் இப்போது இங்கு தன்னுடன் இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்திருக்கும் என்ற நினைவே திரும்பத் திரும்ப உள்ளத்தில் எழுந்தது.

கடந்துபோன நினைவுகள், எதிர்காலத்தை அச்சத்துடன் எதிர்நோக்க வைக்க, தூக்கம் வரா

ததால் இரவு உடையுடன் அறையை விட்டு வெளியே ஹாலுக்கு வந்து பார்த்தாள் அவள்.

வீட்டில் எல்லோரும் படுக்கச் சென்றிருந்தனர். மாறனின் அறையில் மட்டும், கதவின் கீழ் வெளிச்சம் தெரிந்தது. அவன் ஏதோ வேலையாக இருக்கிறான் போலும் என்று மனம் நினைத்தது.

வாசலுக்கு வந்து, வெளியே திறந்த வெளியில் போடப்பட்டிருந்த மர பெஞ்சின் மேல் அமர்ந்து, வானை நிமிர்ந்து பார்த்தபோது, நிலவு மகள் வெட்கப்பட்டு, மேகத் திரையை இழுத்து முக்காடு போட்டுக் கொண்டு இருந்தாள்.

பிறகு திரை விலக்கி எட்டிப்பார்த்து தன் நட்சத்திரக் காதலர்கள் கண் சிமிட்டுவதை வைரச் சுடராய்ப் பார்வையிட்டாள். சாமரமாய் வீசிய பனிக்காற்று, மெல்ல அவளுடைய மேனியைத் தீண்டியது.

ஆனால், உள்ளுக்குள் ஒரு மொட்டு மலரும் முன் வரும் கதகதப்பு யாழினிக்குள் விரவிப் பரவியது. இந்த நேரத்தில் தன்னுடன் இந்த உணர்ச்சிகளை ரசனையோடு பகிர்ந்து கொள்ள ஒரு நல்ல துணை கிடைத்தால் எப்படி இருக்கும் என்ற உணர்விலும், காற்றுக்குள் ஒளிந்திருந்த குளிரின் சீறலிலும் கண் மூடி மேனி சிலிர்த்தாள்!

யாரோ அருகில் நடந்து வரும் சப்தம் உயிரையும் விழிக்கச் செய்ய, கண் விழித்துப் பார்த்தால், எதிரே மாறன் நின்றிருந்தான்.

அவன் பார்வையில், பூமியை விட்டுத் தான் வெட்ட வெளியில் விசிறி எறியப்பட்டது போல் மனம் ஏனோ விதிர்த்தது. அவன் பார்வை கோபக் குத்தூசிகளாய் உள்ளுக்குள் இறங்கின.

''இரவு நேரத்திலே ஒரு சின்னப்பெண் தனியா... அதுவும் வெட்ட வெளியில! உள்ளே போ!'' அதட்டலாக ஒலித்தது அவன் குரல். உடனே யாழினியின் மனம் அனிச்ச மலராய் வாடியது.

வேகமாக எழுந்து உள்ளே சென்றவளின் மனதில் அவனுடைய பார்வையும் சீற்றமுமே வெகுநேரம் மையம் கொண்டிருந்தன.

## 5

சேவல்கள் ஆதவனின் வரவை, மனிதனுக்கு உரக்க அறிவித்துக் கொண்டிருந்தன.

மறுநாள் அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டது யாழினிக்கு!

குளித்து முடித்து, ஒரு சுரிதாரை அணிந்து கொண்டு, வடிவு மாமியிடம் சொல்லிவிட்டுத் தோப்புக்குள் நடக்கத் தொடங்கியவளை, பத்திரமாகப் போய் வரும்படிச் சொன்னார் வடிவு.

வாசலில் புதிதாய்ப் பூத்திருந்த மலர்போல், கோலம் போடப்பட்டு நடுவே பூசணிப்பூ வைக்கப்பட்டு இருந்தது. மெதுவாக சுற்றிலும் பார்த்துக் கொண்டே நடந்துக் கொண்டு இருந்தாள் யாழினி.

ஆழ்கடலையே நிமிர்ந்து பார்ப்பதுபோல், பிரமிப்பாய் பரந்து விரிந்த ஆகாயம் தெரிந்தது. தோப்புக்குள், துயில் கலைந்த பட்சிகளின் ஆரவாரம் இனிமையாகக் கேட்க, மார்கழி மாதம் என்பதால், வெண்மையாய்ப் படரும் புகை போன்ற பனி, சல்லாத் துணிபோல் படர்ந்து இருந்தது.

எங்கிருந்தோ கோவிலில் இருந்து திருப்பாவை காற்றில் தேவகானமாய் மிதந்து வர, எல்லாவற்றையும் ரசித்தபடி சென்று கொண்டு இருந்த யாழினிக்கு, சென்னையில் இவை எல்லாம் தொலைந்து போயிருப்பது புரிந்தது.

கிராமம் என்பது நாட்டின் இதயப் பிரதேசம் என்பதும் தெரிந்தது. தன் மனதுக்குள்ளேயே எல்லாவற்றையும் அசை போட்டுக் கொண்டு சென்றவள், தூரத்தில் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த மாறனை, அப்போதுதான் கவனித்தாள்.

அப்போது நேற்று இரவு நடந்தது நினைவில் படர்ந்தது. அவனுக்கு காலையில் வாக்கிங் செல்வது பழக்கம்போலும் என்று நினைத்துக் கொண்டாள் யாழினி.

அவன் அருகில் வந்ததும் நிமிர்ந்து ''குட் மார்னிங்'' என்றாள் இதழில் புன்னகையுடன்!

''குட் மார்னிங்'' என்று திருப்பி அவன் உதடுகள் முணுமுணுத்தாலும், முகம் ஏனோ கடுமையாகவே இருந்தது. நின்று கூடப்பேசாமல், நிமிர்ந்தும் பார்க்காமல், நடந்து போகிற வேகத்திலேயே பதில் சொல்லிச் சென்றான் அவன்.

எல்லோரும் தன்னிடம் அன்பாக இருக்கும்போது, இவன் மட்டும் முரண்படுவது மனதுக்கு வேதனையைத் தந்தது. இவனுடைய அன்பையும் பெற்றுவிட வேண்டும் என்று, அவள் மனம் விழைந்தது.

'வாக்கிங்' முடிந்து வீடு வந்து சேர்ந்து, தாத்தாவைப் பார்க்கச் சென்றாள் அவள். தாத்தாவின் அறைக்குள் நுழைந்தபோது, அங்கு மாறன் அவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

''ஓ! ஸாரி... நான் அப்புறம் வரேன் தாத்தா'' என்று கூறி அவள் திரும்பவும், ரத்தினம் அவளை அழைத்தார்.

''நீ வாம்மா யாழினி! நாங்க என்ன ரகசியமா பேசிக்கிட்டு இருக்கோம்... இங்கே வந்து

உட்காரு'' என்றார் தன் அருகே இருந்த இருக்கையைக் காட்டி.

அவள் அமர்ந்தவுடனே எழுந்த மாறன், ''சரி தாத்தா! அப்ப நான் கிளம்பறேன். அவர்கிட்ட பேசிட்டு வந்து சொல்றேன்'' என்று கூறிவிட்டு, அவள் ஒருத்தி அங்கு இருப்பதே நினைவில்லாததுபோல், திரும்பிக் கூடப் பார்க்காமல் வெளியே சென்றான்.

''தாத்தா... மாறனும், குமரனும் என்ன படிச்சிருக்காங்க? அப்புறம், நீங்க என்ன தொழில் செய்யறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்றாள் யாழினி.

''விவசாயம் தாம்மா முதல் தொழில்! நம்ம தோப்புல இருக்கற மாம்பழங்களை ஏற்றுமதி பண்றோம். தென்னந்தோப்பு நிறைய இருக்கறதால, எண்ணெய் ஆட்டி, தேங்காய் எண்ணெய் விற்பனை நடக்குது. மட்டைகளை எல்லாம் நார்த் தொழிற்சாலைக்கு அனுப்பிடுவோம். கரும்பு, வாழை, கடலை, பயறு எல்லாமே போடுவோம். ஏலக்காய்த் தோட்டம் இருக்கு. ஒரு பழத்தோட்டம்கூட ஊர்க்கோடியில இருக்கு. மாதுளம் பழம், கொய்யா, சப்போட்டா எல்லாம் வெளியூருக்கு அனுப்பறோம்'' என்றார்.

தொடர்ந்து, ''மாறன் எம்.எஸ்சி. விவசாயம் படிச்சிருக்கான். குமரன் பி.ஏ. முடிச்சிட்டு, அவன் அப்பாவுக்கு உதவியா இருக்கான். ஆளுக்கு ஒரு தொழிலைப் பாத்துக்கறாங்க. ஏற்றுமதி பண்றது, சரக்கு ஏத்தி வெளியூருக்கு அனுப்பறது எல்லாம் மாறன்தான் பாத்துக்கறான்...'' என்று கூறி முடித்தார் ரத்தினம்.

''நீ என்னடா படிச்சிருக்கே?'' என்று அவர் கேட்கவும், ''நான் பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிச்சிருக்கேன் தாத்தா. வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டேன்... ஆனா இப்ப இங்க வந்துட்டேன்!'' என்றாள் யாழினி இயலாமையோடு.

தாத்தா உடனே ''மாடியில, நம்ம அலுவலக அறையில கம்ப்யூட்டர் இருக்கு. நீ வேணா உன் மாமாகிட்ட சொல்லிட்டு, ஏதாவது கணக்கு வழக்கெல்லாம் அதிலே பாக்க முடியும்னா பாரு!'' என்றார் புன்னகையுடன்.

''சரி தாத்தா! நான் போய் மாமி என்ன பண்றாங்கன்னு முதல்லே பாக்கறேன். உங்களுக்கு எதுவும் வேணுமா?'' என்றாள்.

''வேண்டாம்மா! நானே டிபன் சாப்பிட வருவேன்... நீ போய் வீட்டைச் சுத்திப் பாரு...'' என்றார் அவர்.

பிறகு ஆர்வத்துடன் வீட்டைச் சுற்றி வந்தாள் யாழினி. வாசலில் யாரோ பேசிக்கொண்டு இருந்த சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தபோது, மாறன் தொழிலாளர்கள் சிலருடன் பேசிக் கொண்டு இருந்தான்.

அவர்களைப் பார்த்தால், கையில் தாம்பூலத் தட்டுடன், அவர்களுடைய வீட்டுத் திருமணத்திற்கு அழைக்க வந்திருந்தாற்போல் இருந்தது.

பத்திரிகையை வாங்கிப் படித்தவன், அவர்களைக் காத்திருக்க வைத்துவிட்டு, உள்ளே சென்றான். திரும்பி வந்தவனின் கைகளில், கட்டாய் பணம் இருந்தது.

அந்தப் பெரியவரிடம் அதைக் கொடுத்தவன் ''தாலிக்கும் புடவைக்கும் வச்சுக்கங்க! அம்மாவும், அப்பாவும் கல்யாணத்துக்கு வருவாங்க'' என்றான்.

மகிழ்ச்சியுடன் ''நீங்களும் கட்டாயம் வரணும் தம்பி'' என்று அவர்கள் கூறிவிட்டுச் சென்றனர்.

இவன் குணம் என்னவாக இருக்கும் என்று புரியவில்லை யாழினிக்கு! தன்னிடம் மட்டுமே முரண்படுகிறானோ என்ற கேள்வியும் எழுந்தது.

வீட்டின் உள்ளேயே சுற்றி வந்தாள் யாழினி! கீழே பெரிய ஹாலும், டைனிங் ஹாலும் இருந்தன. அதன் இரு புறமும் அறைகள் வரிசையாகத் தெரிந்தன.

ஹாலின் இருபுறமும் நான்கு அறைகளும், டைனிங் ஹாலில் இருந்து இரு அறைகளும் இருந்தன. டைனிங் ஹாலில் இருந்து செல்லும் அறை அவளுக்குக் கொடுக்கப்பட்டு இருந்தது... மங்கையின் அறையாம் அது!

முதல் அறையில் முத்து மாமாவும், அடுத்த அறையில் மாணிக்கம் மாமாவும் இருந்தனர். இடதுபுற முதல் அறையில் மாறனும், அடுத்த அறையில் தாத்தாவும் இருந்தனர்.

குமரன், மங்கையின் அறைக்கு எதிரில் இருந்தான். மாடியில், விருந்தினர் அறைகள் இருப்பதாக மங்கை கூறி இருந்தாள்.

வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பின்புறம் இருந்த சமையலறைக்குச் சென்றாள் யாழினி. விஸ்தாரமாக, ஒரு பக்கம் விறகடுப்பும், மறு கோடியில் இரு கேஸ் அடுப்புகளும் மேடை மேல் இருந்தன.


இரண்டிலுமே சமையல் நடந்து கொண்டிருக்க, நடுவில் ஒரு தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டு இருந்தது. அலமாரிகளில், சமையலுக்கு வேண்டிய பொருட்கள் அடுக்கப்பட்டு நேர்த்தியுடன் தெரிந்தன.

இரண்டு மாமிகளும், சமையற்காரர்களு

டன் சேர்ந்து சமைத்துக் கொண்டு இருந்தார்கள். சமையலுக்கென்று ஒரு வயதான பெண்மணியும், ஒரு சிறுவயது பெண்ணும் இருந்தனர்.

வடிவு, அவளைப் பார்த்ததும் ''என்ன யாழினி? சுத்திப் பாத்தியா? இந்த ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா? 'இன்னும் கொஞ்ச நேரத்துல டிபன் ரெடி ஆயிடும்... சாப்பிடலாம்! பசிக்குதாம்மா?'' என்றார்.

''இல்லை மாமி! அப்புறமா சாப்பிடுறேன். எனக்கு ஏதாவது வேலை இருந்தா சொல்லுங்களேன்! ஆனா, சமைக்க மட்டும் சொல்லிடா



தீங்க... ஒண்ணுமே தெரியாது. காபி போடு வேன்... தோசை சுடத் தெரியும். அவ்வளவு தான்'' என்று கூறிவிட்டு முறுவலித்தாள் யாழினி.

''இப்ப ஒண்ணும் வேண்டாம். அப்புறம் மெதுவா கத்துக்கலாம். மாமாகிட்ட போய் சமையல் தயாராயிடுச்சின்னு சொல்லிட்டு, தாத்தாவையும் அழைச்சிட்டு வந்துடு, அதுபோதும்!'' என்றார் வடிவு.

மாமாவைத் தேடிச் சென்றவள், அவரைக் காணாமல் தேடியபோது, மாறன் அவனுடைய அறையிலிருந்து வெளியே வந்து கொண்டு இருந்தான்.

அவனுடைய கம்பீர நடையும், ஊடுருவும் பார்வையும், மனதில் ஆழமாக பதிய, ஒரு கணம் நின்று துடிக்க ஆரம்பித்த இதயத்தை அமைதிப்படுத்தியபடி, அவனருகில் சென்றாள் அவள்.

ஆனால், தங்களிருவருக்கும் இடையே மெலிதாய் ஒரு இரும்புத்திரை விழுந்திருப்பது மட்டும் புரிந்ததென்றாலும், தாத்தாவிற்காகவாவது அவனிடமும் இயல்பாக இருக்க வேண்டுமென்ற உணர்வு எழுந்தது.

6

**யா**ழினி அவனைப் பார்த்து ''மிஸ்டர் மாறன்! மாமா எங்கேன்னு தெரியுமா? சாப்பிடக் கூப்பிடலாம்னு வந்தேன். அவரோட அறையிலே கூடக் காணோமே?'' என்றாள்.

அப்போது அங்கு வந்த அல்லி மாமி, ''யாழினி... மாறனை மச்சான்னு சொல்லணும் நீ! பேர் சொல்லக் கூடாது'' என்றார்.



வேகமாக அவரிடம் திரும்பிய மாறன், "வேண்டாம் சித்தி... இந்த மாமன், மச்சான் உறவெல்லாம் வேண்டாம். பெயர் சொல்லியே கூப்பிடட்டும்" என்றவன் யாழினியிடம் திரும்பி முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றி "அப்பா பூஜை அறையிலே இருப்பார்... போய்ப் பார்!" என்று கூறிவிட்டு உள்ளே சென்றான்.

பூஜை அறைக்குச் சென்று மாமாவை அழைத்து வந்தவள், தாத்தாவிடமும் கூறிவிட்டு உள்ளே வந்தால் மேஜையில் அமர்ந்து மாறன் மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் தட்டில் இட்லிக்குத் தொட்டுக் கொள்ள சாம்பார் இல்லை. சட்னி மட்டும் சிறிதளவு இருப்பது தெரிய யாழினி அருகில் வந்து, "சாம்பார் வேணுமா?" என்று கேட்டுவிட்டு எடுத்து ஊற்றும் போது, சிறிது கீழே கொட்டி விட்டது.

கோபத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தவன், உள்புறம் நோக்கி "அம்மா!" என்று இரைந்தான்.

வேகமாகச் சமையல் அறையிலிருந்து அவனுடைய அம்மா வரவும், கையை உதறி எழுந்து "உங்களால எனக்கு நின்னு சாப்பாடு போட முடியாதா? கண்டவங்களையெல்லாம் ஏன் விடறீங்க? சே!" என்று எழுந்து சென்று விட்டான்.

யாழினிக்கு "ஸாரி!" என்று உதடு வரை வந்துவிட்ட வார்த்தைகள் உறைந்து நின்று விட முகம் கோபத்தில் சிவந்து தன் அறைக்கு வேகமாகச் சென்று விட்டாள்.

ஒரு சிறிய தவறைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இவன் என்ன இந்த வீட்டு 'ஹிட்லரா' என்று உள்ளம் எண்ணமிட்டது.

அவளின் பின்னாலேயே அறைக்குள் வந்த வடிவு, அவளைச் சமாதானம் செய்யும் விதமாக "யாழினி! தப்பா நினைச்சுக்காதம்மா... அவனுக்கு எல்லா விஷயமும் சரியா நடக்கணும். அதுவும் சாப்பாடு போடும் போது கவனமா இருக்கணும்பான். நானே எத்தனையோ தடவை திட்டு வாங்கி இருக்கேன். நீ எதையும் மனசுலே வைச்சுக்காதே யாழினி!" என்று கெஞ்சும் தொனியில் கேட்கவும், அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

"இல்லை மாமி! நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டேன். நீங்க போங்க... போய் மாமாவையும், தாத்தாவையும் கவனிங்க" என்றாள் கலங்கி இருந்த தன் மனதை அடக்கி!

வடிவு அதே யோசனையாக, வெளியே சென்றவர் நேரே மாறனின் அறைக்குள் சென்று அவனிடம் பேசினார்.

"மாறா! அந்தப் பொண்ணு பாவம்ப்பா! அம்மாவை இழந்துட்டு வந்திருக்கு. அதுகிட்டப் போய் உன் கோபத்தை எம்ப்பா காட்டறே? அவளை ஏன் உனக்குப் பிடிக்கலை? நானும் அவ வந்ததிலேருந்து கவனிச்சுட்டு தான் இருக்கேன்! அவகிட்ட நீ சரியாவே பேசறதில்லை" என்றார் கேள்வியாக.

"அம்மா! உங்களுக்கே தெரியும். நான் கயல்விழி அத்தை மேல எவ்வளவு பாசம் வைச்சிருந்தேன்னு! பாட்டி மேலயும் அப்படித்தான்! இரண்டு பேரும் என்னை விட்டுப் பிரியக் காரணமே அத்தையோட காதல் தானே!

நான் அந்த வயசுல புரியாம, எவ்வளவு அழுதிருப்பேன்? புரிஞ்ச பிறகு அவங்க மேலயும் அவங்க குடும்பத்து மேலேயும் ஒரு வெறுப்பு வந்துடுச்சிம்மா.

அவங்களோட சுயநலமான காதல்னால, நம்ம குடும்பத்தில எவ்வளவு பாதிப்பு வந்ததுன்னு எனக்குத் தெரியும். இப்ப இவ வேற வந்திருக்கா. எனக்குப் பிடிக்கலை... அவ்வளவு தான்...! அத்தையாலத் தானே உங்களுக்கும் அம்மா வீட்டு உறவே அறுந்து போச்சு. நம்ம குடும்பமே அவமானப்பட்டது மறந்து போச்சா?" என்றான் கோபமாக.

ஒரு கணம் என்ன சொல்வதென்று தெரியாமல் மகனையே பார்த்தவர், "உனக்குப் பிடிக்கலேன்னா ஒதுங்கிக்கோ மாறா! அவகிட்டப் பேச வேண்டாம். அவளுக்கும் நம்மை விட்டா இப்ப யார் இருக்கா சொல்லு? அவ அம்மா காதலிச்சதுக்கு இவ என்னப்பா செய்வா?" என்றார்.

"ஏன்...? அவங்க அப்பாவோட உறவு முறையில யாருமே இல்லையா? அங்க போக வேண்டியதுதானே!" என்று இரைந்தவன், உள்ளே நுழைந்த ரத்தினவேலுவைப் பார்த்ததும் நிறுத்தினான்.

அவன் அருகில் வந்த ரத்தினம் "மாறா! இதுவரைக்கும் நான் உன்கிட்ட எதுவுமே கேட்டதில்லை. இன்னிக்கு கேக்கறேன். என் பேத்தியை ஒண்ணும் சொல்லாதப்பா... அவ இங்கதான் இருப்பா! உன்னை மாதிரி தானே அவளும் எனக்கு...

கயலுக்குச் செய்யாததை எல்லாம் யாழினிக்கு செஞ்சு பாக்கணும்னு நான் ஆசைப்படறேன். ஒரு வருஷம் போகட்டும்! அப்புறமா, அவளுக்கு நல்லபடியா ஒரு கல்யாணத்தை முடிச்சி அனுப்பிடலாம்! அதுவரைக்கும் எனக்காக நீ யாழினியை ஒண்ணும் சொல்லக் கூடாது" என்றார் மெல்லிய குரலில்.

மாறன் ஒன்றும் கூறாமல் தலையசைத்து

விட்டு வெளியே கிளம்பிச் சென்று விட்டான். நேரே யாழினியிடம் சென்ற ரத்தினவேலு, அவளுடைய முகத்தைப் பார்த்ததுமே, மனதைப் புரிந்து கொண்டார்.

''யாழும்மா! நான் மாறன்கிட்டப் பேசிட்டேன்டா! அவன் ஏதோ கோபத்துல இருந்திருக்கான்... அதான்! இனிமே இதுமாதிரி உன்கிட்ட நடந்துக்க மாட்டான். சாப்பிட வாடா!'' என்று அழைத்தார்.

மெல்ல எழுந்த யாழினி, தாத்தாவுடன் சென்று சாப்பிடத் தொடங்கினாள். முதல் நாளே, தனக்கு இங்கு நேர்ந்த வரவேற்பை ஏனோ மனம் மறக்க மறுத்தது.

'உன்னை நான் வென்று காட்டுகிறேன் பார்' என்று மனம் மாறனிடம் சவால் விட்டது. சூரியனைத் தன் சிறகுகளால் வருடி, இதப்படுத்த ஆசைப்பட்ட சிறு புறாவைப் போல் தன் எண்ணமும் தோற்றுப் போகுமோ என்ற பயமும் கூடவே வந்தது.

அன்று மாலை மங்கை அவளை அழைத்துச் செல்ல வந்துவிட்டாள். யாழினிக்கு அவளைக் கண்டதும் மனம் சிறிது அமைதியானது.

மைசூர் கிரேப் புடவையணிந்து, ஒரு தேவதை போல் கிளம்பி வந்தவள், எல்லோரிடமும் சொல்லிவிட்டு மங்கையுடன் அவளுடைய வீட்டிற்குச் சென்றாள்.

மங்கையின் வீடு, தோப்பின் குறுக்கே நடந்து சென்றால், இவர்களுடைய வீட்டிலிருந்து சிறிது தூரமே இருந்தது. தார்ப் பாதையில் சுற்றிச் சென்றால் நிறைய தூரம் நடக்க வேண்டும் என்றாள் மங்கை.

அவர்களுடைய வீடும் நன்றாகப் பெரியதாக இருந்தது. அவர்களுக்கும் நிறைய வயல் இருந்தாலும், வளவன் அடுத்த ஊரில் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிவதாகவும், வளவனுடைய அண்ணன் தான் விவசாயத்தையெல்லாம் கவனித்துக் கொள்வதாகவும் கூறினாள் மங்கை.

கூட்டுக் குடும்பமாக இருந்த மங்கையின் வீட்டில் அவளை எல்லோரும் பாசமாக வரவேற்றனர். மங்கையின் மாமியார் அவளைப் பார்த்ததும் ''வெள்ளி குத்துவிளக்காட்டம் என்ன அழகா இருக்கா உன் அத்தை பொண்ணு!'' என்று சிலாகித்தார்.

மங்கையின் ஓரகத்தியையும், அவளுடைய இரு சிறு பெண்களையும் யாழினிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. அவர்களிடம் வெகுநேரம் பேசிக் கொண்டு இருந்த பிறகு, இருட்டி விட்டதே என்ற நினைவில் கிளம்பினாள் யாழினி.

அவளை இரவு டிபன் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்றார்கள் அனைவரும்! சாப்பிட்ட பிறகு தானே காரில் கொண்டு விடுவதாகச் சொல்லிய வளவன், அவளுடன் கிளம்பினான்.

அப்போது எதேச்சையாக தொழில் விஷயமாக வளவனைப் பார்க்க அங்கு வந்த மாறனுக்கு யாழினியைக் கண்டதும் முகம் கடுமையுற்றது. அதை மறைத்து எல்லோரிடமும் பேசிவிட்டு அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

காரில் பின்புறம் ஏறிக் கொண்ட யாழினி, எதுவும் பேசாமல் வெளியே பார்த்துக் கொண்டே வந்தாள். கண்கள் இருட்டுக்குள் எதையோ தேடி அலைந்தன. மாறனும் எதுவும் பேசவில்லை.

முகத்தில் ஒருவிதமான இறுக்கத்துடன் அவன் காரை ஓட்டிய போது அவன் இறுக்கம், அவள் மனதை என்னவோ செய்தது. வீடு வந்த உடன் வேகமாக இறங்கி உள்ளே செல்லும் அவளை யோசனையாக பார்த்துக் கொண்டே காரை விட்டு இறங்கினான் மாறன்.

உள்ளே சென்ற யாழினி, நேரே தாத்தாவிடம் போய் மங்கையின் வீட்டில் நடந்ததை எல்லாம் கூறினாள். அவர்கள் எல்லோரையும் தனக்கு மிகவும் பிடித்திருப்பதையும் கூறினாள்.

''அந்த அம்மாவுக்கு உன்னைப் பிடிச்சிப் போனது அதிசயம்தான். சாமானியத்திலே அவங்களுக்கு யாரையும் பிடிக்காது'' என்றார் வடிவு.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மாறன் அங்கு வந்து விட்டான். அவனைக் கண்டதுமே எழுந்த யாழினி தன் அறைக்கு வேகமாகச் செல்வதை தாத்தாவின் கண்கள் யோசனையுடன் அளவெடுத்தன. ஏனோ, அவன் இருக்குமிடத்தில் அவளுக்கு இயல்பாகவே இருக்க முடியவில்லை.

ஏதோ ஒருவித பாதுகாப்பில்லாத உணர்வும், அலைப்புறுதலும் மனதில் படர்ந்து, அவன் இருக்குமிடத்தைத் தவிர்க்கச் செய்தன.

## 7

மறுநாள் காலையிலேயே, குமரன் ஊரிலிருந்து வந்து விட்டான். யாழினிக்கு அவனுடன் பழகுவது இலகுவாக இருந்ததால், அவனிடம் பேசிக் கொண்டும், "கார்ட்ஸ்" விளையாடியபடி கலாட்டா செய்து கொண்டும், தாத்தாவுடன் சேர்ந்து அரட்டை அடித்தபடியும், இருவரும் சாப்பிட்டனர்.

மூவரும் ஏதோ சத்தமாக பேசி சிரித்துக்

கொண்டு இருந்தபோது, மாறன் அங்கு வரவும், யாழினி உடனே மவுனமாகி விட்டாள். அவனும் குமரனின் அருகில் அமர்ந்து, சாப்பிடத் தொடங்கினான்.

மாறன் வந்ததுமே, அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வெளியே செல்லும் யாழினியையே கவனித்துக் கொண்டு இருந்தான் குமரன். சிறிது நேரம் கழித்து, அவளுடைய அறைக்கு வந்தவன், "என்ன யாழினி? நீங்க மட்டும் வேகமா சாப்பிட்டுட்டு வந்துட்டீங்க.... ஏன்... அண்ணன் உங்களை ஏதாவது சொன்னாரா?" யோசனையுடன் கேட்டான்.

நேற்று நடந்த விஷயத்தை அவனிடம் கூறியவள், அதனால்தான் தான் ஒதுங்கிப் போவதாகக் கூறினாள்.

யோசனையுடன் அவளையே பார்த்தவன், "நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சிக்காதீங்க... அண்ணனுக்கு ரொம்பக் கோபம் வரும்... ஆனா அப்புறம் உடனே மாறிடுவாரு... சாரி!" என்றான், மெல்லிய குரலில் ஆதரவாக.

"பரவாயில்லை குமரன்! எனக்குப் பழகிடுச்சி. ஆனா நீங்க என்னை, மங்கையைக் கூப்பிடற மாதிரி, வா போன்னே கூப்பிடலாம். நம்ப ரெண்டு பேரும் கிட்டத்தட்ட ஒரே வயசாதான் இருப்போம்."

"கயல் அத்தை கல்யாணத்தப்போதான் நான் ஒரு வயசா இருந்தேனாம். அதனால நமக்கு இரண்டு வருஷமாவது வித்தியாசம் இருக்கும்."

இருவரும் பேசிக் கொண்டு இருக்கும் போதே உள்ளே வந்த தாத்தா "ஏய்! சின்னப் பசங்களா... தாத்தாவை விட்டுட்டு வந்துட்டீங்களா?" என்று கிண்டலாக கேட்டு விட்டு, அவளிடம் பழைய கதைகளைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

தன் சிறுவயது ஞாபகங்கள், திருமணம், குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று அவரது நினைவுச் சரம் நீண்டது. திடீரென குமரனிடம் "என் மர அலமாரியில் பழைய ஆல்பமெல்லாம் இருக்கும்... பாத்து எடுத்துட்டு வாப்பா!" என்று அனுப்பி வைத்தார்.

தன் தாயின் சிறு வயது புகைப்படங்களைப் பார்க்கும்போது, தன் இளம் பருவம் நினைவு வந்தது யாழினிக்கு! கயல்விழி மிகவும் அழகாக இருந்தார்.

பாட்டியைப் பார்த்தபோது, மங்கையின் சாயல் அப்படியே தெரிந்தது. எல்லோருடைய இளமைப் பருவமும், போட்டோவில் அழகான கவிதை போலிருந்தது.

மாறன், சிறுவயதிலேயே நன்றாக இருந்தான். எல்லாரையும் பற்றி கூறியவள், அவனைப் பற்றி மட்டும் எதுவுமே கூறவில்லை. இருவருமே மலரும் நினைவுகளில் தங்களின் எண்ணங்களைச் செலுத்தியபடி பேசிக் கொண்டிருக்க, குமரனும் அதில் ஆர்வமாகக் கலந்து கொண்டான்.

தாத்தா அவளிடம் "மாறன் எப்பவுமே நல்லா ஆரோக்கியமா, கிண்ணுன்னு இருப்பான்... குமரன்தான் கொஞ்சம் சோகையா, நோஞ்சானா இருப்பான்.... சின்ன வயசுல எப்ப பார்த்தாலும் வைத்தியர்கிட்டதான் பாதிநாள் போகணும். அப்புறம், டானிக், இரும்புச் சத்து மாத்திரை எல்லாம் கொடுத்து, இப்ப நல்லா இருக்கான்" என்றார் சிரித்தபடியே.

"ஓ! அப்ப சாப்பிட்ட இரும்புச்சத்து டானிக்தான், இன்னும் நீங்க துருதுருன்னு இருக்கீங்களா?"; என்று குமரனைப் பார்த்து கிண்டலடித்தவள், அவன் "ஏய்" என்று கையை ஓங்கவும், வேகமாக எழுந்து ஓடியவள், யார் மேலோ இடித்துக் கொண்டாள்.

திரும்பிப் பார்த்தால், கண்களில் கடுமையும் கோபமும் கலந்த பாவனையுடன் மாறன் நின்றிருந்தான்.

"சாரி!" என்றவள், உடனே விரைந்து வெளியே சென்று விட்டாள். தனிமை துணையிருந்த மனதில் தவிப்புடன் வேகமாகப் புரண்டு வந்தது சோக நதி.

எங்கு செல்வது என்று புரியாமல் வெளியில் சென்றவள், தோப்புக்குள் சென்று அமர்ந்து கொண்டாள். புன்னை மரத்து ஒற்றைக் குவி

## ரத்த விருத்திக்கு முருங்கைக்கீரை!

முருங்கை மரத்தின் இலைகளான முருங்கைக் கீரை சத்துமிக்கது மட்டுமின்றி மருந்தாகவும் பயன்படுகிறது. முருங்கைக் கீரையை சாப்பிட்டால் ரத்தம் விருத்தி அடையும். உடல் வளர்ச்சிக்கும் உதவும். பற்கள் உறுதி பெறும் என்பது

லொன்று. அங்கு அவளைப் போலவே தனிமை கீதம் பாடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில், குமரன் அவளைத் தேடி வந்து விட்டான்.

அவள் எதிரே அமர்ந்தவன், ''யாழினி! தாத்தா உன்னை அழைச்சிட்டு வரச் சொன்னார். ஏன் நீ அண்ணனைப் பார்த்தாலே விலகி விலகிப் போறே? உன்னை அவர் ஒண்ணும் சொல்ல மாட்டார். கோபம் இருக்கிற இடத்துலதான் குணமும் இருக்கும்பாங்க தெரியுமா? அண்ணனும் அப்படித்தான்!'' என்று கூறும்போதே அவன் வார்த்தைகளில் ஒரு மரியாதை தெரிந்தது.

சிறிது நேர மவுனத்திற்குப் பிறகு ''உங்க அண்ணனுக்கு ஏன் இன்னும் கல்யாணம் ஆகலை குமரன்?'' என்றாள் யாழினி கேள்வியாக.

''அவருக்கு இன்னும் எந்தப்பெண்ணை



டன் கண்பார்வையும் தெளிவடையும்.

நோய்க்கிருமியை அடியோடு அழிக்கும் சக்தியும் முருங்கைக் கீரைக்கு உண்டு.

யுமே மனசுக்குப் பிடிக்கலையே. வந்த வரனை எல்லாம் வேண்டாம்னுட்டாரு! அவருக்குன்னு யாராவது பிறந்துதானே இருக்கணும். தாத்தாவும் பார்த்துகிட்டுதான் இருக்காங்க. ஆனா எனக்கு எப்பவோ பொண்ணு ரெடி!'' என்றான் குறும்பாக.

''அப்படியா?'' என்றவள், ''அது யார் குமரன்? என்கிட்ட சொல்லக்கூடாதா?'' என்றாள், அது யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''என்னோட மாமா பொண்ணு... பக்கத்து ஊரிலேதான் இருக்கா... சின்ன வயசுல இருந்தே பேச்சு... அவ இப்ப ப்ளஸ் டூ படிக்கறா!''

''அவ பேர் என்ன? ஏய் சொல்லு... சொல்லு!'' என்று பரபரத்தாள் யாழினி.

''பூரணி!'' என்று கூறிவிட்டு, வெட்கத்துடன் சிரித்தான் குமரன்.

''குமரன்! எனக்கு உடனே அந்தப் பெண்ணைப் பார்க்கணும் போல' இருக்கு... எப்பப் பார்க்கலாம்?'' குரலில் ஆர்வம் கசிந்தது.

''அடுத்த மாசம் குலதெய்வத்துக்குப் பூஜை பண்ணுவாங்க. அப்ப எல்லோரும் கிராமத்துக்குப் போவோம்... அப்போ பார்க்கலாம்'' என்றவளின் குரலிலும் ஒரு சிலிர்ப்பு!

தன் அறையிலிருந்து ஜன்னல் வழியே, சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்த மாறனின் முகம் இறுகிவிட, ஒரு பண்ணையாளை விட்டு, குமரனை அழைத்து வரச் சொன்னான்.

அண்ணன் அழைத்தான் என்றதுமே, குமரன் உடனே கிளம்பி விட்டான். பின் தொடர்ந்து வந்த யாழினியும், தன் அறைக்குச் சென்றபோது, போட்டோ ஆல்பங்கள், நாற்காலியின் மேல் இருந்தன.

அவற்றை எடுத்து, மெதுவாகப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்த போது, மனம் தன் நினைவுப் பக்கங்களைப் புரட்டியது. எத்தனை முறை பார்த்தாலும், பழைய ஞாபகப் பதிவுகள் மனதில் பரவசத்தைத் துளிர்க்கச் செய்தன.

குமரனைத் தன் அறைக்குள் அழைத்த மாறன் ''உனக்காகப் பூரணி காத்துக்கிட்டு இருக்கா... ஞாபகம் இருக்கட்டும். அவளோட அம்மா செஞ்ச மாதிரி, நீயும் செஞ்சிடாதே'' என்றான் கோபமாக.

''இல்லண்ணா! நான் யாழினிகிட்ட ஒரு நல்ல நண்பனாதான் பழகுறேன்... தப்பா எதுவும் இல்லைண்ணா!'' என்றான் குமரன்.

''சரி... போ!'' என்று அவனை அனுப்பி விட்டு, யோசனையில் ஆழ்ந்தான் மாறன். மனதில், கோபம் சுடர்விட்டு எரிந்தது. தீச்சுடராய் விழிகள் பளபளத்தன.

அங்கு பகலில் எதுவும் தெரியவில்லை என்றாலும், இரவு நேரத் தனிமையின் ஆதிக்கத்தில், யாழினியைத் தாயின் நினைவுகள் அதிகமாக வாட்டின.

உறக்கம் வர மறுத்து கண்ணாமூச்சி ஆட, தன்னை உயிராய் விரும்பிய தாய் தந்தையின் பாசத்திற்கு மனம் ஏங்கியது.

நாட்கள் செல்லச் செல்ல, காலம் மனப் புண்ணை ஆற்றும் என்பதுபோல், அவள் மன

மும் மெதுவாகத் தேற ஆரம்பித்தது. தினமும் மாலையில் கிளம்பி, மங்கையைப் பார்க்கச் சென்று விடுவாள் யாழினி.

வெளிச்சத்திலேயே, சில நாள் நடந்து திரும்பியும் விடுவாள். சில நேரம், வளவனாவது குமரனாவது அழைத்து வந்து விடுவார்கள்.

அங்கு, அந்த சின்னப் பெண்கள் மலரும், குறிஞ்சியும் யாழினியின் மனதைப் பெரிதும் கவர்ந்தனர். அங்கிருக்கும்போது, அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாள். அந்த சிறு குழந்தைகளின் சிரிப்பில், மற்றதெல்லாம் மறந்து போகும்.

எல்லோரிடமும் பேசிக் கொண்டு இருந்து விட்டு வந்தால், ஏனோ தன் மன பாரம் வெகுவாகக் குறைவதுபோல் இருக்கும். அப்படி ஒரு நாள் திரும்பி வரும்போது தான், வளவனிடம் பேசினாள் அவள்.

அவன் காரை ஓட்டிக் கொண்டு இருந்த போது, மெதுவாக "அண்ணா! நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே!" தயக்கத்துடன் கேட்டாள்.

"என்ன? சொல்லும்மா..." என்றான் வளவன்.

"இவ யார் இதைப் பத்தி பேசறதுக்குன்னு நீங்க நினைக்கலாம். ஆனா மங்கைக்காகத்தான் நான் இதைப் பேசறேன். தினமும் அவளோட பேசும்போது, குழந்தை இல்லியேங்கிற அவளோட ஏக்கம், எனக்கு நல்லாப் புரியுது. நான் ஒரு விஷயம் கேக்கலாமாண்ணா?"

"சொல்லும்மா... நான் ஒண்ணும் தப்பா நினைக்க மாட்டேன்." இயல்பான பாசம் தெரிந்தது அவன் குரலில்.

"நீங்க ரெண்டு பேரும் போய் டாக்டர் கிட்ட செக்கப் பண்ணிக்கிட்டீங்களா? ஏன் கேக்கறேன்னா, ரெண்டு பேருமே பண்ணிக்கிட்டாதான், எந்தக் குறையிருந்தாலும் சரியா தெரியும். நீங்க ரெண்டு பேருமே எல்லா பரிசோதனையும் பண்ணிப் பாருங்கன்னு சொன்னா, மங்கை ஒத்துக்க மாட்டேங்கறா... நீங்கதான் அவளை அழைச்சிட்டுப் போய், உங்களையும் டாக்டர் கிட்ட காண்பிச்சு, முறையான சிகிச்சை எடுத்துக்கணும்" அக்கறையுடன் கூறினாள்.

காரை நிறுத்திவிட்டுத் திரும்பி அமர்ந்து, அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான் வளவன்.

அப்போது அவர்களைத் தாண்டிச் சென்ற காரிலிருந்த மாறனின் மனதில், மெலிதான சிற்றம் குடிபுகுந்தது.

யாழினி யோசனை கூறியவுடனே, "நான் இதைப் பத்தி யோசிக்கவே இல்லை யாழினி.... அம்மா மங்கையை டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போனாங்க...

அவளோட கர்ப்பப்பை பலவீனமா இருக்குன்னு, அவங்க மருந்து கொடுத்ததா சொன்னாங்க... எனக்கும் கன்சல்ட் பண்ணணும்கிறது, நீ சொன்னப்புறம்தான் தோணுது! இந்த வாரமே போறேம்மா... ரொம்பத் தேங்க்ஸ்!" என்றான்.

"அம்மாவுக்குத் தெரிய வேண்டாண்ணா! அப்புறம், அவங்க மனசு கஷ்டப்படும்... நம்ம மாதிரிச் சின்னவங்க, எல்லாத்தையும் ஈஸியா எடுத்துக்கற அளவுக்கு, அவங்கள்லாம் நினைக்க மாட்டாங்க... என் மேல கோபம் கூட வரலாம்! டாக்டர் கிட்டே ட்ரீட்மெண்ட் முடிஞ்சி, நல்ல ரிசல்ட் வந்தப்புறமா சொல்லலாம்...!"

"ம்.... நீ சொல்றதும் சரிதான்!" என்றபடி காரை எடுத்த வளவனைப் பார்த்தபோது, தனக்கு ஒரு அண்ணன் இல்லையென்ற குறை தீர்வது போல் ஒரு உணர்வு எழ, வளவனிடம் இனம்புரியாத ஒரு பாசம் வந்தது!

அவர்களிருவரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு வந்த மாறனுடைய மனதில், இருவரும் காரை நிறுத்திவிட்டுத் தனியாக அப்படி என்ன தான் பேசி இருப்பார்களென்ற சந்தேகம் வந்தது.

## 8

வீடு வந்து சேர்ந்தவுடன், அவளை இறக்கிவிட்ட வளவன், அவளிடம் சொல்லிவிட்டு, உடனே திரும்பிச் சென்று விட்டான். அப்போது தான் வந்திருந்த மாறனைத் தேடி, வாசலில் யாரோ வந்திருந்தார்கள். அவர்களைக் காத்திருக்க சொல்லிவிட்டு, உள்ளே சென்று குமரனிடம் கூறிய யாழினி, தன் அறைக்குச் சென்றாள்.

உடை மாற்றிய பிறகு, தாத்தாவிடம் சென்று பேசலாம் என்று எண்ணி வெளியே வந்தவள், மாறன் வெளியே செல்வதைக் கண்டதும் அவன் பின்னால் சென்று, என்னவென்று பார்வையை ஓட்டினாள்.

அப்போது எதிரே வந்த குமரன், பக்கத்து கிராமத்தில் இருந்து அவர்கள் வந்திருப்பதாகக் கூறினான். ஏதோ தண்ணீர்ப் பிரச்சினை என்றும், அந்த ஊர் பெரியவரிடம் பேசி அதற்கு மாறனை ஏற்பாடு செய்து கொடுக்கும்படியும் கேட்க வந்திருக்கிறார்கள் என்றான்.

"ஏன்? மாமா, தாத்தால்லாம் இருக்கும்

போது, உங்க அண்ணன் கிட்டப் பேசறாங்க?'' புரியாத குரலில் கேட்டாள் யாழினி.

''தாத்தாவுக்கு வயசாயிடுச்சி... அப்பாவும் பெரியப்பாவும் தொழிலைத்தான் பார்ப்பாங்க! தாத்தாவுக்குப் பின்னாடி எல்லாமே மாறன் அண்ணாதான்... தொழிலாளர் பிரச்சினை, பஞ்சாயத்து, போனஸ் குடுக்கிறதுன்னு எல்லாமே அவர் தான்!

நம்ம தேங்காய் எண்ணெய் கம்பெனியை அப்பாவே பாத்துக்கிட்டாலும், அதோட வெளி வேலைகள் எல்லாமே அண்ணன்தான் பாத்துக்கறார். விவசாயத்தை பெரியப்பா பாத்துக்கிட்டாலும், பிரச்சினைன்னு வரப்போ... சரக்கு அனுப்பறது எல்லாம் அவருக்குக் கீழேதான் இருக்கு'' என்றான் புன்னகையுடன்.

''ஓ!'' என்றவள், ''நான் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கறேன் குமரன்!'' என்று கூறி விட்டுத் தன் அறைக்குள் சென்றபோது, தாயின் நினைவுகள் மனதில் நிறைந்தன. மாறனைப் பற்றியும், முதன் முதலாக ஒரு நல்ல எண்ணம் மனதில் வித்தாய் விழுந்தது.

தன் அறைக்கதவு, திடீரென்று வேகமாகத் திறந்ததில், தன் நினைவுகளிலிருந்து கலைந்து விழித்த யாழினி, அங்கு கோபத்துடன் மாறன் நிற்பதைக் கண்டாள்.

கதவை மூடிவிட்டு, வேகமாக அவள் அருகே வந்தவன், ''வளவன் கிட்ட என்ன பேசிக்கிட்டு இருந்தே? யாருக்கும் தெரியாம, அவருக் கிட்டப் பேசற அளவுக்கு உனக்கும் அவருக்கும் நடுவுல என்ன இருக்கு? காரை நிறுத்திட்டு அப்படி என்ன பேச்சு? அவரைப் பாக்கத்தான் தினமும் மங்கை வீட்டுக்குப் போறியா?'' வார்த்தைகளில் திராவகத்தை வீசினான்.

அவள் மனம் தீயாக எரிந்தது. ஒன்றும் தெரியாமல் என்ன பேச்சுப் பேசுகிறான்! தன்னைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? என்று மனம் ரவுத்திரமானது.

''சே! மனுஷங்களைப் பாத்தா நல்லதே தோணாதா உங்களுக்கு? எல்லாரையும் தப்பாவே தான் பார்ப்பீங்களா? வளவன் எனக்கு அண்ணா மாதிரி! தான் நல்லவரா இருந்தா தானே, மத்தவங்களையும் நல்லவங்களா நினைக்கத் தோணும். மங்கைக்கு அவ அண்ணனோட கீழ்த்தரமான புத்தியைப் பத்தி தெரிஞ்சா எவ்வளவு கஷ்டப்படுவா? ப்ளீஸ் வெளியே போங்க!'' என்றாள் கதவின் புறம் கை காட்டி.

''என் வீட்டில இருந்தே என்னை வெளியே போகச் சொல்றியா? ரொம்ப தைரியம்தான் உனக்கு! உன்னை ரொம்ப நல்லவளாக் காட்டிக்கறதுக்கு டிராமா போடறியா? உன்னோட உண்மையான சொரூபத்தை, நானே எல்லாருக்கும் ஒரு நாள் காட்டுவேன்'' என்றான் கோபமாக.

''சரி! ரொம்ப தேங்க்ஸ்... ஆனா, இப்ப வெளியே போங்க'' என்றாள் யாழினி கோபமாக.

இருவருக்கும் இடையே, ஒரு பெரிய இரும்புத்திரை, மாறனின் கர்வத்தால் அன்று நிரந்தரமாக விழுந்தது.

அடுத்த மாதமே, பொங்கல் பண்டிகை வந்தது. ஊரே மிகவும் கோலாகலமாக இருந்தது. எல்லா வீடுகளுக்கும்; புதிதாக வர்ணம் பூசப்பட்டு பொங்கலுக்காக எல்லோருக்கும் புதுத் துணிமணிகள் எடுக்கப்பட்டு இருந்தன.

பண்ணை வீடு களைகட்டி இருந்தது. ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருக்க, வீட்டு வாசலில் மாக்கோலம் போட்டு, அதில் அடுப்பு வைத்து, சூரியனுக்குப் பொங்கல் இட்டார்கள்.

யாழினிக்கு இதெல்லாம் புதிதாக இருந்தது. மஞ்சள் கொத்தும், இஞ்சி கொத்தும், கரும்பும் வைத்து, சூரியனுக்குப் படையல் இட்டனர். ஏதோ ஒரு பூக்கொத்து வாசலில் சொருகி இருந்தது.

யாழினிக்கும் மங்கைக்கும் ஒரே மாதிரி பட்டுப் புடவைகளை எடுத்திருந்தார்கள். இள நீல நிறத்தில் பட்டு உடுத்தி, தலையை அழகாக பின்னி விட்டுத் தன் சிறிய நகைகளை அணிந்து, ஒரு இளவரசியைப் போல் இருந்தாள் யாழினி.

மாமிகளுக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்து கொண்டு இருந்தாள். மங்கை, அவளுடைய மாமியார் வீட்டில் இருந்ததால் தனியே சுற்றி வந்தபோது இங்கு நடக்கும் விழாக்கள், புதிதாக இருந்தன யாழினிக்கு!

சென்னையில் எல்லாம் அப்படி இல்லை. பாதி நேரம் டி.வி. பார்த்துக் கொண்டே பொழுது போய்விடும். இங்கு இயற்கையின் அழகுடன் இணைந்து, பண்டிகைகள் புது அர்த்தத்துடன் இருந்தன. தமிழ் திருநாள், புது விதமான பொலிவுடன் கொண்டாடப்பட்டது.

குமரனுடன் சேர்ந்து அமர்ந்து, எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டிருந்தாள் அவள்! இருவரும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து கொண்டிருந்தனர்.

''அங்க பாரு! அண்ணா உன்னையே பாக்கறாரு!'' என்று அவளை கேலி செய்தான் அவன்.

திரும்பிப் பார்த்தால், மாறன் ஏனோ அப்போது அவளையே இமைக்காது பார்த்துக் கொண்டு இருந்தான். அவள் பார்வை திரும்பியதும், உடனே வேறு புறம் திரும்பிக் கொண்டான்.

"உங்கண்ணன் சரியான முசுடு குமரன்! உன்னாட்டம் இல்லை!" என்று கூறிவிட்டு ரகசியமாய் சிரித்தாள் அவள். ஆனாலும் மனதிற்குள், ஏதோ ஒரு காரணத்தினால் தேயும் நிலவைப் போல், அவனுடைய பாராமுகமும் அவளை உருக்கியது.

அடுத்த வாரம், குலதெய்வம் கோவிலுக்கு பூஜைக்கு செல்வதற்கு என்று எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். அன்று அவர்கள் அனைவரும் இரண்டு வேனில் வளவனின் குடும்பத்தாருடன் அங்கு கிளம்பிச் சென்றனர்.

வேனில் எல்லோரும் அரட்டை அடித்துக் கொண்டு சென்றதில், பொழுது இனிமையாகக் கழிந்தது. அல்லி மாமியின் ஊரில், அவருடைய பிறந்த வீட்டில், எல்லா ஏற்பாடும் செய்யப்பட்டிருக்க, கோவிலும் அந்த ஊரில்தான் இருந்தது.

அவர்களுடைய வீட்டில் காலை டிபன் தயாராக இருந்தது. சாப்பிட்டு முடித்துவிட்டு அனைவரும் கோவிலுக்குச் சென்று பொங்கல் வைத்து சாமி கும்பிட்டார்கள்.

யாழினி, குமரனை கலாட்டா பண்ணிக் கொண்டே இருந்தாள். தன் மாமா பெண் பூரணியை அவளுக்கு வந்ததுமே அறிமுகம் செய்து வைத்து விட்டான் குமரன். பூரணியும் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள்.

அவள் கண்களில் முதலில் யாழினியைப் பார்த்த உடனே ஒருவிதக் கலவரம் வந்தது. தன்னை விட அழகாகவும் படித்தவளாகவும் இருக்கும் அவள், தன் குமரனைக் கவர்ந்து விடுவாளோ என்ற பயமும் வந்தது.

ஆனால் யாழினி அவளிடம், "பூரணி! குமரன் உன்னைப் பத்தி எல்லாம் சொல்லி இருக்காரு. உன்னைப் பத்திதான் இருபத்து நான்கு மணி நேரமும் பேசுவாரு. நீ ரொம்பக் கொடுத்து வச்சவ! அந்த நல்ல மனுஷனை அடையறதுக்கு நீ கொடுத்து வச்சிருக்கணும்" என்று கூறிவிட்டு "எனக்கு உன்னைப் பாக்கணும்னு ரொம்ப ஆசை. குமரனுக்குப் பொருத்தமா, ரொம்ப அழகா இருக்கே!" என்றவுடன், அவள் யாழினியை அன்புடன் பிடித்துக் கொண்டாள்.

"நீங்களும் ரொம்ப அழகா இருக்கீங்க!" என்று கூறிவிட்டு நீண்ட நாள் பழகியவள் போல் ஒட்டிக் கொண்டாள்.

அன்று புடவையில் வெகு அழகாக இருந்தாள் யாழினி. பொருத்தமான காதணிகளுடன், சிறு கழுத்துச்சங்கிலியும் அணிந்து அம்சமாக ஒரு உற்சவச் சிலை போல் இருந்தாள்.

மங்கையும், பூரணியும் அவளுக்கு பூஜை பற்றிய விவரங்களைக் கூறிக் கொண்டு இருந்தனர்.

அல்லி மாமியின் குடும்பத்தில் புதுவரவாக இருந்த சிறு குழந்தையை அனைவரும் எடுத்துக் கொஞ்சினார்கள்.

மங்கை, அந்தக் குழந்தையை ஆவலாகத் தூக்கிய போது, வேகமாகத் திரும்பி வாங்கிக் கொண்ட ஒரு வயதான பெண்மணி, தன் மருமகளிடம் திரும்பினார்.

"அவளே குழந்தை இல்லாதவ! மலடி! அவ கைபட்டா குழந்தைக்கு என்னாகுமோ? நீ ஏன் அவளைக் குழந்தையைத் தூக்க விட்டே?" என்று திட்டினார்.

கண்கலங்க மங்கை அங்கிருந்து செல்வதைப் பார்த்த யாழினி, வேகமாக அந்த அம்மாவிடம் சென்றாள்.

அவரைத் தனியே அழைத்து, "ஒரு நிமிஷம்மா!" என்றவள், "ஏம்மா! மங்கையை மலடின்னு சொன்னீங்களே! மனசில அன்பே இல்லாம, அப்படியே அன்பு இருந்தாக் கூட அதை பிரசவிக்கத் தெரியாத நீங்கள்லாம் கூட ஒரு வகையில மலடுதான்! அடுத்தவங்க மனசு புண்படற மாதிரி அவங்க அந்தரங்க விஷயங்களை வெளிச்சம் போடுறீங்களே... மனதில தாய்மையே இல்லாம! நீங்க கூட மலடுதானே!" என்று கூறிவிட்டு வேகமாகச் சென்று மங்கையை ஒரு விதத் தாய்மை உணர்வுடன் அழைத்துச் சென்றாள்.

இந்த விஷயங்கள் எல்லாம் நடக்கும் போது பின்னால் நின்று பேசிக் கொண்டு இருந்த மாறனுக்கு எல்லாமே ஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தது. மின்னல் தோரணங்களாய் அவன் விழிப் பூக்களில் புதிதாய் ஒரு ஒளி!

மெதுவாகத் திரும்பி, தன் தங்கையை அணைத்தபடி செல்லும் யாழினியையே ஆச்சர்யத்துடன் பார்த்தான் அவன். இவள் இவ்வளவு நல்லவளா என்று பிரமிப்பாய் வந்தது... அவனால் நம்ப முடியவில்லை!

## வாதத்தை தடுக்கும்

எங்கும் தாராளமாக கிடைக்கும், அனைவரும் விரும்பி சாப்பிடும் அரைக்கீரை உடலில் புது ரத்தம் உற்பத்தியாக பெரிதும் உதவுகிறது. வாத சம்பந்தமான அனைத்து கோளாறுகளையும் குணப்படுத்தும்.

பூஜை நன்றாக நடந்தது. இறைவன் சந்நிதியில் யாழினி மனது மவுனக் கோரிக்கையாய் இன்று மங்கைக்காகப் பிரார்த்தித்தது.

மலடி என்ற அபிப்ராயக் கண்ணாடிய ணிந்து பெண்களை சிறுமைப்படுத்தும் பெண்ணினத்தை என்ன சொல்லித் திருத்துவதென்ற ஆதங்கமும் உள்ளே எழுந்தது.

9

அன்று வடிவு மாமியைப் பார்த்தபோது, அவர் முகத்தில் மெல்லிய சோகம் இழையோடுவதைப் போலிருந்தது, யாழினிக்கு!

அதைப் பற்றி யாரிடம் கேட்பது என்று யோசிக்கும் போதே, பூரணியின் நினைவு வர, அவளைத் தனியே அழைத்துச் சென்று கேட்டபோதுதான், அவள் எல்லாவற்றையும் கூறினாள்.

இதுவரை அவளுக்குத் தெரியாத ஒரு விஷயம், அன்று தெரிந்தது. பக்கத்துத் தெருவில்தான் வடிவு மாமியின் அம்மா வீடு இருப்பதாகவும், கயல்விழியின் திருமணத்திற்குப் பிறகு, இரு குடும்பத்திற்கும் இடையே இருந்த உறவு முறிந்து போனதைப் பற்றியும் கூறினாள்.

''அப்போ இத்தனை வருஷமா, வடிவு மாமி அவங்கம்மா வீட்டுக்கே போகவில்லையா?'' என்னும்போதே யாழினியின் குரலில் பெரும் ஆதங்கமும், குற்ற உணர்ச்சியும் தெரிந்தது.

''ஆமா... திருவிழாவுக்குக் கூட, இவங்கள்லாம் வரப்ப, அவங்க வீட்டிலயிருந்து யாருமே வரமாட்டாங்க... முதல் நாளே வந்து சாமி கும்பிட்டுட்டுப் போயிடுவாங்க'' என்ற பூரணியின் குரலிலும் வருத்தம் தெரிந்தது.

தன் தாயின் திருமணம், எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறதென்று நினைத்தபோது, ஏனோ அவளால் தாங்க முடியவில்லை. உடனே மாறனின் கோபமும் நினைவில் வந்தது.

''பூரணி! ஒரு நிமிஷம் நீ என்கூட வந்து அவங்க வீட்டை மட்டும் காட்டுறியா? ப்ளீஸ்...!''

''வேண்டாம் யாழினி... அவங்கள்லாம் அந்தப் பிரச்சினைக்கு அப்புறம், எங்க குடும்பத்தோட கூடப் பேசறதில்லை. அப்பாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்... திட்டுவாங்க!'' என்றாள் பூரணி.

''பூரணி... நான் உன்னை அவங்க வீட்டுக்குக் கூப்பிடலையே! வீட்டை மட்டும்தானே காட்டச் சொல்றேன்... அடையாளம் சொல்லிட்டு நீ வந்துடலாமே!'' என்றாள் வற்புறுத்தலுடன்.

''சரி வாங்க... ஆனா யாருக்கும் தெரியக் கூடாது... முக்கியமா குமரனுக்குத் தெரிஞ்சா என்னைத்தான் திட்டுவாரு!'' என்றாள்.

அன்று மாலையே ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டு, இருவரும் கிளம்பினர். வீட்டு வாசலிலேயே அவளை விட்டுவிட்டு, கோவிலுக்குச் சென்று காத்திருப்பதாகக் கூறினாள், பூரணி.

அந்த வீடும் மிகப் பழமையாகவும், பெரியதாகவும் இருந்தது. யாழினி வாசலில் நின்று அழைக்கும்போதே, ''யாரது?'' என்ற குரல் உள்ளிருந்து கணீரென்று கேட்டது.

மெதுவாக உள்ளே சென்று, அந்தப் பெரியக்கூடத்தில், சோபாவில் அமர்ந்திருந்த பெரியவரைப் பார்த்து, வணக்கம் கூறினாள் யாழினி.

அவர் உடனே, ''யாரு... சிந்தாமணியோட தோழியா...? அவளைப் பாக்கனும்னா உள்ளே போய் பாரு... இருப்பா'' என்றவர், உள்நோக்கிக் குரல் கொடுத்தார்.

என்ன பேசுவதென்று தெரியாமல், அவள்



## அரைக்கீரை!

கொடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு உடல் மெலிந்து பலவீனமாக இருப்பவர்கள் இந்த கீரையை சாப்பிட்டு வந்தால் போதும் உடலில் ரத்த உற்பத்தி அதிகரித்து உடல் வலிமை பெறும்.

தயங்கி நின்றபோது, வடிவின் சாயலிலேயே, உள்ளிருந்து ஒரு வயதான பெண்மணி வெளியில் வந்தார்.

ஏனோ, அவர் முகத்தில் யாழினியைக் கண்டவுடன், யோசனை ரேகைகள் படர்ந்தன.

''யாரும்மா நீ...?'' என்னும்போதே, ''பாட்டி... நீங்க ஒரு நிமிஷம் தாத்தா பக்கத்திலே வந்து நில்லுங்களேன்'' என்றவள், ''என்னை நீங்க ஆசிர்வாதம் பண்ணணும்!'' என்றபடி, அவர்கள் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அப்போது அங்கு வந்த ஒரு இளம்பெண், ''யாரு பாட்டி இவங்க...?'' என்று ஆச்சரியத்துடன் கேட்க, இருவருமே விழித்தனர்.

''சித்தா... இவ உன்னோட தோழி இல்லையா... பின்ன யாரும்மா நீ?'' கேள்வியுடன் நோக்கினார் அந்தப் பெரியவர்.

''என் பேரு யாழினி! நான் சென்னையில இருந்து உங்க ஊர்த் திருவிழாவுக்காக வந்திருக்கேன். நீங்கதான் இந்த ஊர்ல பெரிய மனுஷங்கன்னு எல்லாரும் சொன்னாங்க... அதான் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன் தாத்தா'' என்றாள் மெதுவாக.

''வாம்மா... இப்படி வந்து உக்காரு... பெரியவங்களை மதிக்கத் தெரிஞ்ச ஒரு பொண்ணு... அதுவும் பட்டணத்திலிருந்து வந்திருக்கேன்னா, ரொம்ப ஆச்சரியமா இருக்கு!

இதே என் பேத்திய எடுத்துக்க... உங்களுக்கு ஒண்ணும் தெரியாது தாத்தாம்பா! காலேஜுலதான் படிக்கறா!'' என்றபோது, அந்தப் பெண் ஒருவிதக் கோபத்துடன் யாழினியை முறைத்து பார்த்து விட்டு, உள்ளே சென்றாள்.

தன் மனைவியிடம் டிபன் எடுத்து வரும்படிக் கூறியவர், அவளிடம் திரும்பி, ''நீ யார் வீட்டுக்கு வந்திருக்கேம்மா...?'' என்றார் இயல்பாக.

''பக்கத்துத் தெருவில் அல்லி மாமி வீடு இருக்கில்லே, அங்கே வந்திருக்கேன் தாத்தா!'' என்னும்போதே அவர் முகம் சுருங்கியது.

''நீ என்ன சொந்தம் அவங்களுக்கு? எந்த வகையறா?'' அவர் கேட்டவுடனே, அவள் மனதில் முதன்முதலாக பயம் ஊஞ்சல் கட்டி ஆடியது.

மெதுவாக, ''நான் அல்லி மாமியோட நாத்தனார் கயல்விழியோட பொண்ணு யாழினி!'' என்னும்போதே, அவர் முகத்தில் பெரும் சீற்றம் தெரிந்தது.

அவர் வேகமாக எழும்போதே, அவளுக்குள் ஒருவித பயம் பரவினாலும், ''தாத்தா... முன்னாடியே நான் யாருன்னு சொல்லாததுக்கும், எங்க அம்மாவால உங்களுக்கு ஏற்பட்ட தலைகுனிவுக்கும், நான் முதல்லே மன்னிப்பு கேட்டுக்கறேன்'' என்றபோதும், அவருடைய ரவுத்திரம் சிறிதும் குறையவில்லை.

உள்ளே இருந்து வந்த பாட்டியும் ''ஏம்மா நீ இங்கே வந்தே...? உங்க குடும்பத்தோட ஒட்டும் வேணாம்... உறவும் வேணாம்னுதானே நாங்க ஒதுங்கி இருக்கோம்'' என்று படபடப்புடன் கூறினார்.

''பாட்டி... எங்கம்மா இறந்துட்டாங்க! அவங்க பண்ணின ஒரே தப்பு காதலிச்சதுதான்... ஆனா அது தெரிஞ்சும், உங்க பையனை முடிவு பண்ணினது எங்க தாத்தாவோட தப்பு! அதுக்கு வடிவு மாமி என்ன பண்ணுவாங்க பாவம்...

இத்தனை வருஷமா அவங்களுக்கும் அம்மா வீட்டுக்கு வரணும்னு எவ்வளவு ஆசை இருந்திருக்கும்... எப்படித் தவிச்சிருப்பாங்க?

தயவுசெஞ்சி நான் கேக்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க பாட்டி! நீங்களும் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பீங்க? யாரோ பண்ணின தப்புக்கு அவங்க ஏன் தண்டனை அனுபவிக்கணும்? இப்ப காலம் மாறிப் போச்சு...

எத்தனையோ இடத்துல காதல் திருமணம் நடக்குது... ஒரு குழந்தை பிறந்த உடனே எல்லாரும் சேந்துடறாங்க! ஆனா எங்க அம்மா விஷயத்திலதான் அப்படி நடக்கலை... அவங்க இறந்தப்புறம்தான், தாத்தா அவங்களை மன்னிச்சாங்க! ஆனா இன்னிக்கு ரொம்ப வருத்தப் படறாங்க...

பழசை எல்லாம் மறந்துட்டு, நீங்க உங்க பொண்ணு வீட்டுக்கு வரணும்னு நான் விரும்பறேன். அவங்களும் இங்க அம்மா வீட்டுக்கு வந்து சந்தோஷமா இருக்கணும்...

அம்மா வீடே இல்லாமப்போறது... இல்லைன்னா மறுக்கப்படறது எவ்வளவு கொடுமைன்னு எனக்கும் தெரியும்! ப்ளீஸ்... நீங்க மனசும் பெரியவங்களா இருப்பீங்கன்ற நம்பிக்கையிலதான் நான் இங்கே வந்தேன்...

நான் ஏதாவது அதிகப் பிரசங்கித்தனமா பேசி இருந்தா என்னை மன்னிச்சிடுங்க.. ரொம்ப நன்றி'' என்று கை கூப்பி விட்டு திரும்பியபோது, வாயைப் புடவைத் தலைப்பால் மூடியபடி அழுது கொண்டிருந்தார் அந்தப் பாட்டி.

ஏனோ மனம் பதறிவிட, வெளியே செல்ல முயன்றபோதுதான், அவளுக்குத் தெரிந்தது... அவர்களுடைய குடும்பமே அங்கு நின்றிருப்பது!

பொதுவாக எல்லோரிடமும் திரும்பி ''நான் வரேங்க... என்னை உங்க வீட்டுக்குள்ளே அனுமதிச்சதுக்கும், நான் பேசினதைக் கேட்டதுக்கும் ரொம்ப நன்றி!'' என்றவள், வேகமாக வெளியில் வந்தாள்.

பிறகு திருவிழா முடிந்து வீட்டிற்குக் கிளம்

பும்போது, பூரணியின் விழிகள் கலங்கியபடி விடைகொடுக்க, அவளிடம் தனியாகச் சொல்லிக்கொண்டு, வேனில் ஏறினாள் யாழினி.

## 10

**வா**ழ்க்கை, அதன் போக்கில் இயல்பாகச் சென்று கொண்டு இருந்தது. அன்றையப் பேச்சிற்குப் பிறகு, மாறனை யாழினி நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை.

அவன் வந்தாலே, ஒதுங்கிச் சென்று விடுவாள். அவனும், ஏதோ ஒரு விதமான ஒதுக்கமான மனநிலையிலேயே இருந்ததால், அவளுக்கும் வசதியாக இருந்தது.

வளவன் அவளிடம், தான் டாக்டரிடம் சென்று, எல்லா பரிசோதனைகளும் செய்து, மருந்து சாப்பிட்டு வருவதாகக் கூறினான். மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது அவளுக்கு!

அடுத்த மாதமே மங்கை தான் கருவுற்றிருக்கும் நல்ல செய்தியைக் கூறியபோது, அந்த வீடே சந்தோஷத்தில் நிறைந்தது.

எல்லோரும் மிகவும் மகிழ்ந்தனர். மங்கையை இங்கேயே அழைத்து வந்துவிட்டனர். வாரம் ஒரு ஊசி போட்டு, அவளைப் படுக்கையிலேயே ஓய்வெடுக்கச் சொல்லியிருந்தார் டாக்டர்.

மூன்று மாதங்கள் கவனமாக இருக்கும்படி கூறியிருந்ததால், மங்கையுடனேயே தன் நேரத்தில் பெரும் பகுதியை செலவழித்தாள் யாழினி.

அன்று மாலை, மங்கையைப் பார்க்க வந்திருந்த வளவன், அனைவர் முன்னிலையிலும் யாழினியிடம் நன்றி கூறியபோது, மாறன் புரியாமல் நிமிர்ந்தான்.

அனைவரும் குழப்பத்துடன் இருக்க, ''என்னப்பா வளவா! என் பேத்திக்கு நன்றி சொல்றே!... என்ன விஷயம்?'' என்றார் தாத்தா.

வளவன் மெதுவாக, யாழினி தன்னிடம் பேசியது பற்றியும், தான் டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து, மருந்து சாப்பிட்டதையும் பற்றிக் கூறி, அவள் எடுத்துக் கொண்ட முயற்சிதான் இதற்கு காரணம் என்றும் கூறினான்.

மாறனின் மனதில், அவளைப் பற்றிய முதல் நல்வித்து தூறலாய் விழுந்தது. தான் அவளைத் தவறாக எண்ணிப் பேசியதற்கு முதல்முறையாக மனம் வருந்தினான். அவளிடம், இது பற்றி எப்படிப் பேசுவது என்ற யோசனை மனதில் எழுந்தது.

வாழ்க்கையில் முதன் முதலாகத் தன் கணிப்பு தவறாகிப் போனதை உணர்ந்தான் அவன். மொழிகள் ஊமையாகிவிட, விழிகள் மவுனப் பேச்சு வார்த்தை நடத்தின. தனக்குள் ஏதோ ஒரு மாற்றம் வருவது அவனுக்கு புரிந்தது.

மங்கையும் சேர்ந்து யாழினியைப் பற்றி பெருமையாக கூறவும், அனைவரின் மனதிலும் சந்தோஷம் குடி வந்தது. யாழினி அந்த நிமிடமே எல்லோருடைய மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டாள்.

மங்கையின் வீட்டிற்கு நடந்து செல்ல வாய்ப்பின்றி, அவள் இங்கேயே இருந்ததால், காலையில் பழைய மாதிரியே தோப்புக்குள் நடக்க ஆரம்பித்தாள் யாழினி.

அன்றும், தன் வாழ்க்கையின் போக்கு, திசை மாறிய நினைவில் ஆழ்ந்து நடந்து கொண்டு இருந்த போது, தனக்குப் பின்னால் அழுத்தமான காலடி ஓசையைக் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அங்கு, வழக்கமான தன் வேக நடையில் மாறன் வந்து கொண்டிருந்தான். அந்த நடையின் கம்பீரம் மனதைக் கவர்ந்தாலும், அவனுடைய பார்வையின் கூர்மையைத் தாங்க முடியாமல், திரும்பி நடக்கத் தொடங்கினாள் அவள்.

அவள் அருகே வந்தவன் ''யாழினி!'' என்று அழைத்தபோது, அவனுடைய குரலில் தன் பெயர், குழலில் தேன் கலந்து இசைத்த மாதிரி இருந்தது, அவளுக்கு! மனம் வேகமாக அடித்துக் கொண்டது.

அவள் அருகே வந்த மாறன், ''நான் உன் கிட்ட அன்னிக்கு...'' என்று கூறி நிறுத்திவிட்டு, எப்படிக் கூறுவது என்று யோசித்தபடி, அவளையே கூர்மையான பார்வையால் அளவிட்டான்.

உடனே யாழினி, ''ப்ளீஸ்! அதெல்லாம் நான் அப்பவே மறந்துட்டேன்! இப்ப வேண்டாமே...!'' என்றாள்.

அவனிடமிருந்து ஒரு ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது. எப்படிப் பேசுவதென்ற தயக்கம், அவன் முகத்தில் யோசனையாய்....!

பிறகு, ''தேங்க்ஸ்'' என்றான் மாறன் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்! ஏனோ, இன்று வார்த்தைகள் ஏற்படுத்தும் வலி புரிந்திருக்க, சொற்கள் மிருதுவாயின.

''எதுக்கு...?'' என்று அவன் முகம் நோக்கினாள் யாழினி.

''எல்லாத்துக்கும்....'' என்று கூறி அவள் முகத்தை இமைக்காமல் நோக்கிய அவனுடைய பார்வையின் தீட்சண்யம், மனதை சிலிர்க்க வைத்தது.

அவள் விழிகள், ஆயிரம் கவிதைகளை

யாழினியின் மனதுக்குள் வாசித்தன. ஒரு கணம் ஒரு யுகமாகியது... ஒரு வார்த்தை வாழ்க்கையாகிவிட முடியுமா... தெரியவில்லை. ஆனால், ஒற்றை வார்த்தையை நம்பி காத்திருப்பது கூட, சுகமான அனுபவமாய் தோன்றியது.

விழிகளை விலக்கி, வேகமாக வந்த வழியே அவன் திரும்பி கம்பீரமாகச் சென்ற போது, அவனுடைய கால் தடங்கள், அவள் கடந்த பாதையில் செல்ல, அவளுடைய மனத் தடங்கள், அவன் நடந்த பாதையில் சென்றன.

தன் பார்வையாலேயே அவள் மனதை இதமாகக் கோதிவிட்டுச் சென்றான் மாறன். அவனுடைய பார்வை தீண்டிப் போனதின் அதிர்வுகள் அவள் மனதிற்குள் அதிகமாக இருந்தன.

'காதல் சொல்ல வந்தேன் உன்னிடத்திலே... வார்த்தை ஒன்றும் இல்லை என்னிடத்திலே!' என்ற வரிகள், அழுத்தமாய் நினைவுக்கு வந்தன யாழினிக்கு...!

ஒரு நொடியில், அவள் மனதில் காதல் எனும் மாயம் செய்து, பார்வை உளிகளால் கம்பீரக் கருத்துச் சிலைகளை வார்த்துவிட்டு, ஒரு தேர்ந்த சிற்பி போல் செல்லும் அவனை, விழி எடுக்காது நோக்கிக் கொண்டு இருந்தாள் யாழினி.

நீ மட்டும் என் உயிர் தொட அனுமதிப்பேன் என்ற செல்லச் சிணுங்கல் அவள் முகத்தில்.... மனமோ பழைய சங்கப் பாடலில்!

'ஒரு வேழம், தன் பசிக்கு உண்ண, கிளை வளைத்து உடைக்கையில் யாரோ வரும் அரவம் கேட்டு ஓடிற்று.... அந்தக் கிளை உடைபட்டுத் தொங்க... அது உண்ணப்படவும் இல்லை! உடையாமலும் இல்லை! என் நிலை, அந்நிலை தானே!' என்று தலைவி உரைத்த சங்கப் பாடல், நினைவில் வந்து மோதியது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்து போனாலும், இந்தப் பாட்டின் நிஜம் மறைந்து போகுமோ என்பது போலத் தன் நிலை உணர்ந்தாள் யாழினி.

அவளுக்குத் தமிழ்ப் பற்றை ஊட்டிய அம்மாதான் உடனே நினைவில் வந்தார். திருமணத்திற்குப் பிறகு கயல்விழி, சிவராமன் தந்த ஊக்கத்தால், தமிழ் இலக்கியம் படித்தார். தமிழில், யாழினிக்கு ஈடுபாடு வந்ததே அம்மாவின் தமிழ்ப் பற்றால்தான்!

அவருடைய புத்தகங்களை எல்லாம் எடுத்து, விடுமுறை நாட்களில் படிப்பாள் அவள். தமிழைப் போல் இனிதான மொழி, எங்குமில்லாதது போல் ஒரு பிரமை, அவளுக்குள் எப்போதும் உண்டு.

## வயிற்றுவலியை போக்கும்

முள்ளங்கிக் கீரை வயிற்றுவலிக்கு நல்ல மருந்து ஆகும். ஆனால் இதனால் பித்த சம்பந்தமான கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மணலிக்கீரை சாப்பிட்டால் பித்த சம்பந்தமான நோய்கள் நீங்கும். கபத்தை முறிக்கும். மலக்குடலில் உள்ள பூச்சிகளையும் அடியோடு அழிக்கும்.

இன்று மாறன் தன்னைப் பார்த்த பார்வைக்கும், அவள் இந்த ஊருக்கு வந்த புதிதில் தன்னைப் பார்த்ததற்கும் மலையளவு வித்தியாசம் தெரிந்தது யாழினிக்கு!

அன்று ஒரே வீட்டில் இருந்தாலும், ஒத்த வயதாய் அமைந்தாலும், உறவில் முறைப் பெண்ணாய் இருந்தும், பக்கத்து ஊர் இடுகாட்டைப் பார்த்தது போன்ற அவன் பார்வை, கடந்த காலமாய்த் தோன்றியது.

மனதில் மிகுந்த உணர்ச்சிகளின் தாக்கத்தில், ஒரு மரத்தின் வேரில் அமர்ந்து, சாய்ந்து கண் மூடி சிறிது நேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். மனம் கையகப்பட மறுத்தது... படபடப்பாக இருந்தது.

அவளுக்கு நினைத்தாலே அதிசயமாகப் பட்டது. எத்தனையோ ஆண்களுடன் சென்னையில் பேசி இருக்கிறாள், நட்பாகப் பழகி இருக்கிறாள். ஆனால் ஒரு ஆணின் பார்வை, தன்னை நொடியில் வீழ்த்தும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

ஒருவனை கண்டவுடன் காதல் என்பது பைத்தியக்காரத்தனம் என்று அவளே வாதிட்டிருக்கிறாள். இன்று மாறனை... அவன் பேச்சை... அவன் கண்களைக் கண்டவுடன்... தன் மனதுக்குள் காதல் பயிர் துளிர்விட்டு மரமானது கண்டு, புரியாத உணர்வில் சிலிர்த்து நின்றாள் யாழினி.

"யாழினி..." யாரோ அழைப்பது கேட்டு விழித்தாள். குமரன் எதிரே நின்று கொண்டிருந்தான்.

வேகமாக எழ முயற்சி செய்தவளை, கை அசைவில் அமர்த்தி விட்டுத் தானும் எதிரில் அமர்ந்தவன், "நான் உன்கிட்ட ஒண்ணு கேக்கலாமா?" என்றான் கேள்வியாக.

மனதில் புதிதாக விளைந்த மகிழ்ச்சியுடன்,

# முள்ளங்கிக் கீரை



''ஒன்னு என்ன குமரன்... எத்தனை வேணா லும் கேளு! சொல்றேன்'' என்றாள் குறும்பாக.

''என்னவோ நடந்திருக்கு இங்கே....! அதான் அண்ணன், நான் வர்றதைக் கூட கவனிக் காம தனக்குள்ளே சிரிச்சுக்கிட்டே போறாரு... இங்கு வந்து பார்த்தா நீ மரத்துல சாய்ஞ்சுகிட்டு, கனவு கண்டுக்கிட்டு இருக்கே... என்ன ஆச்சு ரெண்டு பேருக்கும் இடையில...? என் கிட்ட சொல்லக் கூடாதா?'' என்று கேட்டான்.

''ஒன்னுமில்லை குமரன்! நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே!'' என்று கூறிவிட்டு, வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டாள் யாழினி.

குமரனுக்கு ஏதோ புரிந்த மாதிரி இருந்தது. அவளுடைய சிவந்த முகம், அவன் மனதில் எழுந்த வினாவிற்கான விடையைத் தெளிவாகக் கூறியது.

அன்று மாலையே, தாத்தாவிடம் சென்று, தன் கணிப்பைக் கூறினான் குமரன். தாத்தாவிற்கு உலகையே தன் கைக்குள் அடக்கிய சந்தோஷம். இந்த நற்செய்திக்காகத் தான், தான் உயிர் வாழ்வதே என்பது போல் மகிழ்ந்தார் அவர்.

இப்போதெல்லாம் மாறனுடைய புருவம் ஏறி இறங்கும் அந்தச் சிறு அழகைக் கூடப் புதையலாய் மனதில் இருத்தி, புதுக் கவிதை எழுதத் தொடங்கியிருந்தது யாழினியின் மனது.

அன்று இரவு சாப்பிடும்போது, யாழினியும் மாறனும் மிகவும் மகிழ்ச்சியாகவும், ஆனால் அமைதியாகவும் இருந்தது போல் குமரனுக்குப்பட்டது. தாத்தா இருவரையுமே கவனித்துக் கொண்டு தான் இருந்தார்.

மாறனின் விழியோரப் பார்வைகள், யாழினியிடம் சென்று மீள்வதும், அவளிடம் தெரிந்த தவிப்பும் புதுமையாக இருந்தது இருவருக்கும்!

என்றுமில்லாமல், அன்று மகிழ்ச்சியாக எல்லோரிடமும் பேசிக் கொண்டு இருந்தான் மாறன்.

அவனுடைய கண்களின் வார்த்தைகள் அவளுக்கு மட்டுமே புரிய, அது மவுனத்தின் மொழியாய் அவளுக்குள் உட்புகுந்தது.

மறுநாள் காலையில் ஒரு தீர்மானத்துக்கு வந்த ரத்தினவேலு, மாறனை அழைத்துப் பேசினார். ''மாறா! என் மனசுல ஒரு ஆசை இருக்கு. ஆனா வயசானவனோட ஆசைக்குக் கட்டுப்பட்டு, பிடிக்காத எதையும் எனக்காக நீங்க யாரும் செய்ய வேண்டாம்... யாழினியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?'' என்றார்.

மாறனின் மூச்சு ஒரு கணம் சீறலாக வெளிப்பட்டது. ''ஏன் தாத்தா கேக்கறீங்க? ம்... நல்லவ! அழகானவ...! எல்லோருக்கும் உதவி செய்யற குணம் நிறைஞ்சவ!'' என்று கூறிவிட்டு நிறுத்தினான்.

''ஆனா உன் மனசைக் கவர்ந்தவ இல்லை! அப்படித்தானே?'' என்றார் தாத்தா அதிரடியாக.

அவரை குறும்புடன் நிமிர்ந்து பார்த்த மாறன், சுட்டு விரலை உயர்த்திக் காட்டி, ''தாத்தா...!'' என்றான் மகிழ்ச்சியுடனும், தன் மனம் எப்படி அவருக்கு புரிந்தது என்ற பிரமிப்புடனும்!

''போடா பேராண்டி! நான் இனிமே எல்லாத்தையும் பார்த்துக்கறேன்'' என்று கூறிவிட்டு, பத்து வயது குறைந்தது போல் வேகமாக நடந்து சென்று தன் பேத்தியிடம் பேசினார், அவர். அவள் இதயமும் அவருக்குப் புரிந்தது.

விஷயம் தெரிந்து, அனைவருக்கும் மிகவும் சந்தோஷம்! இந்த நாளுக்காகவே காத்திருந்ததைப்போல், எல்லோரும் மகிழ்ந்தனர். வெகு நாட்களுக்குப் பிறகு, அந்த வீட்டில் ஆனந்தம் அரசனாய் நுழைந்திருந்தது.

## 11

அன்று மாலை, வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு, வெளியே வந்த யாழினி, யாரென்று பார்த்த போது, வடிவு மாமியின் குடும்பத்திலிருந்து அனைவரும் வந்திருந்தனர்.

ஆர்வத்துடன் ஓடிச் சென்று, ''வாங்க தாத்தா...! எல்லோரும் வாங்க'' என்று வரவேற்று அழைத்துக் கொண்டு அவள் உள்ளே வரும் போது, ரத்தினம் வெளியில் வந்தார்.

வேகமாக் முன்னே சென்ற யாழினி, அவரிடம் மெதுவாக ''தாத்தா... நீங்க இன்னிக்குக் கோபமே படக்கூடாது.... அவங்க எல்லோரும் பழசை எல்லாம் மறந்துட்டு நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்க. நீங்க அவங்களை சந்தோஷமா வரவேற்கணும்'' என்றபடி அவருக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டாள்.

பழைய பகையை மறந்து, ரத்தினமும் அவர்களைப் புன்னகையுடன் வரவேற்க, ஒரு இனிய சூழ்நிலை உருவானது, அங்கு!

முத்துவேலும் மாமனார் வீட்டினரை வரவேற்க, நட்புடன் சிந்தாமணியின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள் யாழினி.

சமையலறையில் நின்றிருந்த வடிவிடம் சென்றவள், ''மாமி... யார் வந்திருக்காங்கன்னு பாருங்க!'' என்றபோது திரும்பியவரால், ஒரு கணம் தன் விழிகளையே நம்ப முடியவில்லை.

கண்கள் கலங்க வேகமாக முன்னால் வந்து ''சிந்தாமணி தானே... கோவில் திருவிழாவுல எப்பவாவது பாக்கறதோட சரி! வாம்மா...! தாத்தா பாட்டி எல்லோரும் எப்படி இருக்காங்க?'' எனும் போதே குரல் கம்மியது.

''மாமி....! எல்லோரும் நம்ம வீட்டுக்குத் தான் வந்திருக்காங்க... ஹால்லதான் இருக்காங்க'' என்றாள் யாழினி மகிழ்ச்சிக் குரலில்.

பிரமிப்புடன் முன் ஹாலுக்கு வந்தவரை, அவருடைய அம்மா பாசத்துடன் அணைத்துக் கொள்ள, வெகு நாட்களுக்குப் பிறகு, அங்கு இனிய உறவு மலர்ந்தது.

''அம்மா... என்னால நம்பவே முடியலை'' கண்ணீர்க் குரலில் கூறியவரிடம், ''இந்தப் பொண்ணு யாழினிதான் உங்கப்பா மனசை மாத்தினா! நீங்கள்லாம் திருவிழாவுக்கு வந்திருந்தப்ப, இவ நம்ம வீட்டுக்கு வந்து எங்க ரெண்டு பேர்கிட்டயும் பேசினா... யோசிச்சிப் பாத்தோம்! இன்னும் எவ்வளவு காலம் இருக்கப்போறோமோ தெரியலை... அப்புறம்தான் தேவையில்லாத வறட்டுப் பிடிவாதத்தை விட்டுட்டு, ஒரு நல்ல முடிவோட நாங்க இங்க வந்திருக்கோம்'' என்றார்.

யாழினியிடம் திரும்பிய வடிவின் கண்களில் இருந்து வழிந்த நீர் நன்றியுடன் கை கோர்த்து இறங்கியது.

''மாமி! முதல்ல தாத்தாவைப் போய் பாருங்க'' என்றாள் யாழினி சிறு முறுவலுடன்.

''சரி'' என்று திரும்பியவர், ''என்னம்மா அது... நல்ல முடிவுன்னு ஏதோ சொன்னீங்க!'' என்றபடி அப்பாவையும், அண்ணனையும் வரவேற்கச் சென்றார்.

ஹாலுக்குள் நுழையும் போதே, அவருடைய அப்பா, வெற்றிலை, பாக்கு, பூ, பழம் வைத்திருந்த தட்டை, ரத்தினத்திடம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவர் பேசிய பிறகு எல்லாமே புரிந்து விட, அந்த விஷயம் இடியாய் அனைவரின் தலையிலும் இறங்கியது.

''சம்பந்தி... நான் திரும்பவும் ஒரு சம்பந்தம் பேசி முடிக்க வந்திருக்கேன். இந்த தடவை என்ன நடந்தாலும் இது மாறக்கூடாது... என் பேத்தி சிந்தாமணியை, நம்ம பேரன் இளமாறனுக்குக் கொடுக்கறதில எங்களுக்கு பரிபூரண சம்மதம்'' என்றார்.

எல்லோருடைய முகமும் ஒரு கணம் இருண்டு போய், பிறகு சகஜ நிலைக்குத் திரும்ப முயற்சிக்க, யாழினியின் மனம் வெடித்துச் சிதறியது.

தாத்தாவின் விழிகள் சிவந்துவிட, அவருக்குள் பொங்கும் உணர்வுகளைப் புரிந்து கொண்ட யாழினி ஒரு கணம் என்ன செய்வதென்றே புரியாமல் மரத்துப் போய் சிலையாய் நின்றாள்.

''அது வந்து... சம்பந்தி...'' என்று ரத்தினம் ஆரம்பிக்கவும், மனதில் உடைந்து சிதறிய துகள்களைப் புன்னகையாக்க முயன்றபடி, அவரருகில் வேகமாக வந்தாள் யாழினி.

அடிக்குரலில், ''தாத்தா...ப்ளீஸ்! அந்தத் தட்டை வாங்கிக்கங்க! பெரியவங்க வீடு தேடி வந்து பேசும்போது ஏன் தயங்கறீங்க? அவங்க பழசை மறந்த மாதிரி, நீங்களும் இங்கு நடந்ததை மறந்திடணும்... நான் சொன்னாக் கேப்பீங்க இல்லை.... ப்ளீஸ்!'' என்றாள், தன் இதயத்தின் கண்ணீரை கண்களுக்குக் காட்டாமல் மறைத்தபடி!

அந்த நிமிடம், அங்கு தனி மனித விருப்பங்களும், சுயத்தின் தேடல்களும் வேரறுக்கப்பட்

டன... குடும்பத்திற்காக தன் காதலைத் துறந்தாள் அவள்!

பிறகு எல்லாம் பேசி முடித்து, தட்டும் மாற்றிய பிறகு, வீட்டில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு விதமான மன நிலையில் இருந்தனர்.

வேகமாக மாடிக்கு ஓடிச் சென்ற யாழினியின் விழிகள், கண்ணீரை அருவியாய் பொழிந்தன.

சிந்தாமணிக்கு, மாறனை எப்படி விட்டுத் தரப்போகிறோம் என்று எண்ணும்போதே, இதய வீணையின் நரம்பொன்று பட்டென்று தெரித்தது போல், மனதில் ஒரு வலி!

காதலுக்கும் தியாகத்துக்கும் இடையே உள்ள சிறு காற்றுப் புகும் இடைவெளியில், தான் சிக்கித் தவிப்பது புரிந்தது.

அன்று மாலை வீட்டிற்கு வந்த மாறன், வீட்டில் ஏதோ மாறுதல் தெரிவதை உடனே புரிந்து கொண்டான்.

அவன் காலையில் செல்லும்போது, பூத்துக் குலுங்கும் நந்தவனமாய், பூரிப்பில் விகசித்திருந்த அனைவரின் முகமும், இப்போது வாடிப் போய் காணப்பட்டது.

''என்ன தாத்தா எல்லோரும் ரொம்ப கவலையாயிருக்கற மாதிரித் தெரியுது! என்னடா ஒரு அழகான ராட்சசிய நம்ம பேரனுக்கு பேசி முடிச்சிட்டோமே... இனிமே அவ என்ன பாடு படுத்துவாளோன்னு எல்லோரும் இப்பவே நடுங்க ஆரம்பிச்சிட்டீங்களா? எங்கே அவளைக் காணோம்?'' கேலியாகக் கேட்டான்.

இவனுக்கு இதுபோலெல்லாம் கூடப் பேச வருமாவென்ற ஆச்சர்யமும், நிஜத்தின் நிதர்சனமும் சேர்ந்து அனைவரின் வாயையும் கட்டிப் போட்டன.

அவனை தன்னறைக்குள் அழைத்துச் சென்ற ரத்தினம், தொண்டையைச் செருமியபடி, காலையில் நடந்த விஷயங்களை எல்லாம் மெதுவாகக் கூறினார்.

உடனே கடும் கோபத்துடன் நிமிர்ந்தவன் ''யாழினி எங்கே?'' என்று உறுமினான்.

''அவ அறையில இருக்காப்பா... பாவம்... அழுது அழுது அவ கண்ணீரே வத்திப் போயிடுச்சின்னு நினைக்கிறேன். எனக்கும் தாங்கலை... ஏன் இந்த சோதனை....?''

''அழட்டும்... அவ செஞ்ச காரியத்துக்கு.... சே'' என்றபடி கோபமாக, அவளுடைய அறைக் கதவைத் தட்டாமலேயே வேகமாகத் திறந்து சென்றான் அவன்.

எங்கோ விட்டத்தில் பார்வையைப் பதித்தபடி ஓய்ந்துபோய் அமர்ந்திருந்தவனிடம் ''எப்... மனசுன்னா என்ன... விளையாட்டு சாமான்னு நினைச்சிட்டியா? இன்னைக்கு ஒருத்தருக்குக் கொடுத்துட்டு, நாளைக்கு அதையே வேற ஒருத்தருக்குத் தரதுக்கு...! அப்படியே அறைஞ்சேன்னா... தியாகம் பண்றீங்களோ? நான் ஏன் உன்னைப் பார்த்தேன்... நீ ஏன் இங்கே வந்தே...சே!'' அவன் கோபமாகக் கத்தியபோது, உடலெங்கும் ஒரு நடுக்கம் ஓட, மெல்ல எழுந்தாள் யாழினி.

அவள் கையை அழுத்தமாகப் பிடித்து அருகே இழுத்தவன், ''அப்ப நீ என்னை உண்மையா விரும்பலை... இல்லை?'' இடியாய் வந்தது அவன் குரல்!

தன் மனதில் பல யுகங்களாய் சூல் கொண்டிருந்த காதலின் பிரசவம், நேச வார்த்தைகளாய் இன்று தன்னையறியாமல் நடந்து விடுமோ என்ற அச்சத்தில் களைத்துத் துவண்டன, அவள் விழிகள்!

தலை குனிந்து அவள் மவுனமாய் நிற்பதைப் பார்த்துவிட்டு, ''சே...!'' என்று அவளை உதறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வெளியில் சென்றான் மாறன்.

ஹாலுக்கு வந்து தன் பெற்றோரிடம் கோபமாக இரைந்தவன், சாப்பிடாமலே காரை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல, வீடே களையிழந்து போய், அமைதியாய் இருந்தது.

அவன் தன்னை நெருங்கும் போது தீயாய் தகித்தவள், அவன் விலகியதும் கடும்பனியில் குளிர்பவளைப் போல் உறைந்து நடுங்கியபோது, தன் உணர்வுகளிடமிருந்து தப்புவதற்காகவே அவனிடம் அடைக்கலம் தேடி ஓடிய மனதை அடக்கினாள் யாழினி.

**12**

**கி**ராமத்தில், வடிவுக்கரசியின் தந்தை வீடும், பூகம்பம் வந்து போன பூமியைப் போல் இருந்தது.

அனைவரும் வீட்டிற்குச் சென்றவுடனே, அழுது கொண்டு உள்ளே ஓடிய சிந்தாமணி, தனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை என்றும், தான் வேறொருவரைக் காதலிப்பதாகவும் கூற, அந்த வீடே போர்க்களமாய் மாறியது.

அவளுடைய தாத்தா ரௌத்திரமாகக் கத்திக் கொண்டிருந்தார்.

''அந்த வீட்டுப் பொண்ணும் இதைத்தான் செஞ்சா. இருபத்திரெண்டு வருஷத்திற்கு முன்

னாடி எங்க முகத்தில கரியப் பூசினா... இப்ப அதையே செஞ்சு, நம்ம குடும்பத்துக்கு அவமானத்தையும் தீராத பழியையும் நீ உண்டாக்கப் பாக்கறியா?" கோபம் தலைக்கேற, சப்தம் போட்டார்.

"முடியாது தாத்தா...! நான் விரும்பினவரைத் தான் கல்யாணம் செஞ்சிப்பேன்... என்னால மாறன் மாமாவை கணவனா நினைச்சிக் கூடப் பார்க்க முடியாது. அப்படி ஏதாவது நடந்தா நான் செத்துப் போயிடுவேன்."

அவள் முடிக்கும் முன்பே தன் மகனிடம் திரும்பியவர், "ஏய்! என்னிக்கு இருந்தாலும் இவ தான்டா உன் அக்கா வீட்டுக்கு மருமக! இவளை கையக் காலை உடைச்சி வீட்டில அடைச்சி வை!" என்று ஆணையிட்டார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து வேலையைப் பார்க்க கிளம்பி விட்டான் மாறன். நேற்றிலிருந்து அவன் யாரிடமும் பேசவில்லை.

மனம் எரிமலையாய் தகிக்க, வீட்டில் இருப்பவர்களை எதிர்நோக்கவே மனம் கசந்தது.

இன்றுதான் காதலின் வலிமை புரிந்து, கயல்விழி அத்தை செய்தது சரிதான் என்று, முதன்முதலாய் அவருக்காகப் பரிந்து வந்தது மனது.

பல யோசனைகளுடன் விரக்தியாகக் காரை ஓட்டிக் கொண்டு செல்லும்போதே, எதிரில் வேகமாக வந்த லாரி ஒன்று, அவன் எவ்வளவுதான் வலப்புறமாக ஒதுங்கியும், பிரேக் இல்லாமல் எமனாய் வந்து அவன் காரை முத்தமிட்டது.

காலையில் டிபன் சாப்பிடவே மனமின்றி, தென்னந்தோப்புக்குள் மெதுவாக நடந்துவிட்டுத் திரும்பி வந்த யாழினியை, ஹாலில் இருந்த போன் அழைத்தது.


மறுமுனையில் ஒலித்த குமாரின் குரல் பதட்டமாக இருக்க, பிறகு அவன் கூறிய செய்தி அவள் தலையில் இடியாய் இறங்கியது.

முதலில் பதட்டத்துடன், "அப்பா எங்கே யாழினி?" என்றபோது, "என்ன விஷயம்... என் கிட்ட சொல்லுங்க... மாமா பூஜையில இருக்காருன்னு நினைக்கிறேன்" என்றாள் யாழினி இயல்பாக.

"அண்ணனுக்கு ஒரு சின்ன விபத்து... ஹாஸ்பிடல்லே இருக்கார்... ஒண்ணும் பயமில்லை! அதான்... அப்பாவைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன்" என்றவுடன் அவள் முகம் பதறி வெளுத்தது.

கண்கள் இருட்டி விட "தாத்தா" என்று அவள் போட்ட அலறலில், அந்தக் குடும்பமே அடுத்த நொடி அங்கிருந்தது. துவண்ட கொடியாய் சரிந்திருந்தாள் யாழினி.





பிறகு பேசிய தாத்தாவிடம் முழு விவரத்தையும் அவன் கூற, உடனே அனைவரும் கிளம்பி மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கு செல்லும்வரை யாழினியின் உயிர் அவளிடமே இல்லை... ஊமையாய் அழுத வளை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்ற ரத்தினமும் பெரும் பதட்டத்திலிருந்தார்.

மருத்துவமனைக்குச் சென்று மாறனைப் பார்த்தபோது, அவள் விழிகள் அவன் உடலை அவசரமாக ஆராய்ந்தன.

வேறு எங்கும் சிறு காயமோ கட்டோ தெரியாத

நிலையில், நிம்மதியுடன் நிமிர்ந்தபோது அவன் கண்களில் மட்டும் பெரிதாகக் கட்டுப் போடப் பட்டிருந்தது.

அனைவரின் விழிகளும் கண்ணீரில் நனைந்தன.

குமரனிடம் திரும்பியவள், "என்னாச்சு குமரன்... ஏன் இப்படி?" தவித்துப் போய் கேட் டாள்.

அவளுடைய கையை ஆதரவாகப் பிடித்த வன், "அண்ணன் டவுனுக்குப் போறப்போ, பிரேக் வேலை செய்யாம எதிரிலே வந்த லாரி, கார் மேலே மோதியிருக்கு யாழினி! வேற எந்தக் காயமும் இல்லை... கண்ணுக்குள்ளே கண்ணா டித்துண்டுகள் குத்திக் காயமா இருக்கிறதால, கட் டுப்போட்டு இருக்காங்க.

இப்ப வலிக்கு மருந்தும், தூக்க மருந்தும் கொடுத்திருக்கறதால, அண்ணன் தூங்கிட்டு இருக்கறதா டாக்டர் சொன்னாரு. யாரும் தொந் தரவு பண்ண வேண்டாம்னு சொல்லி இருக்காரு! சரியாயிடும்..."

விவரம் கூறியவுடன் மடிந்து அமர்ந்து தன் வாயை இறுக மூடி அழும் யாழினியை, சமாதா னப்படுத்த வகையின்றி தானும் கலங்கினான் குமரன்.

வளவன் வீட்டிலிருந்து மற்றவர்களும் உடனே வந்து விட்டனர். மாறனுக்குத் தொந்தர வாக இருக்கும் என்பதால், அறைக்குள் ஒவ்வொ ருவராக அனுமதிக்கப்பட்டனர்.

மாறனின் அருகிலேயே, இடிந்து போய் சோர்ந்து அமர்ந்திருக்கும் யாழினியைப் பார்த்த போது, மனம் இரண்டாகப் பிளந்தது ரத்தினவே லுவுக்கு!

அவளை அணைத்து, வெளியில் அழைத்து வந்து ஆறுதல் படுத்தியபோது, அங்கிருந்த வடி வும் மயக்கமாகி விழுந்து விட்டார்.

ஆனால், விவரமறிந்து வந்து பார்த்த வடி வுக்கரசியின் குடும்பத்தினருடைய முகத்தில் ஈயாடவில்லை. நேரே டாக்டரிடம் சென்று மாற னைப் பற்றி விசாரித்து விவரம் அறிந்து, திரும் பிச் செல்லும்போது, மாறனுடைய மாமாவின் மனம் ஒரு முடிவுக்கு வந்திருந்தது.

அன்று வந்து பார்த்துவிட்டு, டாக்டரிடம் சென்று பேசிச் சென்றவர்கள் தான், பிறகு ஏனோ அங்கிருந்து ஒருவருமே வரவில்லை.

மாறனுக்கு நினைவு திரும்பி உடல் சரியா னதும், கண் கட்டு பிரிக்கப்பட்டது. ஆனால் அந்த ஒரு வாரமும், யாழினியின் உயிர் அவனி டம் இல்லை.

கண்களிலிருந்து கட்டு பிரிக்கப்பட்டதும், எதிரே யாழினியைக் காணும் ஆவலில் கண்க ளைத் திறந்த மாறனுக்கு எதிரில், கருமையான இருட்டு மட்டுமே கண்முன் விரிந்தது.

அவன் மனம் வண்ணங்களைக் காண விரும்பினாலும், கண்களுக்கு அறிமுகப்படுத்த முடியவில்லை. தன் கண்களின் பார்வைத் திறனை முழுதாக இழந்திருந்தான் மாறன்!

விஷயம் தெரிந்தவுடன், அனைவரும் செயலிழந்து போயினர். அனைவரின் மனதிலும் இடி விழுந்தது. இரண்டாவது முறையாக...!

அதை அறிந்ததும், யாழினியுடைய மன வீணையின் தந்திகள் சட்டென்று அறுபட்டுத் தெறித்தன. அவனுடைய இழப்பின் வலி, அவ ளைப் பலமாகத் தாக்கி, உள்ளே பதுங்கிக் கிடந்த வேதனைகளை, சோகமாகப் பதியன் போட்டன.

மனதின் மெல்லிய கதறல், விழிகளில் கண் ணீராய் வழிய ஆரம்பித்தது. வாழ்க்கையில் இனிமை மட்டுமில்லை.... சோகங்களும் இணைந்திருப்பது புரிந்தது.

சிறகிழந்த பறவையாய் ஒரு மூலையில் சுருண்டிருந்தாள் அவள்!

அன்று தன்னிடம் கோபமாகப் பேசி விட் டுச் சென்ற பிறகு, என்ன மனநிலையில் அவன் காரை ஓட்டினானோ என்ற தவிப்பும், நடந்த விபத்திற்குத் தானும் ஒரு வகையில் காரணமோ என்ற குற்றவுணர்ச்சியும் தாக்கி, அவளை உருக் குலைத்தன.

மாறனைக் கண் கொண்டு பார்க்க முடிய வில்லை. தாத்தாவிற்கு நெஞ்சு வலியே வந்து விட்டது. அவரை மருத்துவமனையிலிருந்து அழைத்து வருவதற்குள், மாறன் வீடு வந்திருந் தான். கண் பார்வை திரும்புவது கடினம்தான் என்றும், அதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு என் றும் டாக்டர்கள் கூறினர்.

இந்த விஷயத்தை முன்பே டாக்டரின் மூலம் அறிந்திருந்த சிந்தாமணியின் குடும்பத்தி னருக்கு, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் என்பது போல் ஒரு நிலை!

தாங்கள் கைத்தாம்பூலம் மாற்றி, முடிவு செய்த நிச்சயத்தை உடனே நிறுத்தி விடும்படி, ஒரு தூரத்து உறவினர் மூலம் சொல்லி அனுப்பி இருந்தார், மாறனின் மாமா!

இதை அறிந்த யாழினிக்கு, மனம் ஒரு பாதி சந்தோஷமாகவும் மறு பாதி இறுக்கமாகவும் ஆனது.

இதை சரி செய்ய எண்ணி பிறகு எத்த னையோ முறை அவள் சிந்தாமணியுடன் போனில் பேச முயற்சி செய்த போதும், அவள் பேச மறுத்து விட்டாள்.

மாறனின் ஒய்ந்த தோற்றம் வேறு, யாழினி யின் மனதை கசக்கிப் பிழிந்தது. இதற்காகவா, என்னை மாறனை சந்திக்க வைத்தாய் என்று மனம் இறைவனிடம் மன்றாடியது.

காயங்கள் ஆறியவுடன், மூன்று மாதம் கழித்து, மீண்டும் பரிசோதனை செய்து பார்க்க லாம் என்று டாக்டர்கள் கூறினாலும், உடனே யாழினி பிடிவாதமாக மாறனை, மாமா மாமி யின் துணையுடன் சென்னைக்கு அழைத்துச் சென்றாள்.

முதலில் வர மறுத்த மாறன், பிறகு அவளு டைய வற்புறுத்தலுக்கு இணங்கி, சென்னைக்கு வந்தான்.

அவளுடைய தோழி கண்மணியின் வீட் டில் தங்கியவர்கள், மறுநாளே பிரபல கண் மருத் துவரிடம் சென்றனர்.

மாறனைப் பரிசோதித்தவர், அவளுடைய அப்பா சிவராமனின் நண்பர்தான்! அவர் அவ னைப் பரிசோதித்து விட்டு, இரண்டு மாதங்கள் கழித்து மீண்டும் அழைத்து வரும்படி கூறினார்.

பார்வை வருவது கடினம் என்றாலும், ஒரு முறை முயற்சி செய்து பார்க்கலாம் என்றவர், வெளி நாட்டிலிருந்து பிரபல கண் சிகிச்சை நிபு ணர் ஒருவர், அப்போது இந்தியா வருவதால், அவ ரிடம் ஆலோசனை கேட்கலாம் என்றார்.

நான்கு பேரும் சோர்வுடன் ஊருக்குத் திரும் பினர்.

## 13

அன்று மாறன் ஊரிலிருந்து வரு வதாகக் கூறி இருந்ததால், ஒரு வித அலைப்புறுதலுடனிருந்த ரத்தினத்தை, வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம், வாச லுக்கு வெளிவரச் செய்தது.

ஆவலுடன் வெளியே வந்து பார்த்தால், வடிவுக்கரசியின் அண்ணனும், அண்ணியும் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந் தனர்.

கோபத்தில் மனம் பொங்கினாலும், ஒரு மவுன தலையசைப்புடன் அவர்களை வர வேற்று, உள்ளே அழைத்துச் சென்றார் ரத்தினம்.

இருவரும் தயங்கியபடி, ஒரு தாம்பாளத் தில் பழம், வெற்றிலைப் பாக்குடன், சித்தாமணி யின் கல்யாணப் பத்திரிகையையும் வைத்துக் கொடுத்தனர்.

மாறனின் மாமா அவரிடம், "பெரியவங்க, நீங்க எங்களை மன்னிக்கணும்... என் பொண் ணுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லை... அவ வேற ஒருத்தரை விரும்பிட்டா... ஆனாலும் நம்ம உறவு தொடரணுமேன்னு அவளுக்கு மாற னோட கல்யாணத்தை முடிச்சே ஆகணும்னு நானும் அப்பாவும் ரொம்ப முயற்சி செஞ் சோம்....

ஆனா, மாறனுக்கு இதுமாதிரி ஒரு அசம்பா விதம் நடந்த பிறகு, என் பொண்ணு பிடிவாதமா மாட்டேன்னுட்டா.... யோசிச்சுப் பாத்தப்ப என் பொண்ணு வாழ்க்கையையும் நான் சீர்தூக்கிப் பாக்க வேண்டியதாப் போச்சு....

அதான் அவ விரும்பின மாப்பிள்ளை யையே பேசி முடிவு பண்ணிட்டோம்... இது ஒரு வகையில சுயநலம் தான்... ஆனா எங்களுக்கு வேற வழி தெரியலை... எல்லாத்தையும் மறந்து நீங்க எல்லோரும் கல்யாணத்துக்கு அவசியம் வர ணும்! உங்களுக்குத்தான் முதல் பத்திரிகை வைக் கிறோம்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றனர்.

ஏற்கனவே துவண்டு போயிருந்த ரத்தினம், மவுனமாக அவர்களை வழியனுப்பி வைத்தார்.

மாறன் வீடு வந்து சேர்ந்தபோது, அவனின் முகம் இறுகி இருப்பதையும், அவன் யாரிடமும் பேச மறுப்பதையும் கண்ட ரத்தினத்துக்கு, மனம் ரத்தக் கண்ணீர் வடித்தது.

பிறகு, யாழினி அவரிடம் தனியே பேசிய போது, அவள் கண்களிலும் பெரும் சோகம் தெரிந்தது.

அவர்கள் வருவதற்குமுன், சித்தாமணியின் பெற்றோர் வந்ததையும், அவளுடைய கல்யாண விஷயத்தைப் பற்றியும் கூறியபோது, யாழினிக் குள் ஒரு வினோத உணர்வு ஏற்பட்டது.

உடனே அழவேண்டும் போல்.... பிறகு சிரிக்க வேண்டும் போல்.... கலவையான உணர் வுகள் அவளை ஆட்கொண்டன.

ரத்தினத்தின் குரல் அவளை மீட்டு வந்தது.

''எனக்கு இதை எப்படி எடுத்துக்கற துன்னே தெரியலை யாழும்மா.... இந்தக் கல்யா ணம் நின்னுடுச்சேன்னு சந்தோஷப்படறதா? இல்லை.... ஒருத்தருக்கொருத்தர் உயிரா விரும் பற நீயும் மாறனும் சேர முடியாம, அவன் கண் போயிடுச்சேன்னு கவலைப்படறதா? எனக்கு ஆண்டவன் ரொம்ப சோதனைகளைக் கொடுக் கிறான். அது ஏன்னுதான் தெரியலை'' என்ற போது, அவர் கண்களில் நீர் வழிந்தது.

அதிர்ச்சியும் வியப்புமாக நிமிர்ந்தவள், "தாத்தா... மாறனுக்குக் கண் போனதால அவரை நான் கல்யாணம் செஞ்சிக்க மறுப்பேன்னு நினைச்சீங்களா?" இப்பதான் என் காதல் இன் னும் அதிகமாகியிருக்கு

நான் ஒன்னு சொன்னா செய்விங்களா? எங்க கல்யாணத்தை உடனே நடத்த ஏற்பாடு பண்ணுங்க... மனைவிங்கற உரிமை வந்துட்டா, நான் இன்னும் நல்லா மாறனை கவனிச்சிக்க முடியும் இல்லையா?

இன்னும் ரெண்டு மாதத்தில் திரும்பவும் மாறனைச் சென்னைக்கு அழைச்சிட்டுப் போகணும்... எப்படியும் ஆபரேஷன் பண்ணி, பார்வை திரும்பக் கிடைச்சிடும்... எல்லாத்தையும் பாசிடிவ்வாவே நினைப்போமே!

ஆனா, என்ன நடந்தாலும் நான் மாறனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன் தாத்தா! அதிலே எந்த மாற்றமும் இல்லை... அதனாலே நீங்க மாறன்கிட்டப் பேசி எங்க கல்யாணத்தை முடிவு பண்ணுங்க! மத்ததெல்லாம் அப்புறம் பார்க்கலாம்'' என்றபடி செல்லும் தன் பேத்தியைப் பார்த்தபோது, மனம் இரண்டாகப் பிளந்தது ரத்தினத்துக்கு!

பிறகு, மெதுவாகத் தான் மாறனிடம் இதைப் பற்றி பேச வேண்டும் என்று மனதில் உறுதி செய்து கொண்டார் அவர்.

டாக்டர் கூறியபடி மாறனுக்கு உதவியாக, ஒரு வாக்கிங் ஸ்டிக் வாங்கி வந்திருந்தான் குமரன்.

ஆனால், மாறன் தன் அறையை விட்டு வெளியில் வரவே மறுத்து விட்டான்.

அவன் கம்பீரமாக வலம் வந்த அந்த வீட்டில் பிறர் பார்க்கத் தடுமாறுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

இன்று மனதால் ஓய்ந்து போயிருந்த அவனைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை, யாழினியால்! மனதளவில் உடைந்து போயிருந்தான் அவன்.

ஆனால், அவனுடைய கம்பீரம் மட்டும் தொலையாமல், வானத்து சூரியனாய் அஸ்தமனமின்றி அப்படியே இருந்தது.

அன்று மாறனிடம் இதுபற்றிப் பேசுவதாக ரத்தினம் கூறவும், அவரையும் மாறனையும் தனியே இருக்கும்படி விட்டுவிட்டு, வெளியில் வந்து தோப்புக்குள் சென்ற யாழினி, ஒரு மரத்தினடியில் அமர்ந்தாள்.

மனதை அழுத்தியிருந்த சோகத்துக்கு, கண்களின் வழியே கண்ணீரால் விடை கொடுத்த போது, கண்களின் சாரல் கன்னங்களில் இறங்கி மார்பை நனைக்க, மனம் சமாதானமடைய மறுத்தது.

மாறனின் முன்பு தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு இருந்தவள், தனிமையில் தன் உள் மனதின் சோகத்தைக் கண்ணீரில் கரைத்துக் கொண்டாள்.

யாரோ தன்னைத் தொடுவது போல் தோன்றவும் கண் விழித்தால், அவள் எதிரில் ரத்தினம் அமர்ந்திருந்தார்.

''தாத்தா'' என்ற கதறலுடன் அவர் மார்பில் முகம் புதைத்தாள் அவள். அவளுடைய அழுகை ஓயும் வரை காத்திருந்தார் ரத்தினவேலு.

அவளை மெல்ல அமைதிப்படுத்தியவர், ''மாறன் உன்கிட்ட ஏதோ பேசணுமாம்டா! உன்னைக் கூப்பிடறான்...வா! வீட்டுக்குப் போகலாம்'' என்று அழைத்துச் சென்றவர், அவளை அவனுடைய அறைக்கு அனுப்பிவிட்டு, நேரே பூஜை அறைக்குள் சென்றார்.

யாழினி உள்ளே வருவதை உணர்ந்த மாறன், ''யாழினி...! என் எதிர்லே வாயேன்!'' என்றான்.

அவன் அருகில் வந்து அமர்ந்தவள், ''என்கிட்ட ஏதோ பேசணும்னு சொன்னீங்கன்னு தாத்தா சொன்னாங்க... என்ன விஷயம்?'' என்றாள் சோர்ந்த குரலில்.

மாறன் ஒரு கணம் தயங்கி, ''நீ நிச்சயம் பண்ண சொன்ன நம்ம கல்யாணத்தை நிறுத்த சொல்லிட்டேன் யாழினி... இனிமே கல்யாணம்ங்கிறதே என் வாழ்க்கையில் கிடையாதுன்னும் முடிவெடுத்துட்டேன்... அதைச் சொல்லத் தான் உன்னை கூப்பிட்டேன்'' என்றான் விழிகளை எங்கோ பதித்து!

அவன் பேசியதன் அர்த்தம் புரிந்து அதிர்ந்து போனவள், ''என்னது? நீங்க என்ன அதைச் சொல்றது? நான் அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்! நான் உங்களைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்'' என்றாள் அழுத்தமான குரலில், கோபத்துடன்!

''ஆனா, நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்க முடியாது'' என்றான் மாறன் கோபமாக.

அவன் கோப வார்த்தைகள், சாட்டையாய் சுழன்று அவளை அடித்தன.

## உடல் பருமன் குறைய

தண்டுக்கீரையில் செய்கீரைத் தண்டு, வெங்கீரைத் தண்டு என இரண்டு வகை உண்டு. செய்கீரைத்தண்டு சிறுநீர் பிரச்சினையை தீர்க்கும். பித்தத்தை அகற்றும். வெங்கீரைத்தண்டுக் கீரை மேகம் மூலம், வயிற்றுக் கடுப்பு ஆகியவற்றை

# தண்டுக்கீரை

குணப்படுத்துவதுடன் உடல் வெப்பத்தை தணித்து ரத்தத்தை சுத்தப்படுத்தும். ரத்தத்தில் கொழுப்பை கரைக்கவும், தேவையற்ற உடல் பருமனை குறைக்கவும் பயன்படுகிறது.



"நேரா நீங்க என்னைத்தான் விரும்பறீங்க... என்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பீங்க" உறுதியுடன் கூறினாள்.

"பைத்தியக்காரத்தனமா பேசாதே யாழினி! விரும்பறது வேற... தொந்தம்கிறது வேற! ஒரு குருடனைக் கல்யாணம் பண்ணிக் கிட்டு உன்னால நிச்சயமா சந்தோஷமா வாழ முடியாது."

"எனக்கு எது சந்தோஷம்னு உங்களுக்கு எப்படி தெரியும்? எனக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதிலதான் சந்தோஷமே! நான் என் மனசை யாருக்காகவும் மாத்திக்க மாட்டேன்"

"ஆனா, நான் என்னோட மனசை மாத்திக் கிட்டு கொஞ்ச நாளாச்சு... நானே உனக்கு நல்ல மாப்பிள்ளையா பாத்து... சே! இந்தக் கண் வேற! சரி, தாத்தாவை விட்டுப் பாக்கச் சொல்லி உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்."

"யார் பாத்தாலும், என்ன சொன்னாலும் நான் மாற மாட்டேன் மாறன்... அவ்வளவு தான்!" என்றாள் முடிவாக.

"என் யாழினி! நீயும் என்னைக் கொல்றே? பார்வைதான் என்னை விட்டுப் போச்சின்னா, உயிரையும் சேர்த்து எடுத்துடுவே போலிருக்கு!" வேதனை மிகுந்து தெரிந்தது அவன் குரலில்.

"உங்க உயிரை எல்லாம், எப்பவோ நான் எடுத்துக்கிட்டாச்சு... உங்ககிட்டே இருக்கிற என் உயிரை நீங்க கொன்னுடாதீங்க!" என்றாள் அவள் வேகமாக.

"நான் ஒரு குருடன் யாழினி! கண்ணில்லாதவனால உனக்கு என்ன பிரயோஜனம் சொல்லு?"

"ஓஹோ! இப்பதானே உங்க குணம் தெரியுது. இதுவே எனக்குப் பார்வை தெரியாமல் போயிருந்தா, உடனே வேற ஒரு பொண்ணைப் பார்த்து, சந்தோஷமா கல்யாணம் பண்ணிக்கிட்டு இருந்திருப்பீங்க அப்படித்தானே."

"என்னை என்ன சிந்தாமணின்னு நினைச்சியா... ஏய்!" என்றபடி எழுந்தவன், உடனே சமாதானமாகி, "சொன்னாப் புரிஞ்சிக்க யாழினி! நீ வாழ வேண்டியவ... நான் உன் வாழ்க்கையைக் கெடுக்க மாட்டேன். நீ சந்தோஷமா இருக்கணும்."

"நான் சந்தோஷமாதானே இருக்கணும், அப்படின்னா பேசாம இருங்க! நான் எல்லாம் பாத்துக்கறேன்" என்றாள் அவள் பிடிவாதத்துடன்.

"குருடனா மட்டும் இப்ப இருக்கேன்! ஊமையாகவும் இருன்னு சொல்றே! அதானே!" என்று அவன் கூறியதும் பதறிப்போய் அவன் அருகில் வந்தாள் யாழினி.

அவனிடம் மெதுவாக "மனசு ஊனமா போகக்கூடாது மாறன்....! உடம்பு ஊனமா இருக்கலாம்! அது இயற்கையோ, இல்லை விபத்தோ.... எதுவானாலும் இருக்கட்டும்... மனசு மட்டும் ஊனமாப் போகக் கூடாது! இப்ப நம்ம ரெண்டு பேருக்குமே முதல்லே என்ன தேவை? நம்பிக்கையும், தைரியமும் தான்....! நான், என்ன ஆனாலும் சரி உங்களை விட்டுட்டுப் போக மாட்டேன்!" என்று கூறி விட்டு, அவன் கேசத்தை மென்மையாகக் கோதி விட்டு, வழிந்த கண்ணீரை, கண்களுக்குக் காட்டாமல், இமைக்குள் மறைத்துக் கொண்டாள்.

அந்த நேரத்தில், தேவ் என்ற மயிலிறகு ஒன்று அவன் மனக் காயத்தை வருடிய

அவள், அந்த நிமிடமே அவனுக்கு ஒரு தாயாக மாறினாள்.

## 14

யாழினியும், மாறனும் பேசிக் கொண்டிருந்தபோது, வெளியே கதவருகே நின்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இருந்த வடிவு, வாயைப் பொத்தியபடி அழுதுக் கொண்டே சென்று, ஹாலில் அமர்ந்து அழ ஆரம்பித்தார்.

அப்போதுதான், தன் அறையிலிருந்து வெளியே வந்த குமரன் பதட்டமாகி, பெரியம்மாவிடம் சென்று அமர்ந்து அவரை ஆறுதல் படுத்தினான்.

இறைவனிடம், தன் வேண்டுதலை முடித்துக்கொண்டு வந்த ரத்தினவேலுவும், அங்கு வந்து அவர்களுடன் அமர்ந்து, குமரனிடம் கேட்டு விஷயத்தை அறிந்தார்.

அந்த வருத்தமான நிலைமையிலும், மனம் நிறைந்த புன்னகையை அவர் முகம் வெளியிட்டது.

அறைக்குள் மாறனின் முகம், சொல்லொணாத வேதனையில் தவிக்க, தன்னுடைய மனதுக்கினியவள் தன் அருகில் இருந்தாலும், அவளின் உறுதியான முடிவு, அவன் இதயத்தை கசக்கிப் பிழிந்தது.

இதுவரை, எந்தப் பெண்ணும் சலனப்படுத்த முடியாத, தன் மனக்குளத்தில் பெரும் சலனத்தை... காதல் அலைகளை ஏற்படுத்தியவளுக்கு, தன்னால் ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர முடியுமா என்ற கேள்விக்குறி எழுந்தது.

அவனுக்குள், எதிர்காலமும் பெரும் கேள்விக்குறியாய் விரிய, ஊன்றுகோலுடன் தன் வாழ்க்கையை இணைத்து, அவனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

யாழினி அவனை, ஒரு சேய்போல் கவனித்துக் கொண்டாள். வடிவு, யாழினியிடம் தன் உயிரையே ஒப்படைத்தார்.

தினமும் பேப்பர் படித்துக் காட்டுவது, சாப்பிட வைப்பது, அருகில் அமர்ந்து கையைப் பிடித்துக்கொண்டு துணை இருப்பது, அவனை உறங்கும்போதும் பாதுகாப்பது என்று மாறனை விட்டு நொடியும் விலகாமல், அவனுடனே இருந்தாள் யாழினி.

அவன் குளிக்கும்போதும், மற்ற நேரங்களிலும், குமரன் துணை இருந்தான். அவன் வெளியே செல்லும் நேரங்களில், வடிவு மாறனுடன் இருக்க, அந்த நேரங்களில், ஒரு பண்ணையாளை, அருகிலேயே இருக்கச் சொன்னான் மாறன்.

இப்போதெல்லாம் மாறன் அதிகம் பேசுவதில்லை. ஏதோ யோசனையிலேயே ஆழ்ந்து, விரக்தியின் எல்லையில் இருந்ததால், யாழினி அவனை உற்சாகப்படுத்த, தன்னாலான முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அவன் அறையில், மாலையில் டி.வி. போட்டுவிட்டு, செய்திகள் வைத்து விடுவாள். இரவு உறங்குவதற்கு முன், மனதுக்கு அமைதி தரும் மெல்லிய பாடல்களை சி.டி.யில் போட்டு விடுவாள்.

காலையில் தாத்தா, அப்பா, அம்மா என்று அவனுடன் யாராவது பேசிக்கொண்டு இருப்பார்கள். அவனிடம் காலையில் பேசிய பிறகுதான், குமரனும் வெளியில் செல்வான்.

தொழில் முறையில் அனைவரும், அவனிடம் கலந்து ஆலோசிக்காமல் எதுவுமே செய்வதில்லை. ஆனாலும், அவனுடைய பார்வை இழப்பு, தாங்க முடியாததாகவே இருந்தது.

இடையில் சிந்தாமணியின் திருமண நாளும் வர, அந்தத் திருமணத்திற்கு வர மறுத்த மாறனின் தந்தையை, யாழினிதான் வற்புறுத்தி அழைத்துச் சென்றாள். அவர்களுடன் வடிவு மட்டும் சென்றார்.

மண்டபத்தின் வாசலுக்கே ஓடிவந்து அவர்களை வரவேற்ற சிந்தாமணியின் தந்தை, அவர்களை முன் வரிசையில் அமர வைத்தார். பிறகு, குடும்பத்தினர் அனைவரும் வந்து அவர்களிடம் பேசிவிட்டுச் சென்றனர்.

திருமணம் விமரிசையாக நடந்து முடிய, தன் பரிசாக ஒரு மோதிரத்தை சிந்தாமணிக்கு அணிவித்தாள் யாழினி. பிடிவாதத்துடன் தன் காதலில் ஜெயித்த சிந்தாமணியை மகிழ்ச்சியுடன் வாழ்த்தினாள். அவர்கள் வீட்டுப் பரிசாக வடிவு, சிந்தாமணிக்கு ஒரு நெக்லஸ் செட்டை அளித்தார்.

மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் மரியாதை செய்து, பட்டுப் புடவை, வேஷ்டி என்று வைத்து, வடிவிடம் தந்தார் அவருடைய அம்மா!

பிறகு, எந்த மாற்றமுமின்றி காலம் செல்ல, ஒரு நாள் மதியம் யாழினி மங்கையிடம், தன் மனதைக் கொட்டி அழுதுவிட்டுத் திரும்பிவரும் போதே, எதிரில் வந்த குமரன் அவளை மாறன் தேடுவதாகக் கூறினான்.

வேகமாகத் தன்னை சீர்படுத்திக் கொண்டு, அவனுடைய அறைக்குள் சென்றவள், "என்ன எழுந்திரிச்சிட்டீங்களா? நான் மங்கை

கிட்டப் பேசிட்டு இருந்தேன்... காபி எடுத்துட்டு வரவா?'' என்று பரிவுடன் கேட்டாள்.

''ஒரு நிமிஷம் என்கிட்ட வா!'' என்றவன், அவள் அருகில் வந்தவுடன், கையை உயர்த்தினான். அவள் கையைப் பிடித்தவுடன், ''அழுதியா யாழினி? குரல் என்னவோபோல் இருக்கு?'' என்றான் ஒருவித கவலையுடன்.

மெதுவாக ''இல்லை, சளி பிடிச்சிருக்கு! அதான் குரல் இப்படி இருக்கு'' என்றாள் அவள்.

சிறிதுநேரம் அமைதியாக இருந்துவிட்டு, ''பொய் சொல்லாதே யாழினி! இவனுக்கு எங்கே கண் தெரியப் போகுதுன்னுதானே அழலைங்கறே... ஆனா உன்னோட ஒவ்வொரு அசைவும் எனக்குத் தெரியும்... என்னாலப் புரிஞ்சிக்க முடியும்!'' என்றபோது, யாழினி அப்படியே உடைந்துபோய், அவன் மார்பிலேயே சாய்ந்து அழ ஆரம்பித்தாள்.

அவளை, அப்படியே அணைத்து ஆறுதல் படுத்தியவனுக்கு, அந்த நிமிடம் தன் மேலேயே வெறுப்பாக இருந்தது.

காயம்பட்ட குழந்தைபோல் அழும் அவளை, அவனால் உணர முடிந்தது.

காதல் என்பது தென்றல்போல இதுவரை உணரத்தான் முடிந்தது. ஆனால் ஒரு உருவமாய், அவனுக்கு இன்றுதான் புலப்பட்டது. காதலாகிக் கசிந்துருகினான் மாறன், யாழினியின் அன்பினால்!

அந்த நொடி, தன் சுயநலத்தின் காரணமாக, மாறனுக்குத் தன் மீதே வெறுப்பு வந்தது. யாழினியை, நன்றாக வாழ வைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை, மறு நாளிலிருந்தே அவன் செய்ய ஆரம்பித்தான்.

அவளறியாமல் தாத்தாவிடம் பேசியவன், அவளுக்குத் தெரியாமலே, அவளுடைய அப்பாவின் நெருங்கிய நண்பர் வேணுகோபாலை, குமரனை விட்டு வரவழைத்தான்.

அவளைப் பார்க்கவென்று வந்ததுபோல், மாறனின் அழைப்புக்கு இணங்கி வந்தார் அவர். அவருடைய பொறுப்பில்தான் சென்னை வீட்டை ஒப்படைத்திருந்தனர்.

சிறுவயது முதலே இரு குடும்பமும் நெருங்கிய நட்புடன் இருந்ததால், அவரிடம் யாழினியின் ஜாதகத்தைக் கொடுத்து, மாப்பிள்ளை பார்க்கச் சொன்னான் மாறன்.

யாழினி அருகில் இல்லாதபோது, தெரியாமல் குமரனைவிட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்தாலும், அவன் மனதில் மட்டும் மெலிதாய் சோகச் சலங்கைகளின் மொழி!

குமரனுக்குத்தான் தாங்க முடியாமல் இதயத்தில் கண்ணீர் வழிந்தது. யாழினிக்காக அவனும், மாறனுக்காக அவளும் உருகுவதும் பரிதவிப்பதும் புரிந்து, மனதில் எல்லையில்லாத சோகம் வந்தது.

அவர்கள் இருவரையும் பார்க்கும்போது, தன் இணைக்காகத் தன் உயிரையே பரிசாகத் தரும் அன்றில் பறவைகளாகத் தோன்றியது.

தாத்தா ரத்தினவேலுவும் மிகவும் உடைந்து போனார். ஆனால் யாழினியின் விஷயத்தில் பிடிவாதமாக இருந்தான், மாறன்.

வேணுகோபால் சென்னைக்குத் திரும்பிச் சென்ற மறு வாரமே, குமரனுக்குப் போன் செய்தார். தன் மகன் பிரகாஷுக்கு, யாழினியின் மேல் விருப்பம் இருப்பதாகவும், ஜாதகமும் நன்றாக பொருந்துவதாகவும் தெரிவித்தார், அவர்.

பிரகாஷ், சென்னையில் கம்ப்யூட்டர் என்ஜினீயராக இருந்தான்.

அடுத்த வாரம், பிரகாஷ் வரப்போவதாக குமரன் வந்து கூறியவுடன், தான் சந்தோஷப்படுகிறோமா அல்லது வருத்தப்படுகிறோமா என்று இனம் காண முடியாமல் தவித்தான் மாறன்.

அன்று, உன்னை நேசித்ததைத் தவிர்த்திருந்தால், இன்று என் மனம் உடைந்து போனதையும் தடுத்திருக்கலாம் என்று எண்ணியது நெஞ்சம்.

## 15

மறுவாரமே பிரகாஷ் வந்து விட்டான். யாழினி, அவனை மகிழ்ச்சியுடன் இயல்பாக வரவேற்றாள்.

''என்ன பிரகாஷ்? முதல்ல அங்கிள் வந்தார். இப்ப நீ வர்றே? இந்த கிராமத்தை சுத்திப் பாக்கணும்னு ஆசையா?'' என்று கேட்டுவிட்டு, அவனை அழைத்துச் சென்று மாறனிடம் அறிமுகப்படுத்தினாள்.

''பிரகாஷ்! இவர்தான் என்னோட வருங்காலக் கணவர் மாறன்'' என்று கூறிவிட்டு, பிரகாஷை அவனுக்கு அறிமுகப்படுத்திய போது இருவரின் விழிகளிலும் யோசனைத் துளிகள்!

அன்று மதியம் சாப்பிட்டுவிட்டு அவன் ஓய்வெடுக்கும் போது, மாறனுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த யாழினியிடம், மாலையில் பிரகாஷை அழைத்துக் கொண்டு ஊரைச் சுற்றிக் காட்டிவிட்டு வரச் சொன்னான்.

மாலையில் மெதுவாக நடந்து ஊரைச் சுற்றியபடி பிரகாஷுடன் தோப்பைக் கடந்து ஓடை

யின் அருகில் சென்ற போது, "ஒரு நிமிஷம் யாழினி!" என்று நிறுத்தினான்.

"மாறனை உன் வருங்காலக் கணவர்னு சொல்றே! ஆனா, அவர் அப்பா கிட்ட சொல்லி உனக்கு மாப்பிள்ளை பாக்கணும்னு சொல்லி இருக்கார். அப்பா இதை சொன்னப்ப நான் என்னோட விருப்பத்தைச் சொன்னேன். அவரே உன்னை நேரில் பாத்து, உன் விருப்பத்தை தெரிஞ்சுகிட்டு வரச் சொன்னார்" என்றான் அவன்.

ஒரு கணம் அதிர்ந்தவள் "இது தாத்தாவுக்குத் தெரியுமா பிரகாஷ்?" என்று கோபத்துடன் கேட்டாள்.


"தெரியும்னுதான் நினைக்கிறேன்" என்றான் பிரகாஷ் தர்மசங்கடத்துடன்.

அவனிடம் "சாரி பிரகாஷ்! என்னைத் தப்பா நினைச்சுக்காதே... நான் உன்னை ஒரு நல்ல நண்பனாத்தான் நினைக்கிறேன்! ஆனா மாறனை உயிருக்கு உயிரா விரும்பறேன்! என்னை நீயாவது புரிஞ்சுக்கோ பிரகாஷ்! ப்ளீஸ்!" என்று கூறிவிட்டு, வேகமாக முன்னால் செல்லும் அவளையே ஏதோ புரிந்தாற்போல் பார்த்தான் அவன்.

அவனுக்கு அவளின் நேசம் புரிந்தது. மனதிற்குள் இனம்புரியாத சோகம் மையம் கொண்டது.

வேகமாக வீட்டுக்குள் வந்த யாழினி, ஹாலில் அமர்ந்திருந்த தாத்தாவிடமும், மாலினிடமும் தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று கூறிவிட்டு தன் அறைக்குள் சென்று அடைக்கலம் புகுந்தாள்.

மனம் மிகவும் பலவீனமாகி இருந்தது.





மாறன் என் தன்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான் என்று ரத்தக் கண்ணீர் வடித்தது மனது. கண்ணீரில் கரைந்தான் அவள்.

அறிவு மிகுதியுடன், அனைவரின் பிரச்சினையையும் அலசி ஆராய்ந்து தீர்ப்பு சொல்லும் அவன், இன்று தன் சொந்தப் பிரச்சினைகளை எதிர்க்கத் துணிவின்றி தன்னைப் பிறர்வசம் ஒப்படைக்கத் துடிப்பது, புதிராக இருந்தது அவளுக்கு.

அவனிடம், தனக்கு ஏற்பட்ட அந்த ஈர்ப்பு நிலை, உணர்ச்சிபூர்வமாக மட்டுமின்றி உயர்ந்த நிலையில் ஏற்பட்டது புரிந்தது.

தன்னை எந்தது அவன் புற [illegible]

மட்டுமில்லை, அக அழகும்தான் என்பது அவனுக்குப் புரியவில்லையே என்று ஏக்கமாக இருந்தது.

ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, சிறிது நேரம் கழித்து பிரகாஷ் வீட்டுக்குள் வந்தான். தாத்தாவிடமும், குமரனிடமும் விடை பெற்றவன், மாறனிடம் தான் யாழினியிடம் பேசி விட்டதாகச் சொல்லும்படி கூறிவிட்டு உடனே ஊருக்குக் கிளம்பி விட்டான்.

மாறன் இவை எதையுமே அறியவில்லை. பிரகாஷை அழைத்துக் கொண்டு யாழினி சென்ற உடனே அவன் மனம் மிகவும் அலை பாய்ந்தது.

ஒருபுறம், அவளுடைய வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்பினாலும், மறுபுறம் அவளின் பிரிவைத் தன்னால் தாங்க முடியுமா என்ற பயமும் மனம் முழுவதும் பரவியது.

அவளுடைய ரசனை, பேச்சு, அறிவு, அமைதி எல்லாம் அவனுடைய மனக் கண்ணில் வலம் வந்தன.

அவளுடன் சேர்ந்து ரசிக்க, ருசிக்க, நுகர, பரவசப்பட எத்தனை கோடி விஷயங்களை மனம் பட்டியலிட்டு வைத்திருந்ததும் நினைவுக்கு வர மனதில் ஆழ்ந்த சோகம் முளை விட்டது.

அவளுடன் இன்றே, இந்த வாழ்க்கையை வாழ்ந்து தீர்த்து விட வேண்டும் போல் இருந்தது மாறனுக்கு!

அறைக்குள் யாரோ வரும் அரவம் கேட்டு, "யாரு?" என்று நிமிர்ந்த போது, "நான் தாண்ணா!" என்று கூறியபடி வந்தான் குமரன்.

"பிரகாஷ் ஊருக்குப் போயிட்டாருண்ணா! உங்ககிட்டச் சொல்லச் சொன்னாரு" என்று தயக்கமாகக் கூறியபடி மாறனின் முகத்தையே பார்த்தான் குமரன்.

அவன் முகத்தில் உடனே சந்தோஷமும், நிம்மதியும், பிறகு வேதனையும் தொடர்ந்து வந்தது கண்டு மனம் நொந்தது குமரனுக்கு!

மாறன் உடனே, "இப்ப யாழினி எங்கே?" என்றான் பதட்டமாக.

"பிரகாஷோட வெளியே போய்விட்டு வந்து, தன் அறைக்குள்ளே போய் கதவைச் சாத்தினவங்கதான்... இன்னும் வெளியே வரலை!" என்றான் குமரன்.

யோசனையாக "பிரகாஷ் என்ன சொன்னார்?" என்றான் மாறன் ஆவலுடன்.

"யாழினி அவர்கிட்டே, உங்களைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறதாகவும் அவரை ஒரு நல்ல நண்பரா மட்டுமே நினைக்கிறதாகவும் சொல்லியிருப்பாங்க. அதான் அவர் உடனே கிளம்பிட்டாரு!" என்றான்.

"நான் யாழினிய உடனே பாக்கணும்" என்றவன் 'சே!' என்று படுக்கையில் குத்திவிட்டு சோர்வுடன், "யாழினிய உடனே இங்கு அழைச்சிட்டு வரியா?" என்றான்.

குமரனுக்கு கடவுளின் மேல் கோபம் வந்தது. வெளியே சென்று யாழினியின் அறைக் கதவைத் தட்டினான்.

வெகு நேரம் ஆயிற்று அவள் கதவைத் திறக்க! குமரன் தன் விழிக்கதவுகள் விரித்து அறையின் வெளியே காத்திருந்தான்.

கதவைத் திறந்த யாழினியின் முகம், அழுததில் வீங்கிச் சிவந்து இருந்தது.

"அண்ணன் உங்களோட ஏதோ பேசணுமாம்... வரச் சொன்னார், யாழினி!" என்றான் குமரன்.

முதலில் மறுக்க நினைத்தவள், "சரி! நான் வரேன்னு போய் சொல்லுங்க!" என்று கூறிவிட்டு, குளியல் அறைக்குச் சென்று முகம் கழுவிவிட்டு ஒரு முடிவுடன் மாறனின் அறைக்குச் சென்றாள்.

அவள் வருகையை அவனுடைய காலடி ஓசை அவனுக்கு உணர்த்திய போது "யாழினி!" என்றான் மாறன் உணர்ச்சியுடன்.

அவள் பதிலே கூறவில்லை. அவன் எதிரில் வந்து அமர்ந்தவள், ஏனோ மவுனமாகவே இருந்தாள்.

"என் கூடப் பேச மாட்டியா? என் மேல கோபமா?" என்று கேட்கும் போதே, அவன் குரல் பிசிறு தட்டியது.

பிறகு அவனிடம், "அன்பு செஞ்சா கர்வம் அழியும்னு, எனக்குச் சொல்லித் தந்தவளே நீதானே! ஆனா இப்ப என்னோட நிலைமை என்னன்னு புரிஞ்சிக்க யாழினி! உன்னோட நல்லதுக்காகத்தான், நான் எல்லாமே பண்றேன். என்னை நீயும் புரிஞ்சிக்கலேன்னா, நான் என்னதான் செய்யறது?" என்றான் வருத்தமாக.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மவுனமாக அமர்ந்திருந்த யாழினி, எழுந்து அவன் அருகில் மெதுவாக வந்தாள்.

இரு கைகளாலும் அவன் முகத்தை ஏந்தி, "இனிமே ஒரு தடவை இந்த மாதிரி செஞ்சிங்கன்னா, நான் இந்த வீட்டை விட்டு வெளியே போயிடுவேன் மாறன்! அப்புறம் நான் இங்கே திரும்பி வரவே மாட்டேன்" என்று கூறிவிட்டு, வேகமாக அந்த அறையை விட்டு வெளியே சென்று தன் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

தன்னைப் புரிந்து கொள்ளாமல் திருமணத்

னைப் புறக்கணித்து, மாப்பிள்ளை பார்க்கிறேனென்று தன்னையே வதைத்துக் கொள்கின்ற மாறனின் நினைவுகள், மனதில் முட்களாய் கீறிக் காயங்களை வரவழைக்க, அதற்கு மருந்தாய் இசையை மனதிற்குள் பெருக விட்டு, இயல்பாக முயற்சித்தாள் அவள்!

கோபழுத்தத்தின் வெளிப்பாடே அழுகை என்பது புரிய, இனிமையான சங்கீதம் செவி வழியே மனதில் நுழைந்து அதன் கீறல்களை ஆற்றி அமைதி தந்தது.

## 16

கண்களில் கண்ணீர் வற்றிவிட, ஓய்ந்து போய் படுத்திருந்த யாழினி மனதில் 'உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு! என் உள்நெஞ்சு சொல்கின்றது' என்ற பாடல் வரிகள் ஏனோ சிறகாய் வருடின.

'நீ வீரமான கள்ளன், உள்ளூரும் சொல்லுது... நீ ஈரமான பாறை, என் உள்ளம் சொல்லுது! உன்னை மொத்தம் நேசிக்கிறேன்... உந்தன் மூச்சை சுவாசிக்கிறேன்!' என்ற வரிகள் தங்கள் இருவருக்காகவே எழுதப்பட்டதாகத் தோன்றியது!

அங்கு மாறன், யாழினியின் கோபம் கலந்த ஆழமான அன்பில் நெகிழ்ந்து போயிருந்தான். தன் மேல் அவள் கொண்ட நேசம், ஒரு வரமாய் தோன்றியது.

பாறையென இறுகியிருந்த தன் மனதில், பாசம் என்ற உளியை வைத்து, காதல் எனும் சிற்பத்தை செதுக்கியவளின் மேல், மனம் தன் நிலை இழந்து மருவக் காதல் கொண்டது.

உள்ளம் அவளை நினைத்து மருகி விட, அவளை யாருக்கும் விட்டுத் தரக்கூடாதென்ற வேகமும், அவள் என்னுடையவள் என்ற ஆளுமையும் அந்த நிமிடம் வந்தது.

மறுநாள் காலையிலிருந்து, யாழினி மாறனிடம் இருந்து ஒதுங்கியே இருந்தாள்.

மங்கையின் அருகில் அமர்ந்து, அவளுக்குத் துணையாகப் பேசிக் கொண்டு இருந்தாள். தினமும் வளவன், மங்கையையும் மாறனையும் பார்க்க இங்கு வந்து விடுவான்.

அது போல் அன்றும் காலையிலேயே வந்த வளவனைக் கண்டதும் எழுந்தவள், ''வாங்கண்ணா!' அப்பாடா! மங்கை முகத்துல இப்பதான் லட்சம் சூரியன் ஒண்ணா வந்த மாதிரிப் பிரகாசம் தெரியுது... என்னதான் நாங்க எல்லோரும் இருந்தாலும், நீங்க வந்தவுடனே ஒரு தேஜஸ் வருது பாருங்க!'' என்று கூறி, கிண்டலாக சிரித்து விட்டு எழுந்தாள்.

மங்கை உடனே, ''நானாவது பரவாயில்லை... ஒருத்தர் என்னடான்னா, தன் ஆளைப் பாத்த உடனே, நம்ம எல்லாரையும் மறந்துடறாங்க... போனாப் போகுதுன்னு இன்னிக்கு, அவங்க காத்து இந்தப் பக்கம் லேசா அடிக்குது!'' என்றாள் குறும்பாக.

''சரி! நான் வரேன்ப்பா... அப்புறம் கரடின்னு என்னை நீங்க ரெண்டு பேரும் மனசுக்குள்ளே திட்டினாலும் திட்டுவீங்க'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்று, அல்லி மாமியிடம் வளவன் வந்திருப்பதைக் கூறிவிட்டு, தாத்தாவிடம் சென்றாள் யாழினி!

தாத்தா அப்போதுதான் குளித்து, சூரிய நமஸ்காரம் முடித்து விட்டு வந்திருந்தவர், ''வாம்மா! மாறன் எப்படி இருக்கான்?'' என்றார்.

''நான் காலையிலிருந்து அவரைப் போய் பாக்கவே இல்லை தாத்தா! வடிவு மாமிதான் கூட இருக்காங்க... சும்மா அப்படியே எட்டிப் பாத்துட்டு நான் வந்துட்டேன்'' என்றாள்.

அவளைத் தன் அருகே உட்காரச் சொன்னவர், ''என் பேரனும் பேத்தியும் இணையறதிலே, எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? ஆனா, கடவுள் என்னை ஏன் இப்படி சோதிக்கிறான்னு தெரியலையே? தினமும் உங்க ரெண்டு பேருக்

# நினைவாற்றலை அதிகரிக்கும் வல்லாரை

வல்லாரைக் கீரை பொதுவாக மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. நினைவாற்றலை அதிகரிக்கும். இருதயத்துக்கு பலம் சேர்க்கும். காமாலை, தொழுநோய், வாதநோய், சீரிழிவு, யானைக்கால் நோய் ஆகியவற்றை குணப்படுத்தும். கண் நோய்களுக்கும் வல்லாரை சிறந்த மருந்து. ரத்தத்தையும் சுத்தப் படுத்தும்.

வல்லாரைக் கீரையை வாயில்

காகத் தான் நான் கடவுளை வேண்டிக்கிறேன்டா... என் பேரனுக்கு எந்தக் குறையும் இல்லாம செய்து, நீதான் அவங்க வாழ்க்கையில் மலர்ச்சியைத் தரணும்னு வேண்டிக்கறேன்'' என்றார் பெருமூச்சுடன்.

அப்போது உள்ளே வந்த குமரன், ''உங்களை எங்க எல்லாம் தேடறது? அண்ணன் அங்கே சாப்பிட மாட்டேன்னு அடம் பண்ணிக்கிட்டு இருக்கார்... உங்களை உடனே பாக்கணுமாம்'' என்றான்.

வேகமாக எழுந்து மாறனின் அறைக்குச் சென்ற யாழினி, தான் சென்றதும், சோக முறுவலுடன் வடிவு மாமி வெளியேறுவதைக் கண்டாள்.

ஆவலுடன் ''யாழினி!'' என்று அழைத்தவன், அவள் தன் அருகில் அமர்ந்ததை உணர்ந்ததுமே, படபடப்பு தணிந்தான்.

''ஏன் காலைலேருந்து என்னைப் பாக்க வரலை... கடவுளுக்குத்தான் என்னைப் பிடிக்காமப் போச்சுன்னா, உனக்கும் என்னைப் பிடிக்கலையா?'' என்றான் ஆதங்கத்துடன்!

அவன் உதடுகளை, தன் விரல்களால் மென்மையாகப் பொத்திய யாழினி, ''ப்ளீஸ்!'' என்றாள் குமுறலுடன்.

அவள் விரல்களை அப்படியே பிடித்து, தன் உதடுகளில் அழுந்த முத்தமிட்டவன், அவளைதன் அறையிலிருந்து, அன்று முழுவதும் வெளியே செல்வதற்கு அனுமதிக்கவே இல்லை... பிறகும் இதுவே தொடர்ந்தது.

போட்டு மென்று விழுங்கினால் குடல் புண், வாய்ப்புண், வாய் நாற்றம் குணமாகும்.



மறு வாரமே யாழினியின் தந்தையின் நண்பர், மாறனை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வரச் சொல்லி, போன் செய்திருந்தார்.

அடுத்த வாரமே, மாறனுடன் யாழினியும், தாத்தாவும், அவன் பெற்றோரும் சென்னைக்குச் சென்றனர்.

தங்கள் வீட்டையே சுத்தம் செய்து வைக்கும்படி யாழினி, வேணுகோபாலிடம் கூறி இருந்ததால், அவரும் தயாராகவே வைத்திருந்தார்.

டாக்டரிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கி மாறனை அவரிடம் அழைத்துச் சென்றபோது, வெளி நாட்டிலிருந்து இரண்டு நாட்களில் அந்தப் பிரபல கண் மருத்துவர் வருவதாகவும், மற்ற பரிசோதனைகளை முடித்து விட்டு அவர் வரும் வரை காத்திருக்கும்படியும், சிவராமனின் நண்பர் கூறினார்.

மாறனுக்குத் தன் கண்கள் வெளிச்சப்பூக்களை வருடுமென்ற நம்பிக்கையே இல்லை! யாழினியும், மற்றவர்களும்தான் நம்பிக்கையோடு காத்திருந்தார்கள். அடிக்கடி வந்து கவனித்துக் கொண்ட பிரகாஷும் அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்தான்.

மூன்றாவது நாளே வந்த அந்த டாக்டர், மாறனுக்கு அறுவை சிகிச்சை செய்தால், கண் பார்வை திரும்புவதற்கு ஐம்பது சதவீதம் வாய்ப்பு இருப்பதாகக் கூறினார்.

உடனே ஆபரேஷனுக்கான எல்லா ஏற்பாடுகளையும் தயார் செய்தனர். மாறன் மனதளவில் தொய்ந்து போய் இருந்தாலும், அனைவரும் கொடுத்த நம்பிக்கை எனும் மாமருந்து நன்கு வேலை செய்தது! எல்லா பரிசோதனைகளும் முடிந்து தயாராக இருந்ததால், அடுத்த நாளே ஆபரேஷன் நடந்தது.

குமரன், ஊரிலிருந்து வந்து, மாறனின் அருகிலேயே தங்கி இருந்தான்.

காலையிலிருந்து தேவையான ஏற்பாடுகளை செய்து, டெஸ்ட் எல்லாம் எடுத்து, தயார் செய்த பிறகு, ஒரு பெரிய மருத்துவக் குழுவே, மதியம் அறுவை சிகிச்சையில் ஈடுபட்டது.

இரண்டு மணி நேரம் கழித்து ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்ததாக, பெரிய டாக்டர் வந்து சொல்லும் வரை, அனைவருக்கும் உயிரே அவர

வர்கைகளில் இல்லை. ஆனால், எந்த பிரச்சினையும் இன்றி ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

பிறகு வந்த நாட்களில் இயல்பாக இருந்தாலும், கண் கட்டுப் பிரிக்கும் வரை காத்திருக்கப் பொறுமையின்றி, மாறனின் மனம் தவிக்க ஆரம்பித்தது.

## 17

அன்று கண் கட்டு பிரிக்கப்படும் நாள்! வடிவும், யாழினியும் அருகிலிருந்த கோவிலுக்கு அர்ச்சனை செய்வதற்காக சென்றிருந்தனர்.

காலையில் டாக்டர் ரவுண்ட்ஸ் வரும்போது கட்டுப் பிரிப்பதாக கூறி இருந்தார்.

முதலில் அந்த அறை இருட்டாக இருக்கும்படிச் செய்துவிட்டு, அதிகமான வெளிச்சத்தை பார்க்க விடாமல், மெல்லிய இருட்டில் டாக்டர்கள் கண்கட்டை அவிழ்த்தனர்.

மெதுவாக கண் விழித்துப் பார்க்கும்படி டாக்டர்கள் கூறியவுடன், மாறன் மெதுவாகக் கண் விழித்தான்.

மெல்ல மெல்ல அவன் விழிகளுக்குள், எதிரிலிருந்த மெழுகுவர்த்தி வெளிச்சம் மெலிதாய் ஊடுருவியது. விழிகள் மனப் பேழைக்குள், ஒளிக் கற்றைகளை மெதுவாக அறிமுகம் செய்தன.

மாறனுக்கு, பார்வை என்ற வரம் பரிசாகக் கிடைத்துவிட, அவனுக்குள் மகிழ்ச்சி எனும் கடல் அலை புரண்டது.

வெளியே காத்திருந்த அனைவருமே ஒரு வித பதட்டத்துடன் இருந்தனர். ஒவ்வொருவரின் மனமும், மாறனுக்காக உருகிப் பிரார்த்தித்துக் கொண்டு இருந்தன.

யாழினி, ஒருவிதமான மோனநிலையில் உருகி நின்றாள். தேர்வில் பரீட்சை எழுதி, முடிவை எதிர்நோக்கும் மாணவர்களின் மனநிலையில் அனைவருமே இருந்தனர். எந்த முடிவு பதிலாக வந்தாலும், தன் முடிவில் உறுதியாக இருந்தாள் யாழினி!

தலைமை மருத்துவர், மகிழ்ச்சியுடன் வெளியே வந்து "மாறனுக்கு கண்பார்வை வந்து நல்லா இருக்கார்... ஆனா ஒவ்வொருத்தரா பாருங்க... அவரை உணர்ச்சி வசப்படுகிற மாதிரி எதுவும் செய்ய வேண்டாம்... மிஸ் யாழினியை முதலில் பாக்கணும்னு மாறன் சொல்றார்" என்றார்.

அனைவரும் மகிழ்வுடன் முன் வந்து அவரிடம் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து நன்றி கூறினர். ரத்தினவேலு, அவரின் கையைப் பிடித்துக் கொண்டு அழுது விட்டார்.

யாழினி அவரிடம் நன்றி கூறிவிட்டு, வேகமாக உள்ளே சென்றாள். மாறனைப் பார்த்ததும், அவளுடைய நெஞ்சின் பாரம் வெகுவாகக் குறைந்து, தன் தவம் மெய்ப்பட்டது புரிந்தது.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க, அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டாள் அவள்! விழிகளிலிருந்து அருவியாய் வழிந்த நீர், நெஞ்சப் பரப்பை நனைத்தது.

அவள், அந்த அறையில் நுழைந்ததில் இருந்து, அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த மாறன், அவள் புறம் தன் ஒரு கையை நீட்டி, அவளைத் தன் அருகே வரச் சொன்னான்.

அவன் கண்கள் அவளை மீட்டின. தன்னுடைய துயர நிமிடங்களில், ஆறுதல் சொல்லிய தேவதையை, தன் வானத்தை விடிய வைத்தவளை, ஆவலுடன் நோக்கினான் மாறன்.

மெதுவாகத் தன் பாதங்களை பூமியில் பதித்து, நாணத்தில் முகம் சிவந்து, கன்னங்களில் செம்மை படர, கவிதையாய் வந்து, அவன் கைகளுக்குள் பூஞ்சிறகாய் அடங்கினாள் யாழினி!

அவனை சங்கடப்படுத்தாமல், மென்மையாக அணைத்து, தன் மனதில் பொங்கிய மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தினாள்.

மாறன் அவளையே காதலுடன் நோக்கினான்! அவன் மனம் நிர்மலமானது. கவலைக் குப்பைகளை மனம் கலைந்து, மகிழ்ச்சிப் பூக்களை மனக்குடலையில் நிரப்பியது... மனம் பூவாய் மலர்ந்து வாசம் வீசியது!

கதவைத் தட்டிவிட்டு, எல்லோரும் ஆவலுடன் உள்ளே வந்தார்கள். எல்லோரும் கண்களில் ஆனந்தக் கண்ணீருடன், மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர்.

யாழினி, மாறனிடமிருந்து விலகி அமர்ந்தாள். ஆனால் இறுகப் பிடித்திருந்த அவன் கையை மட்டும், அவன் விடவே இல்லை.

தோளில் உரிமையுடன் அமர்ந்து கண்ணாமூச்சி ஆடவிட்டுச் செல்லும் பல நிற வண்ணத்துப் பூச்சியின் சிறகில் அமர்ந்து அந்த நொடியே அவனுடன் ஊர்வலம் போக வேண்டும்போல் இருந்தது.

பத்து நாட்கள் கழித்து, அனைவரும் ஊருக்குக் கிளம்பினார்கள். ரெயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்து, பிறகு அங்கிருந்து காரில் கிராமத்திற்குச் சென்றனர்.

மாறனை வரவேற்க, கிராமமே அவர்கள் வீட்டு வாசலில் கூடி நின்றது! அவனைப் பார்த்ததும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவர்கள், அவனை அன்புடன் நலம் விசாரித்துவிட்டு, ஒய்வெடுக்கச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

குமரனின் அம்மா, ஆரத்தி எடுத்து மாறனை வரவேற்றார். அவனை மேலும் இரு மாதங்கள் ஓய்வெடுக்கச் சொல்லி இருந்தார் மருத்துவர். மூன்று மாதங்கள் கழித்து வருவது போல் அவர்களின் திருமணத் தேதி முடிவு செய்யப்பட்டது.

யாழினி, பெரும்பாலும் மங்கையுடனேயே இருந்தாள். மாறனைப் பார்த்தாலே, ஏதோபுதுவித வெட்கம் வந்து, மனதிற்கு சிறகு முளைத்து படபடத்தது.

தாத்தாவும், எப்போதும் மாறனுடனேயே இருந்தார். வடிவும் துணையாக அவன் கூடவே, தேவைகளை கவனித்துக் கொண்டு, அவனை அதிகம் கஷ்டப்பட விடுவதில்லை.

தொழிலையும் மற்றவர்களே கவனித்துக் கொண்டனர். மாறனுக்குத் தான் மிகவும் ஏக்கமாக இருந்தது. யாழினி, முன் போல் அவன் அருகில் இருப்பதில்லை.

இப்போது அவன், அவனிடம் அதிகமாகப் பேசுவது கூட இல்லை! அவன் சோர்ந்திருந்த நிமிடங்களில், அவனை ஆறுதல் படுத்த அவள் பேசியதில், ஒரு பங்குகூட இப்போதெல்லாம் பேசுவதில்லை. மவுன மொழியாய், விழிகளின் வழியாக மட்டுமே, அவளுடைய அன்பு வெளிப்பட்டது.

யாழினியைப் பற்றி சிந்திக்கும் போதெல்லாம் அவனுக்குள் புதிதாய் "தக்க... தக்க..." என்று ஒரு குயிலின் கீதம் கேட்க ஆரம்பித்திருந்தது.

தான் மனதினுள் சேமித்து வைத்திருக்கும் காதல் வெள்ளத்தின் கரையில், அவள் மட்டுமே நிற்பது புரிந்தாலும், அருகில் வராமல் அக்கரையில் நின்றவளின் மேல், செல்லக் கோபம் கொண்டு சிணுங்கியது உள்ளம்.

## 18

பெரியவர்கள் பேசி முடித்தபடி மூன்று மாதங்கள் கழித்து, திருமணத் தேதியும் நெருங்கி வந்தது.

திருமணத்திற்கு ஒரு வாரம் முன்பே, வளவனுடைய வீட்டிற்கு, யாழினியை அழைத்துச் சென்று விட்டனர்.

திருமணத்திற்கு முதல் நாள் வடிவுக்கரசியும், முத்துவேலுவும் ஒரு நகைப்பெட்டியை எடுத்து வந்து, யாழினியிடம் அளித்தனர்.

உள்ளே சிவப்புக் கெம்புக் கல் பதித்த பழைய நகைகளும், இப்போதைய நாகரீகத்துக்கு ஏற்றதுபோல் புதிதாய் செய்யப்பட்ட நகைகளும் கண்ணைப் பறித்தன.

இருவரையும் நமஸ்கரித்துவிட்டு, அவற்றைப் பெற்றுக் கொண்டாள் யாழினி.

திருமணத்தன்று வளவனுடைய அண்ணியும், உறவுப் பெண்களும் சேர்ந்து யாழினியை அலங்கரித்தனர்.

புதிய புடவையுடன் கயல்விழியின் தலை நகை, நெக்லஸ், பதக்க மாலை, ஒட்டியாணம், வங்கி எல்லாம் அணிந்து, தேரில் வரும் உற்சவத்துச் சிலை போலிருந்தாள் அவள்.

நகரத்திலேயே பெரிய திருமண மண்டபத்தில் திருமண ஏற்பாடுகள் நடக்க, எல்லோரையும் வரவேற்று கவனிக்கும் பொறுப்பை வளவனும் அவனது உறவினர்களும் ஏற்றுக் கொண்டனர்.

பட்டு வேஷ்டி சட்டையில் மாறன் கம்பீரமாக நடந்து வந்து மேடையில் அமர்ந்து கொண்

### சர்க்கரை நோய்க்கு ஆரைக்கீரை!

ஆரைக்கீரைக்கு நீராரை, நீர் ஆவாரை என்ற பெயர்களும் உண்டு. இந்த கீரை உடல்வெப்பத்தை தணித்து உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். களைப்பை நீக்கி சுறுசுறுப்பை தரும். பித்தம் தொடர்பான எல்லா பிரச்சினைகளையும் போக்கும். ஆரைக்கீரையை தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு எனப்படும் சர்க்கரை நோய் மற்றும் நீர்ப்போக்கு போன்றவை கட்டுப்படும்.

குழந்தைகளின் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் இந்த கீரை பெண்களின் கர்ப்பகால நோய்களையும் குணப்படுத்தும். உடலுக்கு வலுவும், உள்ளத்திற்கு அமைதியும் தரும் இந்த கீரையை உணவில் அளவோடு சேர்த்துக் கொள்வது நல்லது.

டான்.

குமரனின் பார்வை, பூரணியையே சுற்றிக் கொண்டிருந்தது. மாறனின் கண்கள் யாழினியைத் தேடி அலை பாய்ந்தன.

அந்தக் கூட்டத்திற்கு நடுவே, தன் இதயப் பாரிஜாத மலரைத் தேடித் தவித்த தன் மனதின் ஏக்கத்தையும், படபடப்பையும் மாறனாலேயே நம்ப முடியவில்லை.

அவள் வரும் பாதையை எதிர்நோக்கி அவன் விழிகள் தவமிருக்க, ஒரு தேவதை போல் வந்து மேடையில் அமர்ந்தாள் யாழினி.

அவன் விழிகள் இமைக்காமல் அவளையே அளவெடுக்க, தன் பார்வைத் தீக்குச்சிகளால் அவளை உரசி, அவளைத் தகிக்கச் செய்து கொண்டிருந்தான் மாறன்.

அன்றைய விடியலில், உறவினர்கள், நண்பர்கள் புடை சூழ, மாறனின் கைத் தலம் பற்றினாள் யாழினி.

குடும்பத்தினர் அனைவரும் மிகவும் மகிழ்ந்திருந்த அந்த வேளையில் அனைவருக்கும் கேலியும் கிண்டலுமாகப் பொழுது போனது.

இப்போது கயல்விழி இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாரென்ற எண்ணம் அனைவருக்குமே இருந்தது.

எல்லா நிகழ்ச்சிகளிலும், பெண் வீட்டின் சார்பில் வேணுகோபாலின் குடும்பமும், வளவனின் குடும்பமும், ரத்தினமும் மகிழ்ச்சியுடன் பங்கேற்றனர்.

அன்று முழுவதும் கிடைத்த தனிமையில் அவளை சீண்டிக்கொண்டே இருந்தான் மாறன். மாலைகளின் மறைவிலும், திருமண சடங்குகளின் போதும், அவளுடைய கை பிடித்து அக்னியை வலம் வரும்போதும், அவளைத் தீண்டித் தீண்டி, தன் நிலை இழக்கச் செய்து கொண்டு இருந்தான் அவன்.

அந்தத் திருமணத்தில், இரு மனங்களின் சங்கமிப்பு இனிதாய் தெரிந்தது. மங்கையும், வளவனும், குமரனும் அன்று முழுவதும் அவர்களை, கிண்டல் செய்து கொண்டே இருந்தனர்.

வடிவின் குடும்பத்தினர் அனைவருமே மகிழ்ச்சியுடன் அந்தத் திருமணத்தில் கலந்து கொள்ள, சிந்தாமணியும் தன் கணவருடன் வந்திருந்தார்.

இரு குடும்பங்களையும் இணைத்த யாழி

## இரும்புச்சத்து நிறைந்த கரிசலாங்கண்ணி!

'கரிப்பான்', 'கையாந்தகரை' என்றும் அழைக்கப்படும் கரிசலாங்கண்ணியில் இரும்புச்சத்து நிறைந்து உள்ளது. இது ரத்தசோகை, காமாலை, வீக்கம், மூலம் ஆகியவற்றை குணப்படுத்தும்.

குடல்புண், வறட்டு இருமல், கண் நோய்கள், பல் நோய் ஆகியவற்றுக்கும் கரிசலாங்கண்ணி நல்ல மருந்து ஆகும்.

## கல்வீரல் நோயை குணப்படுத்தும் பருப்புக்கீரை!



பருப்புக்கீரை கல்லீரல் நோயை குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது. வெட்டை நோய், சிறுநீரக நோய்கள் மற்றும் தோல் வியாதிகளையும் குணப்படுத்தும். இந்த கீரை குளிர்ச்சியைத் தரும் என்பதால் எண்ணெய் தேய்த்து குளித்த அன்று சாப்பிடக் கூடாது.

ஆரம்பகால மனநோய்க்கும் கரிசலாங்கண்ணி மருந்தாக பயன்படுகிறது.



னியுடைய முயற்சி மனதில் ஆழமாகப் பதிந்துவிடப் பெருமிதத்துடன் வடிவின் அப்பா, யாழினிக்கு ஒரு பதக்க மாலையைப் பரிசளித்தார்.

அன்றிரவு, அழகிய வெண்பட்டு அணிந்து, முதலிரவு அறைக்குள் அப்சரஸ் போல் நுழைந்த யாழினியை எதிர்பார்த்து, தவிப்புடன் காத்திருந்தான் மாறன்!

ஓசையின்றி அவன் இதயத்துக்குள் மவுன சங்கீதமாய் நுழைந்தவள், இன்றுதான் அவன் அறைக்குள் மனைவியென்ற உரிமையுடன் நுழைகிறாள்.

பெண்மைக்குரிய பாதுகாப்புச் சட்டமாகிய மெட்டி அணிந்து, மென்மையான பாத சப்தத்துடன் அருகில் வந்து நின்று, காலில் விழுந்து நமஸ்கரித்தாள் யாழினி!

அவளை, அப்படியே எடுத்து தன் பக்கத்தில் அமர்த்தி அவன் மடியில் தன் தலை சாய்த்த போது, வெட்கத்தில் யாழினியின் கன்னங்கள் சிவந்து, இதழ்கள் துடித்தன.

அவன் மனம், அதை விடவும் அதிகமாக அலை பாய்ந்து தடதடத்தது! இதமாக அவன் தலைமுடியைக் கோதியவளின் விழிகளிலும், நாணத்தின் முகவரி!

அவளையே ஊடுருவிய மாறன் ''ஏன் என்னை இந்த ரெண்டு மாசமா, இப்படி தவிக்க விட்டே யாழினி? எனக்கு உன் மேல் ரொம்பக் கோபம் தெரியுமா? எவ்வளவு தூரம் என்னை முதல்லே கவனிச்சிக்கிட்டியோ, அப்புறம் அவ்வளவு விலகிப் போனே... என்னாலே அதை தாங்கவே முடியலை. பேசாம கண் தெரியாமலே இருந்திருக்கலாம்னு தோணுச்சு! உனக்கு சரியான பனிஷ்மெண்ட் இருக்கு இன்னிக்கு!'' என்று கூறி அவளுடைய மூக்கைப் பிடித்து செல்லமாகத் திருகினான்.

''மாறன்! அதான் அத்தையும், தாத்தாவும் உங்க கூடவே இருந்தாங்களே? சீஃப் டாக்டர்தான், நீங்க உணர்ச்சிவசப்படாம இருந்தா நல்லதுன்னு சொன்னார். நான் எந்த ஸ்டிரெய்னும், உங்களுக்கு தரக்கூடாதுன்னும் சொன்னார்.... அதனாலதான், இந்த மூணு மாசமும், நான் உங்களை விட்டு விலகியே இருந்தேன்.

நான் பக்கத்துல வந்தாலே, நீங்க உணர்ச்சிவசப்பட்டிருப்பீங்க! நானும் உங்க நிலைமைய மறந்து, பரிதவிக்க ஆரம்பிச்சிருப்பேன்...! அதான்! இப்பதான் நாம ஒண்ணா சேர்ந்துட்டோமே! காத்திருக்கிறதிலே ஒரு சுகம் இருக்கு தெரியுமா?'' என்றாள் யாழினி குறும்புடன், கிசுகிசுப்பான குரலில்!

காதலின் நுழைவாயிலாய் கண்கள் விரிந்து படபடக்க, அவள் பார்வை அவனுள் ஆயிரம் மலரம்புகளைச் செலுத்தியது.

அவளுக்குள் ஊடுருவிய அவன் விழிகளின் ஒளி.... பெரும் வரமாய்!

''ம்.... நீ சொல்லுவே! எனக்குத்தானே அந்த வேதனை தெரியும்! யுகம் யுகமா காத்திருந்த மாதிரித் தவிப்பா இருக்கு... இனிமே என்னால ஒரு நொடி கூடக் காத்திருக்க முடியாது!'' என்று கூறிவிட்டு, அவளைத் தன் வசமாக்கிக் கொண்டான்.

கோபத்தில் சுடும் சூரியனாய் இருந்த அவன், கொஞ்சும்போது குளிர் நிலவாய் மாறினான். இரவின் அமைதியில், சங்கீதமாய் சிணுங்கும் சப்த சந்தமாய், வளையல் சப்தம் மட்டுமே அங்கு ஒலித்தது.

அவன் விழிகளுக்கு பார்வை எனும் வரமாய் வந்த அவள், இன்று அவன் வாழ்க்கைக்குப் புது அர்த்தம் தந்து விட்டாள்.

(முற்றும்)